Registered as a News Paper

பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் -15 | வெள்ளி - 09 | 23 - 30 - ஏப்பிரல் - 2004



## கிளிநொச்சியில் தேசியத்தலைவருடன் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள்



## மீண்டும் ரத்தவதை...?

## தீராத குழப்பம்

# ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி 23 . 04 . 2004

மின் அஞ்சல : weekly @ eezhanatham.com


# சந்திரிகாவின் சூழ்ச்சி!

தமிழில் ஒரு முதுமொழி உண்டு. அதாவது உருட்டும் பிரட்டும் சிரட்டையும் கையும் என்பதேயாகும்.

இந்த முதுமொழி சனாதிபதி சந்திரிகா அம்மையாருக்கு இப்போது மிகவும் பொருந்தும்

ஏனென்றால் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க வடக்கு-கிழக்குப்பகுதிகளில் இடம்பெயர்ந்தவர்கள்தொடர்பான சகல நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்கும் அதிகாரசபை ஒன்றை நிறுவுமாறு பணித்துள்ளார்.

இதன் மூலம் போர் அனர்த்தங்களால் இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடிமர்த்தி, புனர்வாழ்வுத்திட்டங்களை அமுல் செய்யக்கூடிய அதிகாரங்களைக்கொண்டதாகவும், புனர்வாழ்வு அபிவிருத்தி செயற்பாடுகளோடு சம்பந்தப்பட்ட நிறுவனங்களை ஒருங்கிணைக்கக்கூடிய வகையிலும் இந்த அதிகார சபை அமையவேண்டுமென சனாதிபதி சந்திரிகா பணித்திருப்பதாக சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் சனாதிபதி சந்திரிகா புலிகள் இயக்கத்தினுடனான சமாதான முயற்சியில் பல இடர்களை ஏற்படுத்தும் வகையில் செயற்படத் தொடங்கிவிட்டார் என்பது புலனாகின்றது.

ஏனென்றால் புலிகள் இயக்கம் ஏற்கனவே சிறிலங்கா அரசிடம் சமர்ப்பித்திருக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபில் சந்திரிகா நிறுவ முயலும் அதிகார சபைக்குள் உள்ளடக்கமுயலும் விடயங்களும் இதற்கு அப்பால் தமிழ் மக்களின் சமூக, பொருளாதார அரசியல் வாழ்வாதாரங்களில் முக்கிய பங்கு வகிக்கக்கூடிய உள்ளடக்கங்களை விரிவாகவும் அதேநேரம்அத்தியவசியமானதுமான பல விடயங்களை விரிக ஒன்றை உள்ளடக்கி சமர்ப்பித்திருக்கின்றனர்.

இதனைக்குழப்பும் நோக்குடனோ அல்லது புலிகளின் தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டங்களிலிருந்து சில அம்சங்களைப்பிடுங்கி தன்னையொருவடகிழக்கு மக்களின் இரட்சிநியாகக்காட்டும் நயவஞ்சக சூழ்ச்சியாகவே இந்த அதிகார சபை அறிவித்தலை சனாதிபதி சந்திரிகா விடுத்திருக்கின்றார். ஏற்கனவே நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் அமோக வெற்றியினை வழங்கி தமது அரசியல் அபிலாசையை வெளிப்படுத்தியுள்ளதையும் புறந்தள்ளிவிட்டு தமிழ் மக்களை சீண்டும் வகையில் அவர்களால் நிராகரிக்கப்பட்ட ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தாவை தனது அமைச்சராக நியமித்துள்ளார். இதன் மூலம் சனாதிபதி சந்திரிகா போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைக்காட்டி தனது அரசுக்கான நிதியினை உதவி வழங்கும் நாடுகளிடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கான சூழ்ச்சியுமாகவே இதனைப்பயன்படுத்த முனைகிறார். இதுவே சந்திரிகாவின் இந்த அறிவிப்பின் பின்னணியாகும்.

சந்திரிகாவின் இந்த நடவடிக்கையானது. எதிர்வரும் காலங்களில் நடைபெறக்கூடிய சமாதான முன் நகர்வுகளுக்கான பாதைகளில் ஏற்படும் தடைகளாகவே அமையும்.

அத்தோடு சந்திரிகா சர்வதேச சமூகத்திற்கு சமாதான முயற்சிகள் விரைவில் அரம்பிக்கப்படும் என அளித்திருக்கும் வாக்குறுதிகள் தொடர்பாகக் கூட பலத்த சந்தேகங்களையே தோற்றுவிக்கிறது.

இந்த நிலையில் சனாதிபதி சந்திரிகா புலிகள் இயக்கம் தற்போது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வினை எட்ட உண்மையுடன் உழைத்துக் கொண்டிருப்பதை புரிந்து கொண்டு தனது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பட்சத்தில் மாத்திரமே இலங்கையில் உண்மையான சமாதானம் தோன்றுவதற்கு வாய்ப்புகள் உண்டு.

பதிலாக சந்திரிகா தனது அரசாங்க நிதிக்காகவும், தனது வழமையான அரசியல் நயவஞ்சகமாகவும் இதனை பயன்படுத்த முனைவாராக இருந்தாள் அவருக்கு வரலாற்றில் மீண்டும் ஒரு தோல்வி காத்திருக்கிறது என்பதை துணிந்து கூறலாம்.

சந்திரிக்காவின் இந்த செயற்பாட்டை சர்வதேச சமூகம் நன்குபுரிந்து கொள்ளும் என்றே தமிழ் மக்கள் நம்புகிறார்கள்.

## தூரனின் பார்வை

# மீண்டும் நெருப்பாற்றை நீந்திக் கடந்த புலிகளும் தாங்கள் நெருப்பென நிரூபித்த தமிழ் மக்களும்

இது தமிழீழவிடுதலைப் புலிகளுக்கும், ஈழத்தமிழ் மக்களுக்கும் நம்பிக்கையூட்டும் வெற்றிகரமான காலமாகும்.

கிட்டத்தட்ட இரு மாதங்களிறகு முன்னர் கருணா என்ற பெயரில் பிரல்யமான - மதிப்புக்குரிய ஒருவராக விளங்கிய நபர், விநாயகமூர்த்தி முரளிதரன் என எவராலும் அறியப்படாத சாதாரண நபராக - அதுவும் மிக மோசமான கோழையாக- தன்னை நம்பியவர்களை அடர்காட்டில் கைவிட்டு, கிடைத்ததை வாரிச் சுருட்டிக் கொண்டு தனது நம்பிக்கைக்குரியவர்களை மட்டும் கூட்டிக் கொண்டு தலைமறைவாகிப் போன சம்பவம் நடந்து முடிந்துள்ளது.

இந்தக் கருணாவின் கதை தெரியாத கதையல்ல,

விடுதலைப்போராளியாக எழுச்சி கொண்டு, தளபதியாக உயர்ந்து தேசியத் தலைவரின் நம்பிக்கைக்குரியவராகி, மக்களால் நேசிக்கப்படும் ஒருவராக மிளிர்ந்து பின் தீய சக்திகளின் கைப்பாவையாகி, சுயநலச் சிந்தனையின் பாற்பட்டு, பிரதேசவாதம்பேசும் குறுகிய துரோகத்தனமான நடவடிக்கைகளல் தமிழ் தேசிய இனத்தின் தனித்துவ வலுவை சிதைத்து எதிரியுடன் இணைந்து செயற்படப் பேரம்பேசும் அளவிற்கு கீழ்த் தரமான மனிதனாக வீழ்ச்சிகண்ட கருணா சொந்த மண்ணிலிருந்தே தலைதப்பியது தம்பிரான் புண்ணியம் என்று தலைதெறிக்க ஓடும்மளவிற்கு அவமானத்தை சுமக்க நேரிட் டது அவரைப் போன்ற துரோகச் சிந்தனை கொண்டோருக்கு ஒரு வரலாற்றுப்பாடமே யாகும்.

கருணா விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்த சென்று தனித்தியங்கப் போவதாக அறிவித்ததுடன், விடுதலைப்•புலிகளின் கதை இத்துடன் முடிந்ததென மகிழ்ந்த பேரினவாத, தமிழின விரோத சக்திகளும், தமிழ்மக்களின் விடுதலைப்போராட்டத்தை எப்படியாவது நசுக்கிவிடவேண்டுமென்பதில் ஆர்வநோக்குடன் செயற்பட்டு வந்த அந்நிய - அயலக - மேலாதிக்க, சக்திகளும் அவருக்குவக் காலத்து வாங்கி, அவரது துரோகத்தனத்தை நியாயப்படுத்தி, அவரின் செயற்பாடுகளுக்கு நற்சான்றிதழ்களும் வழங்கியதன்மூலம் கருணா தன்னை ஒரு பலமான கிழக்கிலங்கையின் தனித்துவத் தமிழ்தலைமை என்று தவறாக தனக்குத்தானே கற்பிதம் செய்து கொள்ள வேண்டிய பலவீனமான நிலைக்கே தள்ளவைக்கின்றது என அவர் உணர்ந்து கொள்ளமுடியாது போனமை அவரது துரதிஷ்டமேயாகும்.

அதுவே அவரது தோல்விக்கும் காரணமாகிவிட்டது.

அவரது தோல்வி அவரைவைத்து தமிழ்மக்களின் அரசியல் எதிர்காலத்தை தீமானிக்கத் திட்டமிட்ட உள்ளூர் மற்றும் வெளியூர் மேலாதிக்க சக்திகளின் தோல்வியானதுடன், தமிழ்மக்களிடையே பிரதேசவாத உணர்வைக் கிளறி, இன ஒருமைப்பாட்டை உடைக்க முயலும் அல்லது திட்டமிடும் நாசகார சக்திகள் அனைத் தினதும் தோல்வியுமாகிவிட்டது.

இன்றைய நிலையில் - அதுவும் தமிழ் மக்களின் விவகாரம் சர்வதேசமட்டத்தில் பேசப்படும் முக்கிய விடயங்களில் ஒன்றாக வளர்ச்சிகண்டுள்ள நிலையில் - வடக்கையும் கிழக்கையும் பிரதேச வாத கோட்பாடுகளைத் தூண்டுவதன்மூலம் இருகூறாகப்பிரியவைத்து, அதன்மூலம் பலதசாப்தகால விடுதலைப் போராட்டத்தை வலுவிழக்கச் செய்து முற்றாகவே அழிக்க, பௌத்த சிங்கள பேரினவாதம் பிரித்தாளும் தந்திரோபாய உத்தி களைக் கையாண்டு வரும் சூழலில் கருணா முன் வைத்த உணர்ச்சிவசமான அரசியல் விடயமான பிரதேசவாதம் கிழக்குப் பகுதி மக்களாலேயே தோற்கடிக்கப்பட்டமையானது வரலாற்று முக்கியத்துவம்வாந்த விடயமாகும். அது மட்டுமல்ல, தமிழீழ விடுதலைப்புலிகள் இது வரைகாலமும் வலியுறுத்தி போராடிவந்த வடக்குக்கிழக்கு இணைந்த தமிழ் மக்களின் மரபுவழி தாயகக் கோட்பாட்டை கிழக்குப்பகுதி மக்கள் முற்றாக அங்கீகரித்துள்ளார்கள் என்ற செய்தியையும் இது உலக சமூகத்திற்கு உறுதிபட தெரிவிப்பதாகவும் அமைந்துள்ளது.

ஆக ஒரு காலத்தைய பிரதேசவாத சிந்தனையின் பாற்பட்ட அரசியல் நகர்வுகள் தமிழர் வாழ்விடப்பகுதிகளில் இனிமேல் சாத்தியமற்ற விடயம் என்ற உண்மையானது கருணாவின் வீழ்ச்சியின் பின்னால் தெட்டத் தெழிவாக உணர்த்தப்பட்டுள்ளமையானது எதிர்கால சமாதானப் பேச்சுக்களின் போது (பேச்சுக்கள் தொடரும் பட்சத்தில்) விடுதலைப் புலிகளின் தலைமையிலான தமிழர் தரப்பின ருக்கு அதீத வலுவை அளிக்கப் போகிறது என்பது தமிழின விரோத - பேரினவாத சக்திக ளுக்கு பேரிடியைத் தந்துள்ளது என்றால் மிகையில்லை.

தோற்கடிக்கப்பட்டது கருணா மட்டுமல்ல பிரதேச வாதமும்தான்.

அடுத்தது நடந்து முடிந்த பதின் மூன்றாவது பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் தமிழீழ மக்கள் தமிழரசுக்கட்சி விடுதலைப்புலிகளின் ஆதரவுடன் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு ஈட்டிக் கொடுத்துள்ள மாபெரும் வெற்றி பற்றிய விடயமாகும்.

பதினெட்டு வருடகாலமாக தேர்தல்கள் மீதான நம்பிக்கையை முற்றாக இழந்த நிலையிலும், பாராளுமன்ற அரசியலை நிராகரிக்கும் மனோபாவத்துடனும் வாக்கழிக்கும் உரிமையை பயன்படுத்தாது வந்த தமிழ்மக்கள் இந்தத்தேர்தலில் ஓர் இலட்சிய இலக்குடன் தேர்தலில் தமது வாக்குப் பலத்தின் ஆற்றலை வெளிப்படுத்தியதன் மூலம் தமிழ்த் தேசியத்தின் ஒருமைப்பாட்டுணர்வை உறுதியாக பிரகடனம் செய்துள்ளார்கள் என்றே கூறவேண்டும்.

ஒட்டுமொத்தமாக 22 பாராளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்ப தமது வாக்குரிமையை பயன்படுத்திய தமிழீழ மக்கள் இதன்மூலம் மற்றொரு செய்தியையும் உலகிற்கு ஓங்கி அறிவித்துள்ளார்கள் என்றே கூறவேண்டும்

அதாவது தங்களின் ஏகப்பிரதிநிகள் விடுதலைப்புலிகள் தான் என்ற செய்தியை தமிழ் மக்கள் இத்தேர்தலின் மூலம் உணர்த்தியுள்ளதுடன் தமிழீழத் தேசியத் தலைமையின் கீழ் தாம் அணிதிரண்டுள்ளதையும் வெளிப்படுத்தயுள்ளனர்.

இங்கே வெல்லப்பட்டது பாராளுமன்ற ஆசனங்கள் மட்டுமல்ல... தமிழ்மக்களின் ஏகோபித்த ஆதரவும்தான்.

இதுவும் இப்போது வரலாற்று அவசியத் தேவையாகவே உள்ளது.


பிரதேச வாதம் தோற்கடிக்கப் பட்டதும், தமிழ்த் தேசியவாதம் வெற்றி பெற்றதும் ஏக காலத்தில் அடுத்தடுத்து நிகழ்ந்த சம்பவங்களாகியிருப்பதே இங்கு முக்கியமாக கவனத்தில் கொள்ளவேண்டிய விடயமாகும் எது தேவையோ அது கிடைத்துள்ளது. எது அவசியமோ அது உணர்த்தப் பட்டுள்ளது. எது முக்கியமோ அது உலகிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவே இது தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஒரு சோதனைக்காலமாக இருந்தாலும் கூட, சோதனைகளின் மத்தியில் சாதனைகளைப் புரியும் காலமாகவும் இருக்கிறது.

அது போலவே விடுதலைப் புலிகளின் விடயத்திலும் சோதனைகளை வென்று காட்டும் சாதனைக்காலமாகவே இது உள்ளது.

அவர்கள் நெருப்பாற்றை நீந்திக் கடக்கும் ஆற்றலுள்ளவர்கள் தாம் என்பதை மீண்டும ஒரு தடவை நிரூபித் துள்ளார்கள்....


அதுவும் தமிழீழ மக்களின் முழுமையான ஆதரவுடன் ......


ஆமாம் மக்கள்தான் புலிகள்... புலிகள் தான் மக்கள் என்ற உன்மை பேரின வாதிகளும், சர்வதேச சமூகமும் புரிந்து கொள்வதற்கான பகிரங்கமானதும் தெளிவானதுமான வாய்ப்பாக கருணாவின் தோல்வியும், தமிழ் தேசியத்தின் பெரு வெற்றியும் அமைந்துள்ளது என்றால் அது மிகையில்லை.











# சந்திரிகாவை யுத்தத்தை நோக்கித் தள்ள முயல்கிறார் ரணில்

இலங்கைத்தீவில் இப்பொழுது யுத்தத்தை விரும்பி வரவேற்கும் ஒரு தலைவர் யாராக இருக்குமென்றால் அது நிச்சயமாக ரணில் விக்கிரமசிங்கதான்.

சந்திரிகா சமாதானம் செய்யப் புறப்பட்டால் தன்னுடைய நிலை மிக மோசமாகிவிடும் என்று ரணில் அஞ்சுவது தெரிகிறது. எதுவிதத்திலாவது சந்திரிகாவை யுத்தத்தைநோக்கித் தள்ளிவிடுவதே இப்பொழுது ரணிலின் பிரதான உத்தியாய் இருக்கிறது.

சிலசமயம் சந்திரிகா மெய்யாகவே சமாதானம். செய்வாராக இருந்தால் அவர் அதன் மூலம் தன்னுடைய தேர்தல் வாக்குறுதிகளை ஓரளவுக்கேனும் நிறைவேற்றக்கூடியவிதத்தில் நிதியுதவிகளைப் பெற்று தன்னைப் பலப்படுத்திவிடுவார். எனவே அவர் சமாதானம் செய்யத் தொடங்குமுன்பே ரணில் அவரைச் சுற்றிவளைக்கும் வேலைகளைச் செய்யத் தொடங்கிவிட்டார்.

சந்திரிகா சிறுபான்மை இனக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தோ அல்லது அவற்றின் ஆதரவைப் பெற்றோ தனது ஆட்சியைப் பலப்படுத்துவாராய் இருந்தால் அவர் சமாதானத்தின் வழியில் இருந்து விலகிச்செல்வது கடினம்.

மாறாக, அவர் தீவிர மதவாதக் கட்சியான ஹெல உறுமயவில் தங்கியிருக்கும் ஒருநிலை வந்தால் அவரால் நிம்மதியாகச் சமாதானம் செய்யமுடியாது.

எனவே சிறுபான்மையினக் கட்சிகளான இ.தொ.க.வும் முஸ்லிம் காங்கிரசும் சந்திரிகாவின் பக்கம் போய்விடாத படிக்கு முன்னெச்சரிக்கையோடு நீண்டகால நோக்கில் ரணில் சில விட்டுக் கொடுப்புகளைச் செய்திருக்கிறார்.

இதன்படி தேசியப்பட்டியல் உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் விசயத்தில் அவர் இ.தொ.க.வுக்கும், மு.கா.விற்கும் அவர்கள் திருப்திப்படும் விதத்தில் முடிவுகளை எடுத்திருக்கிறார்.

இதற்காக தனது கட்சிக்குள்ளேயே டிரோன் பெர்ணாண்டோ, திலக்மாரப்பன போன்ற மூத்த உறுப்பினர்களைக் கூட கைவிட அவர் தயாராய் இருந்திருக்கிறார். இப்பொழுது டிரோன் பெர்ணாண்டோ தனது அதிருப்தியையும் ஆத்திரத்தையும் பகிரங்கமாக வெளிப்படுத்தும் ஒரு நிலை காணப்படுகிறது. ஆனால் ரணில் இதையெல்லாம் மீறி ஆறுமுகம் தொண்டமானையும் ரவூப் ஹக்கீமையும் தன்வசப்படுத்துவதில்தான் அதிகம் அக்கறையாகக் காணப்படுகிறார்.

குறிப்பாக ஆறுமுகம் தொண்டமானின் விசயத்தில் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்கள் ரணிலுக்கு ஒரு பிடியாய் இருக்கின்றன. யு.என்.பி.யுடன் கூட்டுச்சேர்ந்தே இ.தொ.க. இம்முறை வெற்றிகளைப் பெற்றது. இந்த வெற்றிகளை மாகாண சபைத்தேர்தலின் போதும் பாதுகாப்பதென்றால் இக்கூட்டை உடைக்கக்கூடாது. எனவே இது காரணமாகவும் ஆறுமுகம் தொண்டமான் ரணிலை விட்டுப் போக முடியாதிருக்கிறது.

இப்படி தொண்டமானையும், ரவூப் ஹக்கிமையும் தன்னை விட்டுப்போய் விடாதபடி பார்த்துக்கொள்வதன் மூலம் அதாவது அவர்கள் சந்திரிகாவின் பக்கம் போய்விடாதபடி பார்த்துக்கொள்வதன் மூலம் சந்திரிகா இனி ஹெல உறுமயவின் ஆதரவைப் பெற்றால்தான் தன்னைப் பலப்படுத்தலாம் எனும் ஒரு நிலையை ரணில் உருவாக்கியிருக்கிறார். இதுவிசயத்தில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு சந்திரிகாவுடன் இணங்கிப் போகும் வாய்ப்புக்கள் மிகக் குறைவு என்றும் ரணில் நம்புவது போலத் தெரிகிறது.

எனவே ஹெல உறுமயவின் ஆதரவைப் பெற்றால் சந்திரிகா யுத்தத்தை நோக்கித்தான் செல்லவேண்டியிருக்கும். அது தான் ரணிலின் விருப்பமும் கூட. சந்திரிகாவை எப்படியாவது யுத்தத்தை நோக்கித் தள்ளிவிட வேண்டும். இல்லையென்றால் ரணிலின் எதிர்காலம் கேள்விக்குள்ளாகிவிடும்.

நடந்து முடிந்த தேர்தலில் தோல்வியுற்றது யு.என்.பி. மட்டுமல்ல. ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவமும் தான்.

அண்மையில் ரொய்ட்ரர் செய்தியாளர்களுடன் ரணில் கதைத்துக் கொண்டிருந்தபோது அவர்கள் கேட்டார்களாம் தேர்தலில் உங்களுடைய வெற்றிவாய்ப்புகளை இழந்துவிட்டீர்களே என்று. அதற்கு ரணில் சொன்னாராம்.... நான் இழந்தது வெற்றிவாய்ப்பை

**நிலாந்தன்**

மட்டும்தான் ஆனால் சனாதிபதியோ தன்னுடைய கட்சியையே இழந்துவிட்டார் என்று.

மெய்தான் மிகச் சரியான ஒரு கணிப்பு. ஆனால் சந்திரிகாவின் வெற்றிபற்றிச் சரியாகக் கணித்துவைத்திருக்கும் ரணில் தன்னுடைய தோல்வியை எப்படி விளங்கி வைத்திருக்கிறார்?

கடந்த இரண்டாண்டுகளில் அவர் தன்னுடைய தலைமைத்துவத்தை சர்வதேச அளவில் ஸ்தாபித்த அளவுக்கு கட்சிக்குள்ளும் நாட்டினுள்ளும் ஸ்தாபிக்கத் தவறிவிட்டார் என்பதே சரி.

தன்னை மேற்குலகின் செல்லப் பிள்ளையாகக் காட்டி அதன் மூலம் மேற்கு நாடுகளின் தலைநகரங்களில் தன்னை ஸ்தாபித்த அளவுக்கு அவர் தன்னை புதுடில்லியிலோ அல்லது கொழும்பிலோ ஸ்தாபித்திருக்கவில்லை.

இரண்டாண்டுகளுக்கு முன்பு மக்கள் அவருக்கொரு ஆணையை வழங்கியிருந்தார்கள் அது சமாதானத்துக்கான ஒரு மக்கள் ஆணை, ஆனால் அதைச் சரிவர நிறைவேற்றித் தன்னை ஸ்தாபிக்கக் கிடைத்த இரண்டாண்டுகளையும் அவர் போதியளவு தீவிரமாகப் பயன்படுத்தவில்லை என்றே சொல்லவேண்டும்.

தன்னுடைய இயலாமைகளுக்கெல்லாம் அவர் சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரங்களையே சாட்டாகக்கூறிவந்தார். அவருக்களிக்கப்பட்ட மக்கள் ஆணையின் பிரகாரம் அவருக்கு இருந்திருக்கவேண்டிய நிமிர்வையும் மிடுக்கையும் அவரிடம் காணக் கிடைக்கவில்லை.

சனாதிபதி அவருடைய அமைச்சரவையிலிருந்து மூன்று முக்கிய அமைச்சர்களைப் பறித்தபோது அவர் அமெரிக்காவில் இருந்தார். அமெரிக்காவிலிருந்து அவர் நாடு திரும்பிய போது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அவருடைய எதிரிகளை அச்சுறுத்தப்போதுமான மிகப் பிரமாண்டமான ஒரு வெகுசன எழுச்சி அவரை வரவேற்கக் காத்திருந்தது. அந்த வெகுசன எழுச்சிக்குத் தலைமை தாங்கி அந்தச்சனங்களின் கோபத்தை சனாதிபதிக்கு எதிராகத் திருப்பக்கிடைத்த மிக அருமையான ஒரு சந்தர்ப்பத்தை அவர் தவறவிட்டார்.

மூன்று அமைச்சுக்களைப் பறித்த விவகாரத்தில் சந்திரிகா அதை ஒரு ஒத்திகையாகத்தான் (Trial) செய்துபார்த்தார். அதற்கெதிரான வெகுசனப் போராட்டங்களுக்கு ரணில் தலைமை தாங்குவாரா என்று சோதித்துப் பார்த்தார். ஆனால் வெகுசனக்கிளர்ச்சிகளுக்கெல்லாம் தலைமைதாங்கும் திராணியற்றவராக ரணில் காணப்பட்டதையடுத்து சிறிது காலத்தில் அவர் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டார்.

நாடாளுமன்றம் கலைக்கப்படமுன் நிகழ்ந்த மனோ - மலிக் பேச்சுவார்த்தைகளின் போதும் கூட, அது நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான ஒரு கால அவகாசத்தைப் பெறும் ஒரு நாடகமே என்பதைக் கண்டுபிடிக்க முடியாத ஒரு பாலகனைப்போல ரணில் காணப்பட்டார்.

இவ்வாறு தன்னுடைய தலைமைத்துவத்தை நிரூபிக்கக் கிடைத்த இரு முக்கிய தருணங்களைத் தவற விட்ட அவர் முடிவில் தேர்தலின் போது தன்னுடைய வெற்றியைக் குறித்து மிகை மதிப்பீட்டுடன் இருந்து தோற்றும் போனார்.

இப்பொழுது அவருடைய கட்சியை மட்டுமல்ல, கட்சிக்குள் அவருடைய தலைமைத்துவத்தையும் கட்டியெழுப்பவேண்டியவராகக் காணப்படுகிறார்.

சந்திரிகாவின் தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் எதிர்கொள்வதற்கு, ஐந்து நட்சத்திரக் கனவான் சனநாயக வாதியாக இருந்தால் போதாது என்பதை அவருடைய இரண்டாண்டு கால ஆட்சி நிரூபித்துவிட்டது. எனவே தனது தலைமைத்துவத்தையும் கட்சியையும் காப்பாற்றுவதென்றால் சந்திரிகாவைப் பலப்பட விடக்கூடாது.

இலங்கைத்தீவின் இப்பொழுதுள்ள அரசியல் மற்றும் பொருளாதார யதார்த்தங்களின் படியும் பிராந்திய மற்றும் பூகோள அரசியல், பொருளாதார யதார்த்தங்களின் படியும் சமாதானத்தை தனது அடித்தளமாகக் கொண்டிருக்கும் ஒரு அரசே நின்று நிலைக்கும். எனவே சந்திரிகா ஒரு கட்டத்தில் ஏதோ ஒரு சமாதானத்துக்கு வரக்கூடும்.

அவருடைய கூட்டு முன்னணி ஆட்சிக்கு வந்தபின் சமாதானத்தை முன்னெடுக்கும் விதத்தில் இதுவரை எந்த ஒரு புதிய நகர்வையும் செய்திருக்கவில்லை. ஆனாலும் யுத்த நிறுத்த உடன்படிக்கை அப்படியே தொடர்ந்தும் பேணப்படுகிறது.

கருணாவைக் களத்திலிருந்து அகற்றிய பின் கிழக்கில் விடுதலைப்புலிகள் படைத்துறை உயரதிகாரிகளைச் சந்தித்திருப்பது ஒன்றைக் காட்டுகிறது. புலிகளும் யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்து பேணத்தயார் என்பதே அது.

எனவே யுத்த நிறுத்தம் தொடர்ந்தும் பேணப்படும்வரை சமாதானத்துக்கான அடித்தளம் அப்படியே இருக்கும். ஏனெனில் யுத்த நிறுத்த உடன்படிக்கைதான் சமாதானத்துக்கான அடித்தளம். இந்த அடித்தளத்தின் மீது சந்திரிகா அவருக்கு வாய்ப்பான ஒரு சமாதானத்தைக் கட்டியெழுப்பத் தொடங்க முன்பே முந்திக்கொண்டு அதற்கான அடிப்படையை இல்லாமல் செய்துவிட ரணில் முயன்று வருகிறார்.

இதுவரை காலமும் தன்னை சமாதானத்தின் தந்தையாகக் காட்டி வந்த காரணத்தால் அவரால் இதை வெளிப்படையாகச் செய்யமுடியாதிருக்கிறது. அதிலும் குறிப்பாக சந்திரிகா சமாதானம் செய்யத் தொடங்கிவிட்டாரென்றால் பிறகதை வெளிப்படையாகக் குழப்புவது கடினமாகிவிடும்.

எனவே சந்திரிகா தன்னைப் பலப்படுத்திவரும் ஒரு கட்டத்திலேயே அவரைச் சமாதானத்தின் எதிரிகளான ஹெலஉறுமயவில் தங்கியிருக்கச் செய்வதன் மூலம் அவரால் வெற்றிகரமாகச் சமாதானம் செய்ய முடியாத ஒரு நிலையை உருவாக்கும் வேலைகளை ரணில் ஏற்கெனவே தொடங்கிவிட்டார்.

முன்பு அவர் செய்த சமாதானம் தன்னைக் கைதியாக்கிவிடும் என்று அஞ்சிய சந்திரிகா அந்தச் சமாதானத்தைப் பற்றிய ஒரு [illegible]ழயான சித்திரத்தை உருவாக்கிப் பரப்பி[illegible]ன் மூலம் அவரைத்தோற்கடித்தார்.

இப்பொழுது சந்திரிகாவின் முறை. அவர் செய்ய நினைக்கும் ஒரு சமாதானத்தை முளையிலேயே கிள்ளி எறிய ரணில் தயாராகி வருகிறார்.

அதாவது சந்திரிகாவை யுத்தத்தை நோக்கித் தள்ளுவதே ரணிலின் இறுதி இலக்கு. யுத்தம் ஒன்றுதான் சந்திரிகாவின் கனவுகளைச் சிதறடிக்கும். அதைவிடமுக்கியமாக, இப்போதுள்ள நிலமைகளின்படி யுத்தம் ஒன்றுதான் ரணிலின் கனவுகளை நிறைவேற்றவல்ல ஒரு காலத்தை அவருக்குப் பெற்றுக் கொடுக்கக் கூடும்.

இது ஒரு பயங்கரமான விசயம். சில வாரங்களுக்கு முன்னர் அவரைப்பாதுகாப்பதற்கு சமாதானம் தேவைப்பட்டது. இப்பொழுது யுத்தம் பரவாயில்லை எனுமொரு நிலை. இது எதைக் காட்டுகிறது?

யுத்தமோ சமாதானமோ எதுவானாலும் சிங்களத் தலைவர்கள் அதற்கு விசுவாசமில்லை தமது தனிப்பட்ட எழுச்சிகளையும், கட்சியின் எதிர்காலத்தையும் பாதுகாப்பதற்காகத்தான் எல்லாமும்.

இதில், நேற்று யுத்தம் செய்தவர் இன்று சமாதானம் செய்யமாட்டார் என்றில்லை நேற்றுச் சமாதானம் செய்தவர் நாளை யுத்தம் செய்யமாட்டார் என்றுமில்லை இதை இன்னும் திருத்தமாக பைபிள் வசனங்களுக்கூடாக பின்வருமாறு சொல்லலாம்.... எல்லாமே திரும்பத் திரும்ப நடப்பவைதான் முன்பு நடந்தவைதான் இப்பொழுது நடக்கின்றன. இப்பொழுது நடப்பவை தான் இனியும் நடக்கப் போகின்றன.... பூமியிலே சூரியனுக்குக் கீழே நூதனமானது எதுவுமேயில்லை. ●

# நறுக்கென...

## ஹெல உறுமயவின் பார்வை தமிழின விரோதிகளின் பக்கம்



யாழ்ப்பாணத்தில் சுயேச்சையாகப் போட்டியிட்டு படு தோல்வி அடைந்த பின் துண்டைக்காணோம் துணியைக்காணோம் என்று தலைமறைவான அந்த ஆனந்தமற்ற சங்கரியாருக்கு ஆனந்தமளிக்க அவரைத் தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக்கி-ஆனந்த சங்கர தேரோவாக்க விரும்பிய ஹெல உறுமயக்காரரின் கருணை இப்போது கருணா பக்கமும் பொழிந்துள்ளது.

விடுதலைப்புலிகளுக்கும்-தமிழ்த்தேசியத்திற்கும் எதிரான சக்திகளையெல்லாம் தமக்கு நண்பராக்கி அவர்களோடு பழைய விரோதங்களை மறந்து அவர்களை அரவணைப்புச்செய்வதில் சிகல உறுமயவின் நிழலான ஹெல உறுமயக்காரருக்கு நிகர். அவர்களேதான்.

விடுதலைப்புலிகளை குரங்கு பாஞ்சானிலிருந்து துரத்த புறப்பட்டு வெற்றிகரமாக பின் வாங்கிய சிகல உறுமயவினரின் அரசியல் செல்வாக்கின் பூச்சியத்தன்மையானது அவர்களுக்கே புரிந்த உண்மை-அவர்களின் சிங்கள பௌத்த அடிப்படைவாதக் கோட்பாட்டை சிங்கள மக்களே 2000மாம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் எவ்வாறு நிராகரித்திருந்தார்கள் என்பது அனைவரும் அறிந்த ஒன்றேயாகும்.

இந்தத் தேர்தலில் அவர்கள் ஹெல உறுமய என பெயர் மாற்றம் செய்து கொண்டு அரசியல் அரங்கிற்கு பிக்குமார் அணியை தள்ளிவந்து முன்நிறுத்தி தேர்தலை எதிர் கொள்ளவைத்ததன் மூலம் சிங்கள பௌத்த மக்களின் மத உணர்வைத் தூண்டி அரசியல் லாபம் பெறமுயன்றதில் அவர்களுக்கு லாபம் கிட்டியது என்றே கூறவேண்டும்.

இப்போது சிறிலங்காவின் ஆட்சியாளரின் பாராளுமன்ற பலத்தையும் ஸ்திரத் தன்மையையும் தீர்மானிக்கும் சக்தி மிக்க நவக்கிரகங்களாக ஹெலஉறுமயவின் ஏ-9 பிக்குமாரும் உள்ளனர் என்றால் அதில் மிகையில்லை.

இப்போது அவர்கள் சனாதிபதியையே மிரட்டவும் குற்றம் சாட்டவும் துணிந்தவர்களாகி விட்டமைதான் சுவாரஷ்யமான விடயமாகும்.

கருணாவை விடுதலைப்புலிகளிடம் இருந்து காப்பாற்றாமல் - அவர் மட்டக்களப்பில் இருந்து வெளியேறாமல் பாதுகாக்காமல் சனாதிபதி தவறிழைத்து விட்டாராம்... தென்பகுதி அரசியல் வாதிகளின் பதவிப் போட்டிச் சண்டையை பிரபாகரன் தனக்கு சாதகமாக பயன்படுத்தி விட்டாராம். இதன் மூலம் சனாதிபதி மன்னிக்க முடியாத குற்றத்தை செய்து விட்டாராம்....

ஆகக் கருணாவின் மீது ஹெல உறுமயவினர் கருணை காட்டவேண்டிய காலம்... பாருங்கோ.... கருணா பேசாமல் சிகல உறுமயவில்... மன்னிக்கவும் ஹெலஉறுமயவில் சேர்ந்தால்.... ஒரு தோரோவாகி சில வேளைகளில் சங்கரியாருக்கு கொடுக்கஇருந்த தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவியைக் கூட பெறலாம்....

தென்தமிழீழம் துரத்தியவரை தென்னிலங்கை பாதுகாக்கிறது என்றால்... கருணா யார் என்பது புரிகிறது அல்லவா?

## கோமாளி இளவரசருக்கு பொருத்தமான பதவி



கடைசியில் அக்கா சந்திரிகா, சனாதிபதியான தனது ஆலோசகர்களில் ஒருவரும் பண்டா பரம்பரையின் அரசியல் வாரிசுமான தம்பி அநுராவுக்கு பொருத்தமான அமைச்சரைத்தான் தேர்வு செய்து வழங்கியிருக்கிறார்.

ஒருகாலத்தின் எதிர்கட்சித் தலைவர், சபாநாயகர் என உயர்பதவிகளை வகித்த அநுரா இப்போது மிகச் சாதாரணமான அமைச்சர்களில் ஒருவராக பதவிப்பிரமாணம் செய்யப்பட்டு அவர் இதற்குத் தான் தகுதி என்று அடையாளப்படுத்தப்பட்டு விட்டார்.

அவரால் அவரது அக்காவுக்கு அறிமுகமாகி பின்னர் கூட்டமைப்பில் இணைந்து அரசியல் தோழர்களாகிவிட்ட ஜே.வி.பி.யினருக்குக் கூட பொறுப்பு மிக்க அமைச்சுக்கள் கையளிக்கப்பட்டுள்ள நிலையில் பிரதமராகி பின்னர் சனாதிபதியாகும் கனாவில் திழைத்திருந்த அநுராவை வெறுமனே சுற்றுலாத்துறை அமைச்சராக்கி சந்திரிகா அவமானப்படுத்தியதுடன் பழிவாங்கியும் விட்டார் என்றே கூறவேண்டும். முன்னர் ஐக்கியதேசியக் கட்சியில் அவர் இருந்த போது சனாதிபதியாக இருந்த சந்திரிகாவை அவர் மிக மட்டமாக விமர்சித்தமைக்கு இப்போது அவர் பழிவாங்கியுள்ளார் என்று அநுராவுக்கு நெருக்கமானவர்கள் கூறுகின்றார்கள்.

எந்தக் காலத்திலும், எம்பியாக இருந்த காலத்திலும் சரி, அமைச்சுப் பொறுப்புக்களில் இருந்த போதும் சரி அவர் ஓரிடத்தில் இருந்ததில்லை உலகெங்கும் சுற்றிக் கொண்டே இருப்பார் எனவே தான் சுற்றுலாத் துறையை அவரிடம் சனாதிபதி வழங்கியுள்ளார் போலும்.

உலகம் சுற்றும் வாலிபனுக்கு(?) சுற்றுலாத்துறை பொருத்தம் தானே அதுசரி.. அவர் பிரதமராவது எப்போது? சனாதிபதி ஆவது எப்போது? அதுதான் அரசில் யாப்பை மாற்றி பாராளுமன்றத்திற்கு அதிகாரங்களை வழங்கி நிறைவேற்று அதிகார சனாதிபதி ஆட்சி முறையை நீக்கியபின் தான் பிரதமராகி விட சனாதிபதி திட்டமிட்டிருக்கையில்... அநுராவுக்கு அதெல்லாம் கனவாகத்தான் இருக்கும்.

பண்டா பரம்பரையின் அநுராவுக்கு இப்படி ஒரு விதியா? கடைசி சபாநாயகர் பதவியாவது வழங்கியிருக்கலாமே...? அவர் முன்னர் அந்தப்பதவியை வகித்தவர் தானே...? அவருக்கு எந்தப் பொறுப்பான பதவியும் கொடுக்க வேண்டாமென ஜே.வி.பியோ, ஹெல உறுமயவோ கூட நிர்ப்பந்தித்திருக்கலாம்.... யார் கண்டது.?

அநுரா அவர்களே கவலை தீர உலகைச் சுற்றிவாருங்கள்... அதைவிட வேறு எதை சாதிக்கப் போகிறீர்கள்.?

## வெறும் தகவல்கள் எல்லாம் செய்திகளாகி விடாது



- கருணா தப்பி விட்டார்....

- கருணாவுக்கு இலங்கை இராணுவம் பாதுகாப்பு... முஸ்லிம் எம்பியுடன் சேர்ந்து கிமன்ஹலவுக்கு வந்த கருணா... பிஸ்ரலுடன் வந்த மூன்று பெண்கள் கருணாவுக்குப் பாதுகாப்பு.... கொழும்பு இராணுவ முகாம் ஒன்றினுள் கருணா பாதுகாப்பாக உள்ளார். கருணரவுக்கு கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் போலிக் கடவுச் சீட்டு வழங்கி மலேசியா ஊடாக அவுஸ்ரேலியா செல்ல உதவினார்...

கருணாவும் சகாக்களும் பிறிஸ்பேனின் தஞ்சம்....

இவையனைத்தும் கடந்த வார உள்ளூர் வெளியூர் செய்தி ஊடகங்களில் 'கருணா'வின் வீழ்ச்சியின் மின்னல் வெளியான பிரதான செய்திகளின் தலைப்புகளாகும்.

இவை, உண்மையா, பொய்யா என்பதற்கப்பால் இவை பரபரப்பான செய்திகள் என்பது மட்டும் உண்மை;

கருணா தலைமறைவாகவோ, வேறு ஏதோ வழியிலோ கிழக்கையும் அவரது சகாக்களையும் அம்போ என விட்டு ஓடிவிட்டார் என்பது உண்மையேயானாலும் அவர் எங்கு, எப்படி எவரின் உதவியுடன், எந்தவழியாக, எப்போது சென்றார் என்பதற்கு சான்றுகள் எதுவுமில்லை.

கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர் இதுவே உண்மை.

ஆனால் ஊடகங்கள் தொடர்ந்து ஊகங்களின் அடிப்படையில் ஆதாரம்ஏதுமின்றி இவற்றைப் பிரசுரித்தோ, வெளியிட்டோ ஆதாயம் தேடமுனைவதுதான் வேடிக்கை.

சரி இவர்கள் கூறுவது போன்று இராணுவ உதவியுடன் தப்பியிருத்தல் சாத்தியமேதான் ஆனால் இராணுவப் புலனாய்வுப்பிரிவோ, சிறிலங்காவின் தேசியப் புலனர்ய்வுப் பிரிவோ அவ்வளவு சுலபமாக, விரைவாக, நீ பாதுகாப்பாகப் போய் உன் குடும்பத்துடன் சந்தோஷமாக இரு என்று விட்டுவிடுமா?

அப்படி விட்டு விட்டால் அது என்ன புலனாய்வுத்துறை?

போலிக்கடவுச் சீட்டில் மலேசியா போய் அங்கிருந்து அவுஸ்ரேலியா செல்ல ஒரு முன்னாள் அமைச்சர் (ஒரு காலத்திய மலேசியாவுக்கான தூதுவரும் அவர் தான்) உதவினார் என்பது ஊடகங்களுக்கு பகிரங்கமான உண்மையென்றால் அந்த குறிப்பிட்ட நாடுகளுக்கு இது அவமானமில்லையா?

செய்திகள் தொடர்பாக தகவல்கள் இருக்கலாம் ஆனால் வெறும் தகவல்கள் எல்லாமே சரியான செய்திகளாகி விடாது!

கருணா தப்பி ஓடிவிட்டார் அது மட்டுமே உண்மை........

ஊடகங்களிளோ, ஊடகவியலாளர்களோ...செய்தியாளர்களோ அவர் பின்னால் அவரைத் தொடர்ந்து ஓடி செய்தி சேகரிக்க செல்லவில்லை அதுவும் உண்மைதான்....! அப்படியானால் ஏனையவை? உறுதிப்படுத்தப்படாத ஊகங்கள் அவ்வளவுதான்.!

## ஏமாந்து போனது கருணா மட்டுமல்ல



கருணாவின் அவமானம் கரமான வீழ்ச்சியில் ஹெலஉறுமயக் காரருக்கு மட்டும் கவலையென்றில்லை.

இந்தியாவுக்கும், இந்தியாவின் இந்துத்துவ ஊடகங்களுக்கும் கவலை தான்!

கருணாவின் பிரிவோடு விடுதலைப் புலிகளில் பிளவு என்பது அவர்களைப் பலவீனப் படுத்தி வீழ்ச்சி காணவைத்துவிடும் எனக் கனவு கண்டு கொண்டிருந்த அவர்கள் ஏமாற்றமும், துயரமும், ஏக்கமும் அடைந்திருந்தாலும் அதனை வெளிக்காட்ட வெட்கப்பட்டு விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்று நியாயம் சொல்லவும் தொடங்கி விட்டார்கள்.

கருணா கிழக்கிலிருந்து பின்வாங்கித் தப்பிப் போனது நியாயமானதொரு நடவடிக்கையென இந்தியாவிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளேடான 'இந்து' பத்திரிகை புகழாரம் சூட்டியுள்ளது.

இந்தப்புகழாரத்தை சூட்டியவர் அதன் ஆசிரியர்தான்... அதுவும் ஆசிரியர் தலையங்கத்தில் தான் இதனை எழுதியுமுள்ளார்.

க்ருணாவின் பிரதேச வாதக் கிளர்ச்சிகள் மிகச் சரியானதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான ஒன்று என அங்கீகரித்துள்ள அவ்வாசிரியத் தலையங்கத்தில், இவரது கிளர்ச்சிக்கான காரணங்களும் பிரதேசவாதக் கருத்துக்களும் பல்லினத்தவர்கள் வாழும் கிழக்குப் பிராந்தியத்துக்கு ஏற்புடையதானது தான் என வர்ணித்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து அவர் விலகிச் சென்று தான் வாழ்ந்த பிரதேசத்திற்காக குரல் கொடுத்ததுடன் வடபகுதி தமிழ் மக்களுக்கு எதிராக கிளர்ச்சிகளில் ஈடுபட்டமையானது அவரது நியாயமான கோரிக்கையின் பாற்பட்டதேயாகும் எனவும் குறிப்பிட்டுள்ள அத்தலையங்கத்தில் 'கருணா' புலிகளை எதிர்த்தால் ஏற்படக் கூடிய சொத்தழிவுகள், உயிரிழப்புகள் அகியவற்றைக் கருத்தில் கொண்டே புத்திசாலித்தனமாக பின் வாங்கினார் என்றும் அவருக்கு வக்காலத்து வாங்கி எழுதப்பட்டுமுள்ளது.

அவர் தப்பியோடியமை வரவேற்கத்தக்க விடயமாம்... அவர் துரத்தப்பட்டமையை, அவரது மக்களால் நிராகரிக்கப்பட்டமையை அவரது போராளிகளாலேயே வெறுக்கப்பட்டமையை இந்து பத்திரிகை ஆசிரியர் புரிந்து கொள்ளாதது அவரது அறிவீனத்தின் தன்மையையே காட்டுகிறது....

அவர் அப்படி புரிந்து கொண்டாலும் கூட,'இந்து' த்துவம் அதனை எழுதவிடாதல்லவா?

**செங்குட்டுவன்**

நம்மிடமே நாம் திருப்தியைக்காண முடியாத போது, புறத்தே எங்கும் அதைத் தேடுவது பயனற்றது. - லா ரோஷ்ஃபுக்கோ.



"சந்திரிகாவின் அரச இயந்திரம் அசைய வேண்டுமானால் இலங்கைக்குள் நிதி பாச்சப்படவேண்டும், நிதிபாச்சப்பட வேண்டுமானால் சமாதானம் தொடரப்படவேண்டும். சமாதானம் தொடரப்படவேண்டுமானால் புலிகளோடு மட்டுமே பேசியாகவேண்டும், புலிகளோடு பேசவேண்டுமானால் புலிகள் முன்வைத்திருக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான திட்டவரைபிலிருந்தே பேசவேண்டும். ஆனால் சந்திரிகா ஏற்படுத்தியிருக்கும் கூட்டுக்காரர்கள் முற்றிலும் இதற்கு முரணான முரணிகளாகவே உள்ளனர். அவ்வாறாயின் சமாதானத்தின் கதி என்னவாவது?"

தேர்தல் முடிந்து ரணிலை சந்திரிகா வீழ்த்தி விட்டதால். இனி சந்திரிகாவின் பிரதான ஆடுகளத்தில் குறுக்கே நிற்பது சமாதானம்.

சந்திரிகா ரணிலை வீழ்த்துவதற்கு பயன்படுத்திய ஆடுகள தந்திரங்களை சமாதானத்தின்

நிதியில்தான் தங்கியிருக்கிறது என்பதை கவனத்தில் கொண்டே சந்திரிகாவாக இருந்தாலும் சரிதான், ஜே.வி.பி.யாக இருந்தாலும் சரிதான் தீர்மானிக்க வேண்டிய கட்டாய நிர்ப்பந்தம் உண்டு.

இதில் முக்கியமாக கவனிக்கவேண்டியது சந்திரிகாவின் அரச இயந்திரம் அசைய வேண்டுமானால் இலங்கைக்குள் நிதிபாச்சப்படவேண்டும், நிதி பாச்சப்பட வேண்டுமானால் சமாதானம் தொடரப்படவேண்டும்.

புலிகள் இயக்கம் ஏற்படுத்தி வைத்திருக்கிறது.

அதாவது முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் ஐக்கியதேசிய முன்னணி அரசோடு புலிகள் இயக்கம் சமாதான பேச்சுக்களை தொடர் பேசியுள்ளமையும் ஆகும்.

அந்த வகையில் அடுத்துவரும் எந்த நகர்வையும் சந்திப்பதற்கு ஏதுவாக புலிகள் இயக்கம் தனது நடவடிக்கைகளை செயல்களில் காட்டத் தொடங்கிவிட்டது.

# முரணிகளின் கூட்டிலிருந்து சமாதானம் எப்படிவரும்...?

மீது பிரயோகிக்கமுடியாது என்றதொரு நிலையே இப்போது காணப்படுகிறது.

இந்த நிலையில் சந்திரிகா சமாதானத்தை அடியோடு வீழ்த்த வேண்டும் அல்லது சமாதானத்தின் ஆட்டத்தைத் தொடர வேண்டும்.

சந்திரிகாவின் முன் இந்த இரண்டு தெரிவுகள்தான் உண்டு.

ஆனால் சந்திரிகாவால் சமாதான ஆட்டத்தை அடியோடு வீழ்த்தமுடியாது என்ற நிலையே காணப்படுவதால் அவரால் சமாதானத்தின் ஆட்டத்தை தொடர வேண்டிய நிலையே காணப்படுகிறது.



இப்போது இலங்கையின் பொருளாதாரயதார்த்தத்தில் சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரமோ, நாடாளுமன்ற பலமோ சந்திரிகா நினைப்பதை நிறை வேற்றப்போதுமானதாக இல்லை.

இதனால் சந்திரிகா நினைப்பதையும் நாடாளுமன்றில் நிறைவேற்றப்போகும் மசோதாக்களையும் செயற்பட வைக்கும். செயற்திறன் என்பது இலங்கைக்கு வெளியில் தான் இருக்கிறது.

இது ஐம்பது வருடங்களுக்கு மேல் அரச இயந்திரத்தை இயக்கி வந்தவர்கள் என்ற வகையில் ஐக்கிய தேசிய கட்சிக்கும் தெரியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் தெரியும், ஆனால் அரச இயந்திரத்தை நேரடியாக இயக்கிய அனுபவமற்றவர்கள் என்ற வகையில் சந்திரிகாவோடு கூட்டுச்சேர்ந்திருக்கும் ஜே.வி.பி. இதனை குறைத்து மதிப்பிட முயலலாம்.

இந்த பின்னணியில் அரசை இயக்கும் செயற்திறன் என்பது இலங்கைக்கு வெளியிலிருந்து இலங்கைக்குள் உதவி வழங்குவோர்களால் பாச்சப்படும்

இந்த வகையில் சந்திரிகாக்கு சமாதான ஆட்டத்தை தொடரவேண்டிய கட்டாய நிர்ப்பந்தமும் உண்டு.

இந்த வகையில் சந்திரிகாவுக்கு முன் இரண்டு கட்டாய நிர்ப்பந்தங்கள் உண்டு. இந்த இரண்டு நிர்ப்பந்தங்களும் ஒன்றுக்கொன்று இணைந்த தொடர்பைக் கொண்ட செயற்பாடுகளாகவே காணப்படுகிறது.

அதாவது சமாதான ஆட்டம் தொடரப்பட்டால் மாத்திரமே இலங்கைக்குள் நிதி பாச்சலுக்கான வாய்ப்பு உண்டு. மாறாக சமாதானம் வீழ்த்தப்படுமானால் நிதிப்பாச்சல் வற்றிவிடும்.

இப்படி ஒரு நிலையை சந்திரிகா ஏற்படுத்துவாரானால் அவரால் ஒரு கட்டத்துக்குமேல் அசையமுடியாது. அவர் சார்ந்திருக்கும் ஜே.வி.பி.யாலும் அசையமுடியாது.

ஆனால் இந்த யதார்த்தத்தை இதுவரை ஜே.வி:பி.யின் சார்பில் வெளியாகும் தகவல்களின் அடிப்படையில் புரிந்து கொண்டதாக தெரியவில்லை.

சமாதானம் தொடரப்பட வேண்டுமானால் புலிகளோடு மட்டுமே பேசியாக வேண்டும், புலிகளோடு பேசவேண்டுமானால் புலிகள் முன்வைத்திருக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபிலிருந்தே பேசவேண்டும்.

**சிறி.இந்திரகுமார்**

ஆனால் சந்திரிகா ஏற்படுத்தியிருக்கும் கூட்டுக்காரர்கள் முற்றிலும் இதற்கு முரணான முரணிகளாகவே உள்ளனர்.

அவ்வாறாயின் சமாதானத்தின் கதி என்னவாவது?

இதிலும் மேற்குறிப்பிட்டது போல ஒரு தொடர் சங்கிலியாக இருக்கும் இலங்கையின் எதிர்கால அசைவியக்கத்தின் காரணிகளில் புலிகளோடு மட்டுமே பேசவேண்டும் என்பதையும், புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபின் அடிப்படையிலேயே பேசவேண்டும் என்பதை சந்திரிகாவாலோ, சந்திரிகாவின் பின்புலத்தில் இருக்கக்கூடிய எந்த சக்திகளினாலும் புரந்தள்ள முடியாத ஒரு நிலைமையை

ந்தபோது இருந்ததுபோன்று இப்போது புலிகள் இயக்கம் இல்லை இப்போது இராணுவ ரீதியாகவும் அதேநேரம் சனநாயக ரீதியாகவும் முன்னரிலும் பார்க்க அதிகமாகவே தன்னை திருபித்து நிற்கிறது.

அந்த வகையில் புலிகள் இயக்கம் பேச்சு மேசையிலும் சரி, சமாதான முன்நகர்வு முயற்சியிலாயினும் சரி அதிக வலுவுடன் கூடிய சக்தியாகவே களத்தில் நிற்கிறது.

ஒட்டு மொத்தத்தில் புலிகள் இயக்கம் முன்னரிலும் பார்க்க பலமடங்கு வீரியம் மிக்க மக்களின் இயங்கு சக்தியாக தன்னை நிரூபித்து அடுத்த கட்ட நகர்வை சந்திக்க தன்னை தயார் படுத்திவிட்டது.

இதன் ஒரு அங்கமே மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் வயது குறைந்த போராளிகளை யுனிசெப் ஊடாக பெற்றோர்களிடம் ஒப்படைத்தமையும் கிளிநொச்சியில் தமிழ் தேசிய கூட்டமைப்பு, மற்றும் சந்திரசேகரன், மனோகனேசன் ஆகியோரை தமிழீழ தேசிய தலைவர் பிரபாகரன் சந்தித்து

இதேபோன்று இலங்கையின் வரலாற்றில் 1977 இல் நடைபெற்ற தேர்தலையடுத்து அதிக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றிற்குள் பிரவேசித்தது போன்று தற்போது தெளிவான ஒரு ஆணையோடு அதிக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை புலிகள் இயக்கம் நாடாளுமன்றம் அனுப்பி வைத்திருக்கிறது. இந்த வகையில் புலிகளின் சமாதானத்தின் மீதான பற்றைவெளிப்படுத்தி சிங்கள தேசத்திற்கு தமிழ்த் தலைமை வழங்கும் ஒரு வரலாற்று சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.

ஆனால் இதனை சிங்களதேசம் புரிந்து கொண்டு சமாதானத்தின் பாதையில் தங்களை இணைக்கப்போகிறார்களா என்பதில் தான் இலங்கையில் வாழும் மக்களின் எதிர்காலத்திற்கு நல்ல சகுனங்களை ஏற்படுத்தமுடியும்.

ஆனால் சிங்கள தேசத்தில் சிங்கள மக்கள் தமது பொருளாதார நலன்கள்கூட சமாதானத்தின் அசைவிலேயே தங்கியுள்ளதுஎன்பதை சரியாக எடைபோட தவறியதன், அல்லது நிராகரித்ததன் பலனை அனுபவிக்கக் கூடிய வகையிலேயே தென்னிலங்கை சந்திரிகா ஜே.வி.பி. கூட்டும், நாடாளுமன்ற குழப்பமும் காட்சி தருகிறது.

இதனால் சந்திரிகா தன்னையும் தனது கட்சியையும் ஜே.வி.பி.யிடம் இருந்து பாதுகாக்க போராடுவாரா? சிங்கள மக்களின் பொருளாதார நலனிற்காக போராடுவாரா? அமைதியான இலங்கைத்தீவை உருவாக்க போராடுவாரா?

இதில் சந்திரிகா தன்னையும், தனது கட்சியையும் பாதுகாக்கவே அதிகம் போராடுவார் என்ற நிலையே அதிகம் காணப்படுகிறது.

நேர் நோக்கு

# அரசியலமைப்பில் மாற்றம்

சிறிலங்காவின் அரசியல் அமைப்பை மாற்றியமைப்பதென சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்துவிட்டார். அதற்கான ஆரம்பகட்டச் செயற்பாடாக அரசியலமைப்பு ஆலோசனைச்சபை ஒன்றை அவர் அமைத்துள்ளார். இப்பொழுது பாராளுமன்றத்தை ஓர் அரசியலமைப்பு நிர்ணய சபையாக மாற்றியமைக்கும் யோசனையும் சனாதிபதியிடம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறாயினும் தனது சனாதிபதி பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அரசியலமைப்பை மாற்றியமைப்பது என்பது சனாதிபதி சந்திரிகாவின் நோக்கமாகும்.

சிறிலங்காவின் சனாதிபதி முறை நீக்கப்படும் என்ற வாக்குறுதியுடன் தான் சனாதிபதியாகப் பதவி ஏற்றார்.

அதே வேளை 90களின் பிற்பகுதிகளில் ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை உடனடியாக நீக்குவதற்கு சம்மதம் தெரிவித்திருந்தார். ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது பதவிக்காலம் முடிவுற்றதும் அதனை நீக்குவதற்கே உடன்பாடாயிருந்தார் ஆனால் அடுத்த சனாதிபதியாகப் பொறுப்பேற்கும் சந்தர்ப்பம் உள்ள நிலையில் ரணில் விக்கிரமசி[...] அதற்கு விருப்பமுடையவராக இல்லை.



அரசியல் யாப்பில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்பது சந்திரிகா குமாரதுங்கவினது மட்டுமல்ல பொதுவான கருத்தாகும் குறிப்பாக தென்பகுதி அரசியல் கட்சிகள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை நீக்கவேண்டும் என்று [...]யுறுத்தி வருகின்றன. அ[...]ம் குறிப்பாக பாராளுமன்றத்திலும் கூடிய அதிகாரத்தைக் கொண்ட சனாதிபதி எனும் அமைப்பை நீக்க பெரும்பாலும வலியுறுத்தி வருகின்றன.

ஜே.வி.பி. இந்த முறையை கடுமையாக எதிர்த்துவருகின்றது. அதே வேளை சிறிலங்காவின் தற்போதைய சனாதிபதியான சந்திரிகா குமாரதுங்க 6 மாத கால அவகாசத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட

அதேவளை தேர்தல் முறையை மாற்றியமைக்கும் விடயத்திலும் இவ்வாறான நிலை தான் உள்ளது வெற்றி பெறும் வாய்ப்பு இருக்குமாயின் இத்தேர்தல் மூலம் மூன்றிலிரண்டு ஆசனங்களைப் பெறமுடியாது இருப்பதால் அதனை மாற்ற தென்பகுதி பிரதான கட்சிகள் முயல்கின்றன. தோல்வி அடையும் சந்தர்ப்பம் இருக்குமாயின் அதனையிட்டு எதுவும் பேசாதிருக்கின்றன. கடந்த ஐ.தே.மு ஆட்சிக்காலத்தில் தேர்தல் முறையை மாற்றுவது தொடர்பாக ஆராய ஒரு பாராளுமன்றக்குழு ஐக்கிய தேசியக் கட்சியால் அமைக்கப்பட்டது. ஆனால் அதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒத்துழைப்பு வழங்கவில்லை.

இது இவ்வாறிருக்க சிறிலங்காவில் தற்போதுள்ள அரசியலமைப்பு சிறுபான்மையினரின் உரிமைகளை நசுக்கும் விதத்திலேயே உள்ளது. இந்த அரசியலமைப்பில் மாற்றம் செய்யப்படாவிடின் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாதென தமிழர் தரப்பு வலியுறுத்தி வருகின்றது.

இவ்வாறு இந்த அரசியலமைப்பிலுள்ள பல குறைபாடுகள் திருத்தப்படவேண்டும் என்பது உணரப்பட்டுவருகின்றது. அதாவது 1978இல் ஜே.ஆர் ஜெயவர்த்தனவால் உருவாக்கப்பட்ட இந்த அரசியலமைப்பிற்கு 17திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டபோதும் அதில் மாற்றங்கள் மேலும் செய்யப்படவேண்டும் என்பதே பலதரப்பினதும் கருத்தாகும்.

இவ்வாறு இந்த யாப்பு அமைந்தமைக்குக் காரணம் ஜே.ஆர் ஜெயவர்த்தன தமது சொந்த நலனையும் கட்சி நலனையும் கருத்தில் கொண்டு யாப்பை உருவாக்கியமையேயாகும். அதாவது முன்னைய தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் முறையையும் தான் இறுதிக் காலத்தில் ஒரு சர்வாதிகாரியாக விளங்கும் நோக்கத்துடன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையையும் உருவாக்கினார்.

தான் பதவி ஏற்ற போது பாராளுமன்றத்தில் வைத்திருந்த ஆறில் ஐந்து பெரும்பான்மையை தனது ஆட்சிக்காலம் முழுவதும் தக்கவைத்துக்கொள்ள பாராளுமன்றத் தேர்தலுக்குப் பதிலாக சர்வசன வாக்கெடுப்பை நடத்தினர். மேலும் இந்தப் பெரும்பான்மையை வைத்துக்கொண்டு விரும்பியவாறெல்லாம் அரசியல் அமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவந்தார்.

இதேவேளை தமிழ் மக்களின் உரிமைகள் குறித்து இந்த அரசியலமைப்பு எதையுமே கொண்டிருக்கவில்லை.

இவ்வாறு ஜே.ஆர். ஜெயவர்த்தன நாட்டின் நலன் குறித்துச் சிந்திக்காது கட்சியின் நலன், தனது நலன் என்ற அடிப்படையில் அரசியலமைப்பை உருவாக்கியமையால் தான் அது இன்று தோல்வியைத் தழுவியிருக்கிறது.

இப்போதும்கூட இந்த அரசியலமைப்பில் சுயநல நோக்குடனேயே மாற்றங்களைக் கொண்டுவர சனாதிபதி சந்திரிகா முயல்வது உண்மை. தனது அரசியல் வாழ்வு முடிவுறப்போகின்ற நிலையில் அதனை நீடித்துக்கொள்ளவே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த விடயத்தில் அதிக தீவிரம் காட்டி வருகிறார் என்பது வெளிப்படை.

எனவே நாட்டிற்குப் பொருத்தமான அரசியல் யாப்பு என்பதைவிட சனாதிபதி சந்திரிகா தனக்குப் பொருத்தமான அரசியல் யாப்பை உருவாக்கும் முயற்சியிலேயே ஈடுபடப்போகிறார் அவ்வாறாயின் சாதாரண பெரும்பான்மையே இல்லாத பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்று அவரால் அரசியலமைப்பை மாற்றியமைத்து விட முடியாது ஐக்கியதேசியக்கட்சி அதற்கு ஆதரவு வழங்கவும் மாட்டாது. ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கட்சி தான் இப்போது மூன்றிலிரண்டுக்குமேற்பட்ட தொகுதிகளை வெற்றி கொண்டுள்ளதாகக் கூறுகின்றது அதாவது 160 தொகுதியில் 106 தொகுதிகளில் வெற்றி பெற்றதை அது அதற்கு ஆதாரமாகக் கூறுகிறது. அரசியலமைப்பில் எப்பொழுதோ கைவிடப்பட்டுவிட்ட தேர்தல் தொகுதி முறை இப்போது வாக்குகளை எண்ணுவதற்கு வசதியாக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. தேர்தல் மாவட்ட ரீதியாக பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகையில் தொகுதி எண்ணிக்கையை அவர் காட்டுவது மக்களை ஏமாற்றும் முயற்சி தவிர வேறில்லை. ஆனால் அதனையே அவர் தற்போதையை அரசியலமைப்பை ஏமாற்றப் பயன்படுத்தக்கூடும் அவ்வாறாயின் உருவாக்கப்படும் புதிய அரசியல் யாப்பும் சில வருடங்களில் தோல்வியையே தழுவிக்கொள்ளும்.

ஆனால் கடந்த 27 வருடங்களாக இந்த அரசியலமைப்பின் காரணமாக ஏற்பட்ட தீங்குகளைக் கருத்தில் கொண்டால் சந்திரிகாவால் உருவாக்கப்படும் யாப்பாலும் பலதீங்குகள் விளைந்த பின்புதான் அதன் தோல்வி ஒப்புக்கொள்ளப்படும். அப்போது நாடு எந்நிலையிலிருக்கும் என்பதை இப்பொழுதே கூறிவிடமுடியாது.

வேலவன்

---

# மீண்டும் பழைய பல்லவியா?

பிரதி பா[...]மைச்சராக அனுருத்த ரத்வத்[...]யை சனாதிபதி சந்திரிகா நியமிக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் அனுருத்த ரத்வத்தை இன்னமும் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படவில்லை. அவர் தேர்தலில் எந்தத் தொகுதியிலும் போட்டியிட்டு வெற்றிபெற்றோ அல்லது தேசியப்பட்டியல் மூலம் நியமிக்கப்படவோ இல்லை பதிலாக தேசியப்பட்டியல் மூலம் நியமிக்கப்படலாம் என்ற தகவல்களே தெரிவிக்கின்றன.

ஒரு காலத்தையை சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசின் கடும் இராணுவப் போக்குக்குக் காரணமான சூத்திரதாரர்களுள் முக்கியவரான ரத்வுத்தையின் பெயர் தற்போது பேசப்படுவது சந்திரிகாவின் புதிய அணுகுமுறை தொடர்பாக சந்தேகங்களையே தோற்றுவித்துள்ளது.

அதிலும் அனுருத்த ரத்வத்தை தற்போதும் சந்தேகத்திற்கிடமான குற்றவாளியாகக் காணப்படுகிறார். அத்தகைய ஒரு நபர் நாட்டின் பாதுகாப்புக்கு நியமிக்கப்படலாம் என்பது இலங்கையின் அரசியல் நேர்மை கேலிக்குரிய ஒன்றாக மாறி வருவதையே காட்டுகிறது.

இதேவேளை ரத்வத்தையை சனாதிபதி சந்திரிகா மீண்டும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக கொண்டு வர முயற்சிப்பது என்பது அவரின் புதிய அரசு வரலாற்றில் பாடங்களைக் கற்றுக்கொள்ள மறந்து போனதையே காட்டுகிறது.

இதே வேளை இவரை சனாதிபதி சந்திரிகா பிரதிப்பாதுகாப்பு அமைச்சராகக் கொண்டுவருவதற்கு பண்டார நாயக்க குடும்பப் பின்னணி என்ற ஒரு காரணத்தை விட வேறு எந்தக்காரணங்களும் இருக்கப்போவதில்லை.

அவ்வாறாயின் நாட்டு மக்களின் விருப்புவெறுப்புக்களுக்கும் அப்பால் தன்னுடையை பண்டார நாயக்க குடும்பத்தின் நெருங்கிய உறவு நிலை சார்ந்தவர்கள் மாத்திரமே கட்சிக்குள்ளும் தனது கட்சி அலங்கரிக்கும் அரசுக்குள்ளும் பதவி நிலைகளை வகிக்கலாம் என்ற எழுதப்படாத விதி ஒன்றை உண்மையாக்க முயற்சிப்பது போலத்தெரிகிறது.



ரத்வத்தை

இதே நிலையில் சனாதிபதி சந்திரிகாவுக்கும் அவர் கூட்டு ஏற்படுத்திய ஜே.வி.பி.க்கும் இடையிலான முறுகல் நிலையே இன்னும் முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை. அந்த நிலையிலும் ரத்வத்தையை பிரதிப்பாதுகாப்பு அமைச்சராகக் கொண்டுவர முற்படுவதானது எந்தப்பிரச்சினைகளுக்கும் மத்தியிலும் சனாதிபதி சந்திரிகா ஒரு குற்றவாளியாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ரத்வத்தையை உயர் பதவி நிலைக்கூடாக பாதுகாக்க முற்படுவது போலவுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் உடத்தலவின் படுகொலைக்காக ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் நீதிமன்றத்திற்கும் சிறைச்சாலைக்குமென இழுத்தடிக்கப்பட்டதை நிச்சயம் மறந்துவிடமாட்டார்.

அந்த வகையில் ரத்வத்தைக்கு வழங்கப்படும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சு என்ற அதிகாரத்தின் மூலம் அதிகார துஷ்பிரயோகத்திற்கும் பாதை திறந்து விடப்படுகிறது.

இதன்மூலம் இனி ஐக்கிய தேசிய முன்னணி அரசின் உயர் தலைகள் பல பல்வேறு காரணங்களின் பேரில் தண்டிக்கப்படவோ அல்லது நெருக்கடிகளை எதிர்கொள்ளவோ வேண்டிவரும் என்பது மட்டும் நிச்சயம்.

ஆகவே ஒரு வேளை ரத்வத்தை பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக சனாதிபதி சந்திரிகாவால் நியமிக்கப்பட்டால் நாட்டில் பழிவாங்கும் படலம் ஆரம்பிக்கப்போகிறது என்பதைத் துணிந்து கூறலாம்.


நக்கீரர்

# தமிழீழப் பாதுகாப்பிற்கான தமிழர்களின் விழிப்புணர்ச்சி

சிங்களப் பேரினவாதம் தொடர்ந்து இழைத்துவந்த தமிழின விரோத நடவடிக்கைகளால் தமிழர்கள் அடிமை நிலைக்குள் தள்ளப்படும் ஆபத்தான காலகட்டத்தில் வாழ்ந்தார்கள்.

இவ்வரலாற்று நெருக்கடியான காலப்பகுதிகளில் தமிழர்கள், தமது தலைவிதியை நொந்து சும்மா இருந்துவிடவில்லை.

மாறாகப் பெருமைப்படும் விதத்தில் சவால்களை எதிர்கொண்டு தேசியத் தலைவரின்கீழ் விடுதலைப் போருக்கு உரமேற்றிப் பங்கெடுத்தாகள்.




ஏறத்தாள இருபத்தைந்தாண்டுகள் விடுதலைக்கு இரத்தத்தால் உரமூட்டிய மாவீரர்கள், மக்களின் வீரம், விளைநிலமாக தமிழர் தாயகம் பலம் பெற்றது.

இப்பலம் பொருந்திய தாயகத்தை சின்னாபின்னப்படுத்திச் சிதைப்பதற்கும், தமிழர்கள் வாழ்வதற்கு கஷ்டமான ஒரு பூமியாகத் தாயகத்தை மாற்றுவதற்கும், பல்வேறு சூழ்ச்சிகரமான தந்திரோபாயங்களை சிங்களம் கையாண்டு வருகின்றது.

இத் தந்திரோபாயங்களை, அரசியல், போரியல், உளவியல், ஒற்றாடல்(புலனாய்வு) போன்ற அனைத்திலும் புகுத்தியே வந்துள்ளது. வருகின்றது. இது ஒட்டுமொத்தமாக தமிழ்ச்சமுதாய அமைப்பின் அடித்தளத்தைத் தகர்த்துவிடும் நோக்கத்தினைக் கொண்டதாகும்.

இதில் எதிரியால் முன்னெடுக்கும் புலனாய்வுப்போர் பற்றியும், அப்போரை எதிர்கொள்ள தமிழர்கள் புலனாய்வு விழிப்புணர்வுச் சமூகமாக மாறவேண்டிய அவசியம் பற்றியும் இங்கு நோக்குவோம்.

இதற்கு நல்ல எடுத்துக்காட்டாக திருக்குறள் ஒன்றை நோக்குவோம்.

''ஒற்றினான் ஒற்றிப் பொருள் தெரியா மன்னவன் கொற்றம் கொளக்கிடந்தது இல்''

இக்குறள் தரும் விளக்கம் - ஒற்றர்கள் இல்லையென்றால் உள்நாட்டிலும், அயல்நாட்டிலும், தகவல்கள் எதனையும் அரசன் அறிந்து கொள்ளமுடியாது. தெரிந்து கொள்ளவில்லையென்றால் பாதுகாப்பாக எதுவும் செய்து கொள்ளமுடியாது. அதனால் அரசு அழியும் ஆபத்து ஏற்படும்.

இது ஒன்றை எமக்கு உணர்த்துகிறது அதாவது தமிழீழம் முழுவதும் சாமர்த்தியமாக பின்னப்படவேண்டிய உளவு வலைப்பின்னலின் முக்கியத்துவம் பற்றியதாகும்.

தமிழீழ விடுதலை வீரர்கள் போர்க்களத்தில் உயிர்த்தியாகம் செய்து வருகையில், தாய் மண்ணில் சிங்களதேசத்திற்கு சார்பாக தமிழ் ஒற்றர்கள் திரைமறைவில் இயங்கிக் கொண்டிருப்பார்கள்.

இம்மறைமுக சூழ்ச்சிகரமான புலனாய்வுப் பரிமாணங்களாகப் பின்வருபவைகள் உள்ளன.

*01. தமிழீழப் பிரதேசங்களுக்குள், இயக்க நிர்வாகக் கட்டமைப்புக்குள் ஊடுருவி உளவு பார்த்தல்.*

*02. தமிழீழ மக்களது உளவரணை பலவீனப்படுத்தும் வகையில் நாசவேலைகள், மறைமுகத் தாக்குதல்களை மேற்கொள்ளுதல்.*

*03. தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான எதிரணிகளை உருவாக்கிக் கையாளுதல்.*

*04. தமிழரின் உரிமைப் போராட்டத்தின் மீதான பற்றுறுதியை திசைதிருப்பும் பொய்யான தகவல்களைப் பரப்புதல்.*

*05. தமிழர்களின் தேசியப் பலத்தை சிதைப்பதற்கு "பிரித் தாளும்" சூழ்ச்சியைக் கையாளுதல்.*

இவ்வகையான நாசகாரப் புலனாய்வுப் பரிமாணங்களுக்காக சிங்களம் தமிழ் ஒற்றர்களடங்கிய படையையே எப்போதும் அதிகமாக ஈடுபடுத்தி வருகின்றது.

அவையாவன.

*01. அகத்து ஒற்றர் (ஊடுருவலாளர்)*

*02. இரட்டை வேடம் போடும் ஒற்றர்.*

*03. மனம் மாற்றப்பட்ட ஒற்றர்.*

*04. உள்ளூர் ஒற்றர்.*

*05. காப்பான ஒற்றர்.*

இவ்வொற்றர்களது பணி சார்ந்து சிறுவிளக்கத்தைப் பெறுவோம்.

முதலாவது அகத்து ஒற்றர் இயக்க நிர்வாகக் கட்டமைப்புகளுக்குள் ஆழமாக ஊடுருவி நிலைபெற்று இருப்பார். இவர் விடுதலைப்போரை பலவீனப்படுத்தும் வகையில் விளைபயன்மிக்க தாக்குதலுக்கான தகவல்களை எதிரிக்கு வழங்குவார். அத்துடன் தாக்குதல்களை மேற்கொள்ளுதல் அல்லது அத்தாக்குதலுக்கான பின்புலப் பணிகளை ஒழுங்குபடுத்திக் கொடுப்பார்.

இரண்டாவது இரட்டை வேடம் போடும் ஒற்றர். எதிரிக்கே விசுவாசமாகச் செயல்படும் இவர் விடுதலைப்போராட்டத்திற்கு சார்பானவராகத் தன்னை இனங்காட்டிக் கொள்வார். இந்த இரட்டை வேடத்துடன் நடமாடிய படி தகவல் சேகரிப்புகளில் ஈடுபடுவார்கள். தேவைப்படும் பட்சத்தில் தாக்குதல் சார்ந்த பணிகளிலும் தம்மை ஈடுபடுத்திக்கொள்வார்கள்.

மூன்றாவது மனம்மாற்றப்பட்ட ஒற்றர். தமிழ்த்தேசிய உணர்வாளர்களுக்குள் பயன்மிக்கவர்களை எதிரி தமது வலைக்குள் வீழ்த்துவதாகும். இவர்கள் காசுக்காக எதையும் செய்யும் துரோகிகளாக மாறிவிடுவார்கள். இம்மோசமான சுயநலக்காரர்கள் தமிழீழ விடுதலைக்கு மோசமான பாதிப்புகளை உண்டுபண்ணுபவர்கள்.

நான்காவது உள்ளூர் ஒற்றர் தமிழர்தாயகப் பகுதிகளிலே நிரந்தரமாக வாழ்ந்துகொண்டு எதிரிக்குத் தகவல்களை வழங்குபவர். மக்களுக்குள் கசியும் தகவல்களையும், இயக்க நடமாட்டங்கள், செயற்பாடுகள் பற்றிய அவதானிப்பு தகவல்களையும் சேகரிப்பவர்.

ஐந்தாவது காப்பான ஒற்றர் சிறிலங்காப் பகுதிகளில் நிரந்தரமாக வாழும் இவர்கள் பொருத்தமான மறைப்புக் கதைகளுடன் தமிழீழப் பகுதிக்குள் உள்நுழைந்து புலனாய்வு வேலைகளை மேற்கொள்வார்கள். வேவு பார்த்தல், தகவல்களை உறுதி செய்தல், தொடர்புகளைப்பேணுதல் என இவர்களது பணிகள் இருக்கும். கிடைக்கும் அனைத்து அறிக்கைகளையும் பாதுகாப்பாக எதிரியிடம் சேர்ப்பிப்பார்கள்.

இவ்வகையான ஒற்றரடங்கிய படை தமிழீழப் போர்க்களத்திற்கு அப்பால் இராணுவ சீருடை அணியாத சிறிலங்கா புலனாய்வு அதிகாரிகளால் வழிநடத்தப்படுகின்றது.

தமிழீழ போர்க்களத்தில் காணப்படும் சிங்களப் படையினரின் பலவீனத்தை ஈடுசெய்வதற்காகவும், தமிழரின் படைப்பலத்தைப் பலவீனப்படுத்துவதற்காகவும், இது சிறிலங்காப் புலனாய்வு அமைப்பினால் பின்னப்பட்டிருக்கும் உளவு வலைப்பின்னலாகும்.

இத்தகைய எதிரிப் புலனாய்வு அமைப்பிற்கு நவீன நிபுணத்துவ ஆலோசனைகளை இந்தியா, இஸ்ரேல், அமெரிக்கா, பிரிட்டிஸ், பாகிஸ் தான் ஆகியநாடுகள் வழங்கி வருகின்றன.

அத்தோடு நவீனத்துவப் புலனாய்வுப் பயிற்சிகள், நவீன தொழில்நுட்ப உதவிகள், நிதி உதவிகள், பயன்மிக்க தகவல் உதவிகள் என அந்நாடுகள் வழங்கி பக்கத் துணையாக இருக்கின்றன.

இவ்வளங்கள் ஒரு புறம் இருக்க தமிழ்த் தேசிய விரோத சக்திகளின் ஆளணி வளமும் எதிரிக்கு பக்கபலமாக இருந்து வருகின்றது.

இவ்வளம்மிக்க, பலமுள்ள சிறிலங்காப் புலனாய்வு அமைப்பானது சிங்கள இனவாத பௌத்த

**நீலன்**

மத அடிப்படைக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

அவ்வமைப்பிலுள்ள புலனாய்வாளர்களின் உணர்ச்சி முழுவதும் தமிழரின் தேசிய வாழ்வை சிதைப்பதற்கான எண்ணங்களால் நிரம்பிக்கிடக்கின்றது.

இம்மூல எண்ணக்கருவின் இலக்கை எட்டுவதற்காக தமிழரின் மனிதவளத்தையே அதிகம் சிங்களம் பயன்படுத்தி வருவதே சோகமான உண்மையாகும்.

அதாவது தாயகப்பகுதியில் உள்ள சந்துபொந்தெல்லாம் சிங்களப் புலனாய்வு அதிகாரிகளுக்குத் தெரியும் என்பார்கள். அது ஓரளவு நிஜம் தான் சந்துபொந்தெல்லாம் மாத்திரமல்ல தாயகப்பகுதிகளில் நடைபெறும் செயல்பாடுகளும் தெரியும்.

காரணம் தமிழ் ஒற்றர்களையே உபயோகிக்கின்றார்கள் என்பதுதான்.

சிங்களப் போர்விமானத்தின் விமானிக்கோ, அதனை வழிநடாத்தும் அதிகாரிக்கோ ஒரு இலக்குக்குரிய தகவலும் தெரியாது. ஆனால் விமானத்தினால் விடுதலைப் போருக்கு, தாயகப் பகுதிக்கு ஏற்படும் பாதிப்பு ஆழமானது. அவ் இலக்குகளுக்குரிய தகவல்களை வழங்குபவர்கள் தமிழ் ஒற்றர்களே.

இவ்வொற்றர்களால் வழங்கப்படும் தகவல் வளங்களினை ஆரம்பப்புள்ளியாக வைத்தே ஆளில்லாத உளவு விமானம்(U.A.V) தாயக வான்பரப்பில் உளவு வேலைகளை மேற்கொள்கின்றது. இதனால் தாக்குதலுக்கான இலக்குகளை துல்லியமாகப் படம் எடுக்கின்றது.

இத்தகைய தொழில்நுட்பப்புலனாய்வுச் செயற்பாட்டிற்கு உயிர்நாடியாக மனிதவளப்புலனாய்வு உள்ளது. இந்த தவிர்க்கப்படவியலாத யதார்த்தத்தை ஒத்த உதாரணம் ஒன்றைப் பார்ப்போம்.

> ***எதிரியின் சூழ்ச்சி வலைக்குள் வீழ்ந்து உரிமைப் போரை காட்டிக் கொடுக்க முனையும்போது தாமதங்கள் ஏற்படவே செய்யும். அது நெருக்கடிக்குள்ளாகவும் நேரிடும். அதனால் தமிழர்களின் மனிதவளம் இன்னும் பாதிப்பிற்குள்ளாகவே செய்யும். தேசத்துரோகம் இழைத்த தமிழ் ஒற்றர்களைத் தமிழீழ தேசம் ஒருபோதும் மன்னித்ததும் இல்லை. மன்னிக்கப்போவதும் இல்லை. அத்துரோகிகளும் தம்முயிரை இழக்கவே நேரிடுகிறது. ஒட்டுமொத்தமாக தமிழரின் மனிதவளம் அழிவின் விளிம்பிற்கு இட்டுச் செல்வதே சிங்களப் புலனாய்வாளர்களின் நோக்கம்.***

பலஸ்தீன ஹமாஸ் இயக்கத்தலைவர் யாசீன் கொல்லப்படுவதற்கு முன்பு இன்னொரு ஹமாஸ் இயக்கத்தலைவர் கொல்லப்பட்டார். இத்தாக்குதலுக்கு நவீன தொழில்நுட்ப உலங்குவானூர்திகள் ஈடுபடுத்தப்பட்டது. இதிலிருந்து ஏவப்பட்ட ஏவுகணைகள் இலக்கை அழிப்பதற்கு காரணமாக அமைந்தது. கண்ணுக்குத் தெரியாத மை காரின் மேற்பரப்பில் பூசப்பட்டதனாலாகும். அதாவது செய்மதிகளின் உணரிகள் குவியம் கொள்ளக்கூடிய இம் மையை பூசியவர் இஸ்ரேலினால் விலைக்குவாங்கப்பட்ட ஒற்றராகும்.

இதுபோன்றே மனிதவளப் புலனாய்வு ஆழமாகவும், விசாலமாகவும், உறுதியாகவும் பின்னிப்பிணைந்துள்ளதாக இருக்கும்.

எதிரிப்புலனாய்வாளர்கள் தமது கழுகுப்பார்வையைச் செலுத்தாத எந்த ஒரு துறையும் தாயகப் பகுதிகளில் இல்லை. அதற்கான மூலவளம் தமிழ் ஒற்றர்கள்.

சிறிலங்கா புலனாய்வாளர்கள் மனித மனங்கள் பற்றி நன்கறிந்தவர்கள். அதுவும் தொடர்ச்சியான மன நெருக்கீடுகளுக்குள் உள்ள தமிழர்களுக்கு உளப்பரிகாரம் தேவைப்படும் என்பதனை அறிந்தவர்கள்.

அதாவது எத்தகைய அணுகுமுறைகளைக் கையாண்டால் தமிழர்களை உள்வாங்கலாம் என்பதும், எத்தகைய சலுகைகளை வழங்கினால் தமிழர்களது மனங்களை தம் பக்கம் ஈர்த்தெடுக்க முடியுமென்பதில் அனுபவமுள்ளவர்கள்.

இப்படி மனோவியல் ரீதியாக தமிழர்களை சிங்களம் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்து தம் புலனாய்வுவேலைகளை முன்னெடுக்கின்றது. இச் சூழ்ச்சிகரமான வேலைகளுக்காக தமிழரின் மன அரங்கை ஒரு களமாக மாற்றி, தமிழரின் இருப்புக்கே ஆணிவேராகக் கருதப்படும் பாதுகாப்புப்பலத்தை சிதைக்கும் இலக்கைக் கொண்டதாகும்.

இவ்விலக்கை எதிரி எட்ட முடியாதவாறு பார்த்துக்கொள்ளக் கூடிய மனப்பலம் ஒவ்வொரு தமிழரிடமும் உண்டு. தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் தாயகத்தைப் பாதுகாக்கும் எண்ணம் மேலோங்க வேண்டும். இவ்விழிப்புணர்ச்சி தமிழர்களிடம் இருக்கும்வரை சிங்களத்தால் எதனையும் சாதிக்கவே முடியாது போகும்.

இங்கு அபிசீனியா (தென்னாபிரிக்கா) நாட்டு மக்களது விழிப்புணர்ச்சியை வெளிப்படுத்திய உண்மைக்கதையொன்றை அறிவோம்.

இரு வெளிநாட்டு ஒற்றர்கள் அபிசீனியாவில் உள்ள பொருளாதார வளங்கள் பற்றிய தகவல்களை சேகரிப்பதற்காக அந்நாட்டினுள் நுழைந்தார்கள். அங்குள்ள மக்களை சந்தித்து தகவல்களைப் பெற முயற்சி செய்தபோதும் எந்தவொரு தகவல்களையும் பெறமுடியவில்லை. மாறாக மக்கள் தம் வாயைக் கையால் பொத்திக் கொண்டார்கள். அத்தோடுநின்றுவிடாது அவ்வொற்றர்கள் தொடர்பான தகவலை தமது மன்னருக்குக் கிடைக்கச் செய்தார்கள். பின்னர் ஒற்றர்கள் இருவரும் மன்னரால் நாடு கடத்தப்பட்டார்கள்.

இத்தகைய உணர்வுமிக்க நிகழ்வுகளும் தமிழர் தாயகத்திலும் வரலாற்றுப் பதிவுகளாக இருக்கின்றன.

(தொடர்ச்சி 19ஆம் பக்கம் பார்க்க)

# “பேச்சு மறுக்கப்பட்ட பொம்மைகளும் பெரிய இடத்து மோசடிகளும்”

நீண்ட காலமாக பாவனையில் இருந்து வந்த தனது பாரிய போர்க் கப்பல் ஒன்றினை பிரிட்டிஷ் அரசாங்கம் கப்பலில் ஆயுட்காலம் காலாவதி ஆனதைத்தொடர்ந்து, கடல்வாழ் உயிரினங்களுக்கான சரணாலயம் ஆக ஆக்கும் பொருட்டு, கடலினுள் ஆழ்த்திய சம்பவம் சில நாட்களுக்கு முன்னே நடந்தேறியது. கடல்வாழ் உயிரினங்களின் தங்ககமாகப்பயன் படும் அதேவேளை, சுழியோடிச் சுற்றுலாப்பிரயாணிகளைக் கவர்ந்திழுக்கும் விடயமாகவும் இது இருக்குமென, பிரிட்டிஷ் அரசு பெருமை பாராட்டுகிறது. இயற்கையையே தம் தொட்டிலாக வகுத்து வாழும் கடலடி உயிரினங்கள் மீது இப்படியொரு காதல் பிறக்கக்காரணம் எது? வெகுதூரம் போகத் தேவையில்லை. காசேதான் கடவுளடா! ஐக்கிய அமெரிக்காவைப் போலன்றி ஐரோப்பியக்கூட்டமைப்பைச் சேர்ந்த நாடுகள் பல்வித சட்டங்களை இயற்றி, சுற்றுப் புறச் சூழலைப் பாதுகாப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. உற்பத்தியாளர்களே தாம் பயன்படுத்தும் மூலப் பொருட்கள் மீண்டும் சுத்திகரிக்கப்படுவதற்கான பொறுப்பை சுமப்பவர்களாக உள்ளனர். எடுத்துக்காட்டாக ஒரு கார் உற்பத்தி நிறுவனம் தன்னுடைய தயாரிப்புகள் பழுதடைந்து இயங்காநிலைக்குச் சென்ற பின்னர், அதிலுள்ள உலோக, அலோக செயற்கை மூலப்பொருட்களினாலான பாகங்களை உரிய முறையில் பிரித்தெடுத்து, இயற்கையின் போக்கோடு மீள்பாவனைக்கு உட்படுத்த வேண்டும். மின்னுபகரணங்களின் நிலையும் இவ்வாறே மாறி வருகின்றது. சாதாரண மின்கலங்கள் கூட பகுக்கப்பட்டு, நகராட்சி மையங்களினால் மீளப் பெறப்படுகின்றன. இவ்வாறு நிலமை இருக்க பல்லாயிரம் தொன் எடையுள்ள போர்க்கப்பலை அக்கு வேறு ஆணி வேறாகப்பிரித்தெடுத்து, சட்டத்தை மதிப்பதென்பது எவ்வளவு செலவாகும் சமாச்சாரம்! ஆகவே தான் இந்த மீனுக்கு வீடுகட்டிக்கொடுக்கும் கருணை உதித்தது. கூடவே, ஆழ்கடல் அதிசயங்களைக் காண வரும் சுழியோடிகளிடம் ஆளுக்கு பத்து பவுன்ஸ் வாங்கினாலும், இன்னுமொரு கப்பல் கட்டப் போதுமல்லவா! என்ன கடுமையான யோசனை? இப்படிப்பட்ட அறிவாளி அரசின் கீழேயே அறிவாளி அடிமைகளாக இருந்திருக்கலாமென்று நப்பாசைப் படுகிறீர்களா? பொறுங்கள்! இப்படியிருக்கும் இன்னும் பலரையும் இனம் காணுங்கள். முதலிலே!

1993ஆம் ஆண்டு மே மாதத்தில் தாய்லாந்தின் பாங்கொக் நகரத்தில் அமைந்திருந்த kader Toy Factory தொழிற்சாலையில் பாரிய ஒரு தீ விபத்து ஏற்பட்டது.1100 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக்கொண்ட நான்கு மாடிக் கட்டடத்தில்,ஏற்கெனவே இரண்டு முறை தீவிபத்துச் சம்பவித்திருந்தும், தகுந்த நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப் படாமல், நெருக்கமான அறைகளில் தொழிலாளர்கள் அடைக்கப்பட்டிருந்தனர். இலகுவில் தீப்பற்றக் கூடிய மூலப்பொருட்களைக் கொண்டிருந்த இக் கட்டடத்தின் சாளரங்கள் கம்பி வலை இடப்பட்டும், கதவுகளும் பூட்டப்பட்டு இருந்ததினால் 188 பேர் பலியாகினர். 469 பேர் படுகாயமடைந்தனர். ஏன் இவ்வாறான நெருக்குவாரங்களை இப்பெண் தொழிலாளர்கள் சந்தித்தனர் என்று எண்ணுகிறீர்களா? முதலாம் உலக நாடுகளோடு ஒப்பிடுகையில், மிகவும் குறைந்தளவு தொழிலாளர் உரிமைகளையே பரிந்து பேசும் தாய்லாந்தின் சட்டங்களுக்குப் புறம்பாக, இந்த நிறுவனத்தின் நடை முறைகள் இருந்ததுதான் அதற்குக் காரணம். 13 வயதுச் சிறுமிகளையும் வேலைக்கு அமர்த்திக்கொள்ளும் இந் நிறுவனம், அவர்களைத் தொடர்ச்சியாக 19 மணித்தியாலங்கள் வரை வேலை செய்ய நிர்ப்பந்தித்ததோடு, தாய்லாந்தின் அடிமட்டக்கூலியின் பாதியையே ஊதியமாக அவர்களுக்கு வழங்கியது. தங்களுடைய மேலாளர்களின் விருப்பிற்கிணங்க, பொருட்களை மிகக் குறைந்த விலையில் உற்பத்தி செய்வதற்காக, தொழிலாளர்களைச் சுரண்டினார்கள். ஆமாம்! இந்தத் தொழிலாளர்கள் அப்படி என்னதான் உற்பத்தி செய்தார்கள்? அமெரிக்க நிறுவனங்களான Mattel மற்றும் Hasbro இற்கான ரெலிரபீஸ், பார்பி, போக்கமோன், மொனோபொலி ஆகிய பொம்மை உருவங்களையும், அவை சார்ந்த ஆடை, பை, கைக்குட்டை என்று இன்னோரன்னவற்றையும் தான்! ஒன்று அல்லது இரண்டு டொலர்களுக்குள் தயாரிப்புச் செலவை உள்ளடக்கும் போக்கமோன் 40-50 மடங்கு விலையில் விற்கப்பட்டு, மக்களின் (வசதிபடைத்த) வாழ்வியலோடு ஒன்றித்து மகிழ்ந்திருக்க,அவற்றின் உண்மையான உற்பத்தியாளர்கள் உயிரறு நிலையில் சுரண்டப்படுகிறார்கள். தங்களது வறுமைநிலை காரணமாக அங்கு தொழில்புரிந்தவர்களில் எஞ்சியோரும்,உறவினரும் சட்டத்திடம் நியாயம் கேட்டபோது, “இருக்கும் வேலையைக்கூட. இழக்கப் போகும் முட்டாள்களாக இருக்கிறீர்களே!” என்று பொறுப்பான(?) நீதியதிகாரியிடமிருந்து பதில் வந்தது.

மேலே நடந்தது போல் ஒன்றல்ல,பல சம்பவங்கள்!1993ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சீனாவிலுள்ள வெஷாங்கொங்கை அண்டியுள்ள சென்ஷென் என்னுமிடத்திலுள்ள, விளையாட்டுப் பொருட்கள் உற்பத்திசெய்யும் இடத்திலேற்பட்ட தீவிபத்தில்,87 பேர் கருகி இறந்ததுடன்,47பேர் படுகாயமுற்றனர். இத்தாலிய நிறுவனமான S.P.A.chicco இற்காக வேலை செய்தவர்கள்தாம் இவர்கள் பாரிய இயந்திரங்களின் தேவையற்ற,மனித உழைப்பையே பெரிதும் நம்பியுள்ள இத்துறைசார் நிறுவனங்கள், பெருந்தொகையான தொழிலாளிகளை ஒதுக்குப்புறமான பிரதேசங்களில் அடைத்து வைத்து வேலை வாங்குகின்றன.

ஐரோப்பிய நாடுகளில் வருடாந்தம் ஒவ்வொருவரும் விளையாட்டுப்பொருட்களுக்கென 200, யூரோவை (நம்முடைய மதிப்பு25 ஆயிரம்) செலவிடுகிறார்கள். விற்பனை விலை இப்படியிருக்க, இவற்றின் உண்மையான விலையை தாய்லாந்திலும், சீனாவிலும் இன்னும் பல வறிய நாடுகளிலும் உருக்குலைந்து போன தொழிலாளர்களின் பிணங்கள் சொல்லும்.

விளையாட்டுப் பொருட்கள் பற்றிப்பேசும் போது தவறாமல் நம் மனதில் எழ வேண்டியது வோல்ற் டிஸ்னி. ஆமாம், அவர்களின் கைவரிசை எப்படியிருக்கிறது? சீனப் படையில் சேர்ந்து பெரிய வெற்றியைத் தன் நாட்டிற்கு ஈட்டிக் கொடுக்கும் முலான் என்னும் சீன வீரன் பற்றிய மரபுவழிக்கதையை (Walt Disney)வோல்ற் டிஸ்னி கார்ட்டூன் படமாக்கியது. அது மட்டுமல்லாமல் மிகுந்த பிரயத்தனங்களின் பின்னர் சீனாவில் அதை வெளியிட அனுமதியும் பெற்றது. அமெரிக்க நிறுவனத்திற்கு சீன வீரனின் புகழ் பரப்பும் ஆசை ஏன் வந்ததென்று எண்ணுகிறீர்களா? ''ஊரான் வீட்டுப் பிள்ளையை ஊட்டிவளர்த்தால், தன்பிள்ளை தானாய் வளரும்'' என்பதைப் போலத்தான்.முலான் படம் ஓடிமுடிக்கவில்லை, தங்களின் பிள்ளைகளைச் சமாளிக்க முடியாமல்,இதுவரை தங்கள் பிள்ளைகள் அறியாதிருந்த மிக்கி மௌஸ், டொனால்ட் டக், பம்பி, சின்டெறெலா என்று ஏதேதோ கேட்டு கடை கடை யாய் அலைகிறார்கள் சீனப் பெற்றோர்கள். 1200 மில்லியன் மக்களை சனத்தொகையாகக் கொண்டசீனாவில், “வீட்டுக்கு ஒரு பிள்ளை மிக்கி மௌஸ் வேண்டுமென்று அடம் பிடித்து வீதிக்கு வந்தால்'', வோல்ற் டிஸ்னியின் தோட்டம் பெருகாதோ!!

என்ன இருந்தாலும் 70 வயதைத் தாண்டிவிட்ட மிக்கி மௌஸ் தன்னை நேசிப்பவர்களோடு அன்பாய்த்தான் இருக்கும்,என்று நீங்கள் அங்கலாய்ப்பது தெரிகிறது.16 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களையும் வேலைக்கு அமர்த்தும் வோல் டிஸ்னியின் துணை நிறுவனங்கள்,கிழமையில் ஏழு நாட்களும் வேலை வாங்குவதோடு, அங்கு தொழிலாளர்கள் 18மணித்தியாலங்கள்வரை வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். கொடுப்பனவுகளும் ஒழுங்காய் தரப்படுவதில்லை என்று குறை கூறும் இவர்களுக்குக் கிடைப்பது மாதமொன்றிற்கு நம்முடைய மதிப்பில் 5000 ரூபாமட்டுமே. இது சீனாவின் ஆகக்குறைந்த கூலியுடன் பார்க்கையிலே மிகமிகக் குறைவு. ஆமாம்! வோல்ற் டிஸ்னியின் முகாமையாளர் மைக்கல் ஜஸ்னர் எவ்வளவு பெறுகிறார் என்று அறிய விரும்புகிறீர்களா? பொறுங்கள் ....! அப்பாடா! 700மில்லியன் இலங்கை ரூபா (70கோடி). சீனாவிலும் ஏனைய நாடுகளிலும் சின்னப் பிள்ளைகளை வைத்து வேலை வாங்கிச் சுருட்டிக் கொண்டதும், கொடுக்காமல் சுற்று மாற்று வித்தைகளால் சுருட்டி வைத்திருக்கும் நஷ்டஈடுகளும் (தொழிலாளர்களுக்குப் போய்ச் சேரவேண்டியது) இந்த 70 கோடிக்குள் தான் எங்காவது மறைந்திருக்கும்.



சில வேளைகளில் உலகைப்புரிந்து கொள்ள முடியாதிருக்கும். சிறுவர்களுக்கான(ஏன் பெரியவர்களுக்கும் சேர்த்துத்தான்) விளையாட்டுப் பூங்காக்களை மேனாடுகளில் (கட்டணம் அறவிடப் படும்) அமைக்கும்,“வேணர் பிறதர்ஸ்” தான் தன்னுடைய CNN செய்தி நிறுவனம் ஊடாக,தாங்கள் ஈராக்கில் சிதறடித்த சிறார்களின் உடல்களுக்கு பயங்கரவாதம் பூசிமெழுகுகின்றது.

தொழிலாளர்கள் உரிமைகள் கணக்கில் எடுக்கப் படாமல், அவர் தம் சுகாதாரம் பற்றிய முற்காப்பு நடவடிக்கைகள் செலவு கருதி புறந்தள்ளப்பட்டு வருவதால், பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. சிறிய அறைகளில் காற்றோட்டம் இல்லாத நெருக்கத்தில் தங்கி, தொடர்ச்சியாக வேலை செய்ய வேண்டி நிர்ப்பந்திக்கப்படும் தொழிலாளர்கள், வண்ண வண்ணமாக தாங்கள் வடிவமைக்கும் பொம்மைகளுக்கான இரசாயன சாயக்கலவையிலிருந்து வெளியேறும்' பென்செவ்' நஞ்சினூடாக வியாதிக்குட் படுகிறார்கள். தொடர்ச்சியாக இவர்களை வேலை செய்யப் பண்ணும் பொருட்டு, இவர்கள் அறியாமலேயே குடிநீரிலே, ஒரு வகை ஊக்கி மருந்து கலக்கப் படுகின்றது. நீண்ட நாள் அடிப்படையில் உடலுக்குத்தீங்கு விளைவிகக்கூடிய இதன் பாதிப்புக்கள் தெரிய வருமிடத்து, அந்தத் தொழிலாளியின் இடத்தை இன்னுமொரு சிறுமி நிரப்புவாள். இவை மட்டுமின்றி கடுமையான பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் இவர்கள் உள்ளாகுகின்றார்கள் என்று அரச சார்பற்ற தொழிலாளர் நலன் பேண் நிலையங்கள் தெரிவிக்கின்றன.

ஏதோ தொடர்ச்சியாக விளையாட்டுப்பொருட்களைப்பற்றி,அதுவும் நம் நாடு சம்பந்தப்படாத விடயங்களே சொல்லப்படுகின்றன என்று நீங்கள் சில வேளை அலுத்துக்கொள்ளலாம் அவ்வளவு அக்கறையின்றி இருந்து விடாதீர்கள்! சாப்பாட்டுக்கடைகளே சில சாம்ராச்சியங்கள் விழக் காரணமாய் அமைந்திருக்கின்றன. என்ன நம்பவில்லையா? இந்த நான் குறிப்பிடும் சாப்பாட்டுக் கடை ஒரு வலைப் பின்னல் வகையைச் சார்ந்தது. உலகம் பூராக 118 நாடுகளிலே முப்பதாயிரம்கிளைகள் உள்ளன மொத்தத்தில் தினந்தோறும் 46 மில்லியன் விருந்தி னர்களால் நிரப்பப்படும் இந்தக் கிளைகளில் கிடைத்த இலாபம் 2002இல் 160மில்லியன் ரூபா. எடுப்பாக அழகிய சீருடை அணிந்து இங்கெல்லாம் வேலை செய்யும் 15 இலட்சம் அப்பாவித் தொழிலாளர்கள் பெறுவதோ அப்படி இப்படித்தான், தவித்த வாய்க்கு தண்ணீர் போல! எதுவெ ன்று தெரிகின்றதா? கொழும்புக்கு சென்றவர்கள் கண்டிருப்பார்கள். MC Donald's தான் இங்கு குறிப்பிடப்படுவது.அறுசுவை உணவினாலும், விருந்தோம்பல் பண்பினாலும் இத்தனை மக்களையும் கவர்ந்திழுத்திருக்கின்றது இது வென்று அப்பாவித்தனமாக எண்ணி விடாதீர்கள்! 50 வருடத்திற்குள் இப்படியான ஒரு அசைக்க இயலாத சாம்ராச்சியமாக இது உருவெடுக்க முடிந்தது, அந்தந்த நாடுகளில் அரசியலுக்குள் மூக்கை நுழைத்து, தங்களுக்குச் சார்பானவற்றை சாதித்துக் கொள்வதால் தான்! செலவுகுறைந்த, போசாக்கற்ற தம் fast-food மற்றும் செயற்கை ருசி ஊக் கிகள் மூலமும் உள்நாட்டுச் சந்தையை தம்வழி கொண்டு வரும் இந்த நிறுவனம்,தம் மிகப் பெரிய பொருளாதார-அரசியல் பலத்துடன், உள்ளூர் வால்பிடி களைக் கொண்டு கொழுத்த இலாபம் சம்பாதித்துக் கொள்ளும் மாடுகளுக்கு நோய் வந்த பின்னரும் தடை செய்யப்பட்ட இறைச்சியினைப் பயன்படுத்தி வந்ததும், பிடிபட்ட பின்னர் இடம் மாற்றியதும் ஒன்றும் புதிதல்ல இவர்களுக்கு சின்னத்துண்டு இறைச்சியுடன் ஒரு பொம்மையை வைத்து, Happy Meal என்ற பெயருடன் விற்கும்,இவர்களின் வியாபார தந்திரம் நன்றாகவே எடுபட்டது. வயிறு நிரம்பாத இந்தச் சாப்பாட்டிற்காக அடம் பிடிக்கும் பிள்ளைகளின் ஆசையைப் பூர்த்தி செய்யும் பெற்றோரின் பொக்கற்காலியானது தான் மிச்சம். இந்தப் பொம்மைகள் வறிய நாடுகளில் மிகமிகக் குறைந்த செலவில் செய்யப்படு கின்றன. உதாரணமாக Mc Donald's ,இற்காக வியற்னாமில் பொம்மைகளைத் தயாரிக்கும் Key Hinge Toys நிறுவனத்தில் 1000 பேர் வரை வேலை செய்கிறார்கள். தினமும் பத்து மணித்தியாலங்கள் வரை பணிபுரியும் இவர்களிற்கான மணித்தியாலக்கூலி 6,-இலங்கை ரூபா மட்டுமே!பாதுகாப்பு நடவடிக் கைகள் ஏதுமின்றி இந்தத் தயாரிப் பிற்காகப் பயன்படுத்தப்படும் (Aceton) அசெரோன் என்ற நஞ்சினால் பாதிக்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்ட 200 பேரினது வைத்தியச் செலவை நிர்வா கம் பொறுப்பெடுக்க மறுத்து விட்டது.Mc Donald's உம் அளவுக்கு மீறிய வெறும் கட்டுக் கதை இதுவெனச் சாதித்து விட்டது.

‘எங்கோ நடப்பதற்காக நாம் என்ன செய்யலாம்?’ என்றோ ‘கொஞ்சம் புசித்துப்பார்ப்பதினால் என்ன குடியா மூழ்கிவிடப் போகிறது?’ என்றோ எண்ணுகிறீர்களா? மின்சாரம் இல்லை... அதனால்...தொலைக்காட்சி இல்லை.....தொல்லைகளும் இல்லை இந்தப் பண்பாட்டு படையெடுப்புகளுக்கு நுகர்வோராகிய நாம் வாசல் அமைத்து கொடுப்போமேயானால், எங்கள் நிறுவனங்கள் கூடவே சேர்ந்து தெருவோர தேநீர்க்கடைகளும் வெறுமனே நிழலுக்காக ஒதுங்கும் குந்துகளாகிவிடுமென்பது நிச்சயம். இந்தக்கடைகளையே தங்கள் வாழ்வாதாரங்களாகக்கொண்ட பணியாளர்களின் குடும்பங்களின் நிலையும் நிர்க்கதிதான்! போயும் போய் வயிற்றுக்காக வாழ்வைத்தொலைத்த ராமர்களாக நம்மை வரலாற்றில் பதிவு செய்துகொள்ளவேண்டாம்! ஆகவே, சிந்தித்து சுவைப்போம்! எல்லோரும் சிரித்திருக்க சுகம் காண்போம்!!

**ச.ஞாலவன்**

☞ ஆழச் சிந்தியாமல், செயலில் ஈடுபடாதே. - அபுல் காஸிம்ஃபிர்தோஸி

# கர்ப்பவதிகள் ஏன் இரத்தப்பரிசோதனை செய்யவேண்டும்?


ஒரு பெண் கருவுற்றிருப்பதை அறிந்து கொண்டதும் அவள் அருகேயுள்ள மகப்பேற்றுநல கிளினிக்கிற்குச் செல்ல வேண்டிய அவசியம் பற்றி இன்று அனேகமானவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். குடும்பநல உத்தியோகத்தர்கள் தமது இல்லத்தரிசிப்பின்போதும் இதை வலியுறுத்துகிறார்கள். இதனால் இன்று எமது நாட்டில் தாய்சேய் நலக் கிளினிக்குகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

எனினும் எல்லாக் கிளினிக்குகளிலும் எல்லாவிதமான வசதிகளும் இருப்பதில்லை. கிராமப்புற கிளினிக்குகளில் பரிசோதனைகள் மூலம் இனம் காணப்பட்ட சில பிரச்சினைகளை உறுதிப்படுத்தவும், அவற்றிற்கான பரிகாரம் தேடவும் பெரிய வைத்தியசாலைகளிலுள்ள சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்க முடிகின்றது.

ஒரு பெண் கர்ப்பமுற்று, அவள் குழந்தைபெற்றுக் கொள்ளும் வரையான காலத்தை மூன்று பகுதிகளாக நாங்கள் பிரித்துக் கொள்கின்றோம். ஒவ்வொரு பகுதியிலும் சில குறிப்பிட்ட பரிசோதனைகள் செய்து பார்த்து, அதன் மூலம் பிறக்கப் போகும் குழந்தைக்கோ அல்லது தாய்க்கோ ஏதும் குறையிருக்கிறதா என்று கண்காணித்துக்கொள்ள முடிகின்றது.

பேறு காலத்தின் முதல் பகுதியில் செய்யப்படும் முக்கியமான பரிசோதனைகளும் அடங்கும்.

இரத்தப்பரிசோதனையை ஏன்மேற்கொள்கின்றோம்? கர்ப்பிணிப் பெண்ணுக்கு இரத்த சோகை இருக்கிறதா, சலரோகம் (நீரிழிவு) இருக்கிறதா? பால்வினை நோய்த்தொற்றுக் குள்ளாகியிருக்கிறதா போன்ற சில முக்கியமான நோய்களைப்பார்த்து அதை இனங் கண்டால், அவற்றுக்கான சிகிச்சைகளை மேற்கொள்ள லாம். தைரோயிட் குறைபாட்டு அறிகுறிகள் தென்பட்டால் அதற்கான இரத்தப் பரிசோதனையையும் மேற்கொள்ளவேண்டும்.



இதைவிட ஒரு பெண்ணின் இரத்தப்பிரிவை (BLOOD GROUPING) அறிதலும் முக்கியமாகும். இதற்கு ஒருகாரணம், பிரசவத்தின்போது அவசரமாக இரத்தம் ஏற்றிட வேண்டி ஏற்பட்டால் அதற்கான முன் ஆயத்தங்களைச் செய்திட உதவுதலாகும். மற்றது மிக முக்கியமானது நம் இரத்தத்தில் A,B,O,AB என்று முக்கிய வகைகள் இருப்பதை நாம் அறிவோம். இதை விடமுக்கியமான இன்னொரு விடயமும் உண்டு. அது RHஇது இரத்தவகைகளில் இன்னொரு உபபிரிவு நூற்றுக்கு 85 பேரில் இது (+) ஆகவும், ஏனையவர்களில் இது (-) ஆகவும் இருக்கும் அதாவது 85 பேரில் இருக்கும் 15பேரில் இருக்காது.

சரி, இனி ஏன் இந்த உபபிரிவுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றோம் என்பதைப் பார்ப்போம்.

கர்ப்பமடைந்த ஒரு தாயின் இரத்தம் RH(+)என இருக்கும் போது அவதானம் தேவை அப்படியான சந்தர்ப்பங்களில் அவரது கணவரின் இரத்தத்தையும் நாம் கட்டாயமாகப் பரிசோதிக்கவேண்டும். கணவனின் இரத்தப்பிரிவு RH(-) வகையாக இருந்தால் பிரச்சினை இல்லை. ஆனால் அவரது இரத்தம் RH(+)ஆக இருந்தால் பிறக்கப்போகும் குழந்தையின் இரத்தமும் RH(+) ஆக இருக்க அதிக வாய்ப்புண்டு.

ஒரு RH(-)இரத்த வகைத் தாயவளின் கருவில் வளரும் குழந்தை RH(-)இரத்தத்தைக் கொண்டிருந்தால், தாயின் உடல் தனக்குச் சம்பந்தமில்லாத ஒருவகை இரத்தம் உடலில் இருப்பதை உணரும் இதனால் இதை எதிர்க்கும் அணுக்களை தனது இரத்தத்தில் உருவாக்கத்தொடங்கும். பொதுவாக இவ் எதிர் அணுக்கள் முதலாவது குழந்தையை பாதிப்பதில்லை.

எனினும் அடுத்த முறை அந்தத் தாய் கர்ப்பமுறும் போது பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். அம்மாவின் உடலில் ஏற்கெனவே கடந்த பிரசவகாலத்தில் உருவான எதிர்ப்பு அணுக்கள் இம்முறை குழந்தையின் உடலுக்குள் போய் மெதுவாக கருவிலுள்ள குழந்தையின் இரத்த அணுக்களைச் செயலிழக்கச்செய்யும். இதனால் கருச்சிதைவு, குழந்தை கருவிலே இறந்து போதல், இதய நோய்வாய்ப்படல், உடலெங்கும் நீர் கோர்த்தல் (Hydrops foetalis) முதலான நிலைகள் ஏற்படலாம். எனினும் தாய் RH(-) ஆகவும், பிறந்த குழந்தை RH(+) ஆகவும் முதலாவது பிரசவத்தில் இருந்தால் கூட எதிர்காலத்தில் வரக்கூடிய பிரச்சினைகளைத் தவிர்த்துவிட நாம் முன் நடவடிக்கையை மேற்கொள்ளமுடியும்.

RH(-) அம்மாவுக்கு RH(+) குழந்தை பிறக்கின்றது. என வைத்துக் கொள்ளலாம் இந்த பிரசவம் நடந்து 72 மணித்தியாலங்களுக்குள் தாய்க்கு ANTID IMUNO GLOBULIN என்ற ஊசி மருந்தை ஏற்றிவிட வேண்டும். இது "ரோகம்" என்ற பெயரிலும் அழைக்கப்படுகின்றது இதன் மூலம் பின்னர் பிறக்கப் போகும் குழந்தைகளுக்கு ஏற்படப் போகும் ஆபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

RH(-)அம்மாவுக்கு கருச்சிதைவு ஏற்பட்டாலும் கூட ஊசியைப் போடுதல் வேண்டும். அப்பா, அம்மா இருவரும் RH(-) ஆக இருக்கும் பட்சத்தில் குழந்தையும் RH(-)ஆகப் பிறக்கும் என்பதால் இப்பிரச்சினை தோன்றுவதில்லை. அதேபோலவே RH(-) அப்பாவுக்கும் RH(+) அம்மாவுக்கும் குழந்தை பிறக்கும்போது இப்பிரச்சினை தோன்றுவதில்லை.

பிறக்கும் குழந்தையின் இரத்தத்தை, பிறந்தவுடன் தொப்புள் கொடியிலிருந்து பெற்று RH பரிசோதனை செய்து பார்க்கமுடியும். RH(-) அம்மா பிரசவிக்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் குழந்தையின் RH பிரிவைச் சோதித்தல் அவசியமாகும். இதனால் எதிர்கால ஆபத்துக்களைத் தவிர்க்கமுடியுமல்லவா? எனவே கர்ப்பிணிப் பெண்கள் தமது இரத்தப்பிரிவை அறிந்து வைத்திருத்தல் அவசியமானதாகும்.

ச. முருகானந்தன்



# மாறவேண்டிய கருத்துருவாக்கங்கள்

பெண்கள் எவ்வளவு தான் முன்னேற்றங் கண்ட பொழுதிலும் பெண்கள் பற்றிய சமூகப்பார்வை என்பது இன்னமும் சாபக்கேடானதாகவே இருந்து வருகிறது. 2000 ஆண்டுகளுக்கு முன் 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்று வள்ளுவர் எழுப்பிய கேள்வி முதலாக இன்று வரை பெண்ணினம் கேள்விக் குறியாகவே இருக்கின்றது. பெண்களின் மாற்றங்களும், முன்னேற்றங்களும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியளவில் இருந்தாலும் பெரும்பாலும் துயரமும் ஆதங்கமும் நிறைந்தவையாகவே இருக்கின்றன. அண்மையில் நண்பர் ஒருவர், 'நீங்கள் (பெண்கள்) எல்லாம் நத்தைகள் ஓட்டுக்குள் தான் இருக்க வேண்டும்' என்று குறிப்பிட்டார். இது அவரது தனிப்பட்ட கருத்து என்றாலுங் கூட சமூகத்தில் காலம் காலமாய் பெண்கள் பற்றிய பார்வை இப்படித் தான் இருந்து வருகிறது என்பதற்கு இக்கூற்று சிறந்த எடுத்துக் காட்டாக அமைகிறது.

பெண்களின் ஆற்றல்களை பலமாக அங்கீகரிக்க பலரும் விரும்புவதில்லை. உதாரணமாக, யாருக்கும் அடங்காமல் அட்டகாசம் புரிந்து கொண்டிருந்த கொம்பன் யானையை தன் வலிமையால் அடக்கிக்காட்டிய வீரப்பெண் அரியாத்தை. ஆனால் இந்தப்பெண் தெய்வஅருளாலேயே யானையைப் பணியவைத்ததாக கூறுவோரும் உள்ளனர். அதாவது பெண்ணின் ஆற்றலை ஜீரணித்துக் கொள்ளமுடியாத நிலையில் வெளிப்படுத்தும் கருத்தே இதுவெனக் கொள்ளலாம். தமிழ் சமூகத்தில் மட்டுமல்ல உலகிலுள்ள பெரும்பாலான இனச் சூழலில் சமூகத்தில் இப்படியான கருத்துக்கள் இருப்பதை நாம் அறியலாம். பிரான்சின் மீது பிரிட்டிஸ் ஏகாதிபத்திய கரங்கள் நீண்டு விரிந்து தெரிந்த போது ஆர்க் எனும் கிராமத்திலிருந்து ஆவேசமாய் புறப்பட்டு ஆக்கிரமிப்பாளர்களை மோதி வென்று படைநடாத்திய வீரப்பெண் ஜோன் ஒப் ஆர்க் பின்னாளில் சூனியக்காரியென்று எள்ளி நகையாடப்பட்டு, உயிருடன் தீமூட்டிக் கொளுத்தப்பட்டாள் என்பது வரலாறு.

இன்றைக்கும் பல கிராமங்களில் பெண் பிள்ளைகள் பரீட்சைகளில் கூடிய பெறுபேறு பெற்றால், விளையாட்டுக்களில் பரிசுகள் பெற்றால் அதை பிள்ளையின் கெட்டித்

ஆதிலட்சுமி சிவகுமார்

தனம் என்று மெச்சுவதை விடுத்து 'கடவுளின் கிருபை' என்று மாற்றுவதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம்.காலம் காலமாக பெண்கள் பற்றி ஊன்றப்படுகின்ற கருத்து கருவூலங்களின் தோற்றப்பாடுகளே இவைகள் பெண்களின் உலகம் விரிவடைந்து வருகின்றது. பெண்கள் முன்னேறிவருகிறார்கள். பெண்கள் சாதித்து வருகிறார்கள். ஆனாலும் பெண்கள் மீதான சமூகப்பார்வை என்பது மாற்றம் காணாததாகவே இருக்கின்றது.

இத்தகைய நிலைக்குஎந்த ஒரு தனிநபரையும் குற்றவாளியாக கூற முடியாது சமூகத்தில் பெண்கள் பற்றி ஆழப்பதிந்திருக்கும் அடிப்படைக் கருத்தில் மாற்றம் காணப்படவேண்டும். பெண் என்பவள் யார்? இந்த உலக இயக்கத்தில் பெண்ணின் பங்களிப்பு என்ன? அவள் தனது பங்களிப்பை முழுமையாக செய்யவிடாமல் தடுத்துநிற்கும் காரணிகள் என்ன என்பவை பற்றி சிந்திக்க வேண்டியது அவசியமாகிறது.

எமது தேசியத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல, "ஆண்மைக்கும், பெண்மைக்கும் அப்பால் மனிதம் இருக்கிறது. அது மனிதப் பிறவிகளுக்குப் பொதுவானது". எனவே படைப்பியல் ரீதியாக பெண் வேற்றுமை காட்டப்படவேண்டியவளோ அல்லது அடக்கப்படவேண்டியவளோ அல்லது மாறாக பெண் என்பவள் சமூகச் சுழற்சிக்கு உந்து சக்தியாகத் திகழவேண்டியவள்.


ஆனால் மிகவும் துரதிர்ஷ்டவசமாக பெரும்பாலான பெண்கள் தம் நிலை உணர்வதில்லை. அகங்கள் குறுகியிருப்பதால் முன்னேற்றங்கள் தடைப்படுகின்றன. முன்னேற்றங்கள் தடைப்பட்டு குறுகிய வட்டத்துக்குள் வாழும் போது அவள் தன்னாலும் பிறராலும் சுமையாக உணரப்படுகிறாள். இந்த உணர்வு காலப் போக்கில் பெண்ணுக்குள் தாழ்வுச் சிக்கலை உண்டு பண்ணுகிறது.

காலங்காலமாய் பெண்பற்றி ஊன்றப்படும் பிற்போக்கான கருத்துகளும் பெண்ணுக்குள் உருவாகும் தாழ்வுச் சிக்கலும் சேர்ந்து அவளை அடிமைப்படுத்தி விடுகின்றன. அடிமையாகிப் போகும் மனநிலை காலப் போக்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதுவே வாழ்வாகிப்போகிறது. உண்மையில் பெண் என்பவள் தனக்குள் இருக்கின்ற திறமையை ஆற்றலை உணர்ந்து கொள்ளக்கூடியவளாக வேண்டும். கல்வியில் நாட்டங் கொண்டு சிந்தனைத் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். தலைமைத்துவப் பண்புகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும். தன்னம்பிக்கை அற்று ஒதுங்கிக்கொள்ளும் நிலையை மாற்றவேண்டும். நிர்வாகம் என்பது பெண்களுக்கும் ஏற்ற விடயம் தான் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்ற கேள்விக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின் என்றாலும் பதிலளிக்க வேண்டும் உலக சனத் தொகையில் சரிபாதி பெண்கள் என்கிறார்கள். முன்னேற்றங் காட்டும் அல்லது ஆற்றல்களை வெளிப்படுத்தும் பெண்களின் தொகை மிகவும் குறைவானதாகவே காணப்படுகிறது. உலகம் அறிவியலில் எவ்வளவோ தூரம் முன்னேறி விட்ட பொழுதிலும் பிற்போக்கான எண்ணங்களையும், சிந்தனைகளையும் பற்றிப்பிடித்து தொங்கும் பெண்களும் இருக் கத்தான் செய்கிறார்கள். இன்றைக்கும் சீதனப பிரச்சினையால் திருமணமாகாத பெண்களின் பட்டியல் இருக்கின்றது.


19ம்பக்கம் (பார்க்க...)



பிறருடைய சுதந்திரத்தில் குறுக்கிடாமல் தன்னுடைய கண்ணியத்தைக் காப்பதே, மனித ஒழுக்கத்தின் சாரம். - ஃபிரான்ஸிஸ் பேக்கன்




# இனி வசந்த காலம்



அலுவலகம் போன தாமரை மாலையில் வீடு திரும்பவில்லை. அன்று காலையில்தான். அவள் கணவன் தியாகராசன் வேலை செய்யும் தொழிலகத்தின் பிரதிநிதியாக கிளை அலுவலகம் இருக்கும் சேலம் நகர் போயிருந்தான். அவன் திரும்பிவர நான்கு நாட்களாகும். இரவு எட்டுமணி வரை தெருவைப் பார்த்துப் பார்த்து அலுத்துப்போன அத்தை பொன்மணி வீட்டைப் புட்டிக்கொண்டு படுத்து விட்டாள். அடுத்த நாள் காலையில் தெருவுக்குப் போன பொன்மணியிடம். தன் வீட்டு முகப்பில். கொடி மல்லிகையில் பூ எடுத்துக்கொண்டு நின்ற எதிர்வீட்டு ராணி "எங்கே தாமரை இன்னும் எழுந்திருக்கலயா?" என்று கேட்டாள். "இல்லை.." என்று பதிலளிக்க நினைத்த பொன்மணி "ராணி உள்ளே வந்திடுவாள். தாமரையை எழுப்ப.." என்றெண்ணி "அ வ தாய் வீடு போயிட்டா. இன்னிக்கு வந்திடுவா" என்றாள்.

மறுநாள் இருள் படர்ந்த நேரம்வரை வீடு வரவில்லை. இராணி. தன் வயதொத்த அடுத்த வீட்டுப் பெண்ணுடன். தாமரை வீட்டில் நடப்பதெல்லாம் அவளுக்குத் தெரிந்திருந்தது. "இவளின் கொடுமையால். அவள். அவனும் இல்லாத நேரம் பார்த்து போயிட்டாள்.. பாவம்.. எண்டாலும் அவள் துணிச்சல்காரி... புழைக்கத் தெரிஞ்சவ..." தனக்குள். இராணி சொல்லிக்கொண்டாள்.

"தாய்வீடு போயிருந்தா. அங்கிருந்து அலுவலகம்போய். மாலையில் வீட்டுக்கு வந்திடுவாளே..." அயலவரின் அபிப்பிராயங்கள் இது போல். சில. தாமரையைக் காண வில்லை. ஊரெல்லாம் செய்தி பரவியது. அயலவர் கூடிப் பேசினர் அவளின் பெற்றார் வீடு போய்க்கேட்டனர். கணவன் வெளியூர் போய்விட்ட வேளை நாம் உதவுவது கடமை" என செயல்பட்டனர். "இங்கேவர வில்லையே... ஐயோ.. எங்கட பொண் எங்கே..?" பெற்றார் கதறி அழுதனர். பொன்மணியை. காவல்துறைக்கு அழைத்துப்போய் முறைப்பாடு கொடுக்க அயலவர் உதவினர். தாமரைவேலை செய்த அலுவலகத்திலும். பெற்றாரிடத்திலும் பிற சிலரிடமும் விசாரித்து. அவள் போன வழி கண்டுபிடிக்காத பொலிசார் தியாகராசன் வரும்வரை விசாரணையை ஒத்திவைத்தனர்.

நான்கு நாள் நகர்ந்தன.

ஐந்தாம் நாள். காலை பத்து மணிக்கு அவன் வீடு வந்தான். பயணக் களைப்போடு. வரவேற்று . ஒரு தேனீர் தயாரித்துக்கொடுக்கும் தாமரையை அங்கு காணவில்லை. தாயைப் பார்த் தான். கேள்விக்குறியுடன். அதேநேரம் வாசலில் இருவர் எட்டிப் பார்த்தனர். தியாகராசனின் நண்பர்கள்.

"வந்திட்டாயா...? என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்தனர்.

"என்ன தியாகு.. இப்படி ஆயிற்றே.." என்றான் ஒருவன்.

"என்ன பிரச்சினை? எதைப்பற்றி... சொல்றீங்க....?"

"உன் தாமரையைப் பற்றித்தான் - அம்மா சொல்லலையா...?"

"ஏன் என்னாச்சு...?"

அவன் நிமிர்ந்து தாயைப் பார்த்தான்.

பொன்மணி எதுவும் பேசாது அப்பால் போனாள்.

நிலமையை ஓரளவு புரிந்து கொண்டான். தியாகராசன்.

நான் இல்லாத நேரம் தாமரை போய்விட்டாள் என்று புரிந்து கொண்டான்.

நண்பர்கள் அவனுக்கு ஆறுதல் வார்த்தை சொல்லி. "உன்னை காவல்துறை எதிர்பார்க்கிறது... வா போய்வரலாம்" என்று அவனை அழைத்துப் போனார்கள்.

காவல் நிலையத்தில் அவனைத் தெரிந்தவர்கள் சிலர் "அவனுக்கு இப்படி ஒரு அவப்பெயர் வருவதா...?" என்று சொல்லிக்கவலைப்பட்டனர். விசாரனை என்ற பெயரில் சில கேள்விகளுக்குப் பதில் சொல்லிவிட்டுத் திரும்பினான். அடுத்த மூன்று நாளும் அவன் வேலைக்குப் போகவில்லை. "உடல்நலக்குறைவு காரணம்" என்று கடிதம் அனுப்பினான். வீட்டில் அடைபட்டுக்கிடந்தான்.

பரபரப்பு அடங்கிவிட்டாலும். அயலவரின் கிண்டல்களும் கேலிப் பேச்சுக்களும் அவனைத் தலைகுனியச் செய்தன. தாமரையின் பெற்றார் தினமும் காவல்நிலையம் போய் அழுது கொண்டிருந்தனர்.

தாயின் கெடுபிடிகளுக்குத் தானும் உதவிய குற்ற உணர்வு தியாகராசனின் நெஞ்சைத்துளைத்தது. "போனவள் திரும்பிவரப்போவதில்லையே...ஆனால் என் குடும்ப மானம்...?"

இதற்கொரு மாற்றம் கண்டாகவேண்டும்.

அவன்ஆழமாகச் சிந்தித்தான்.

கிளை அலுவலகத்துக்கு நிரந்தரமாகவே போய்விட முடிவுசெய் தான். அது ஒன்றும் கடினமல்ல. எவரும் விரும்பி அங்கே செல்வதில்லை. அந்த முடிவோடு அவன் தொழிலகம் போகத் தயாராகினான்.

அந்தநேரம் -

"சார்... தபால்.."

வாசலில் அழைப்பு.

கடிதத்தைப் பெற்றுப் பிரித்தான். நீண்ட மடல். அழகான. பரிச்சயமான எழுத்து. படிக்கத்தொடங்கினான்.

திருவாளர் தியாகராசா-

"யார் இது...?"

மறுபக்கம் திருப்பிக் கையொப்பம் பார்த்தான்.

திகைத்தான்.

தாமரை.

தன் அறைக்குப் போய் கதவைச் சாத்திவிட்டு. சோபாவில் அமர்ந்து வாசித்தான்.

திருவாளர் தியாகராசன் -

இது உன்மனைவி (!) தாமரை எழுதுகிறேன். இத்தனை நாளும் உன் கையாள்களும் காவல் துறையினரும் ஊரெல்லாம் என்னைத் தேடிக் களைத்திருப்பார்கள். என் பெற்றோரையும் கலங்கவைத்து ஊரைவிட்டு ஓடிப்போய்க் கடலில் விழவில்லை. ரயில்முன் பாயவில்லை. ஏன் நான் சாகவேண்டும்? உனக்குப் பயந்தா? உன் தாய்க்குப் பயந்தா? "எங்கே? யாருடனோ..ஓ... அவனுடன்தான் ஓடிவிட்டாள் போலும்" என்று நினைக்கிறாய்... இல்லையா? அவசரப் படாதே! அதை நான் எழுதுகிறேன். கொஞ்சம்பொறு. ஏமாற்றம். அதிர்ச்சி. ஆவேசம் எல்லாம் உன்னிடம் தோன்றுவதை என்னால் உணரமுடிகிறது. என் கடிதத்தை கசக்கி எறிய நினைக்கும் உந்தலும் பின் பொறுமையுடன் படிக்கும் வேகமும் என் கண்முன் நிழலாடுகின்றது. என்..னா..? "நீ" என்றும் "உன்" என்றும் எழுதுகிறேனா...? என்ன செய்வது! அந்த நிலைக்கு வர என்னைத் தள்ளியது நீதானே! இனி உன் மனைவியல்ல நான். உன் வீட்டில் ஒரு மனைவியாக அல்ல. அடிமையாகவே வாழ்ந்தேன். ஒரு டின் மண்ணெண்ணையுடன் என் ஆயுளை முடித்துவிட்டிருப்பாள் உன் தாய். தப்பிப்பிழைத்தேன்.

சீதனக் கொடுமையால் செத்தாள்...

மணம் முடித்து மூன்றே மாசம்...

மண்ணெண்ணை ஊற்றி தீ வைத்துவிட்டாள். மாமியார்... இந்த பரிதாப சம்பவம் திருச்சி இந்திரா நகரில் இடம்பெற்றது....

"போலிஸ் தீவிர விசாரணை...."

"தாயும் மகனும் கைது...."

இத்தகைய தலைப்புகளுடன் பத்திரிகைகளில் செய்திவரும்.

பரபரப்பாகப் பேசப்படும்.

பணம் பத்தும் செய்யும்.

நீங்கள் கோர்ட்டுக்கும் சிறைக்கும் போகாமல் குற்றவாளிகள் என்று பெயர் பெற்றுக்கொள்வீர்கள்.

நீ மற்றொருத்தியை மனைவியாக்கிக்கொள்வாய்.அதையே உன் தாயும் எதிர்பார்த்தாள்: என்னை முடித்துவிடத்தருணம் பார்த்திருந்தாள். அதற்கு வாய்ப்பளிக்காமல் நான் ஓடி ஒளிந்துகொண்டேன். "கொலை காரி" என்று அவப்பெயர் எடுக்காமல். "யாருடனோ ஓடி விட்டாள்" என என் மீது பழியைப் பரப்ப. ஒரு வகையில் உதவியதற்காக. வருந்துகிறேன்.

உங்கள் நல்ல காலம். மருமகளைக் கொடுமைப்படுத்திய மாமியையும். அவளுக்கு உடந்தையாக இருந்த கணவனையும் தண்டிக்க வாய்ப்பளிக்காமல் - பழி சுமத்தாமல் - பாவத்தை சுமந்து கொண்டு வந்துவிட்டேன். உன் தாய் அடிக்கடி சொல்லுவாளே... "ஒன்னைக் கட்டி அவன் என்ன சொகத் தைக் கண்டான்... ஒன்னைவிடப் பணக்காரப் பொண்ணை ஒரு லச்சம் சீதனத்தோட பாத்தமே... அந்தப் பொண்ணை கட்டிக்க மறுத்திட்டான்... படிச்சிருக்கா...வேலைக்குப் போறா. பாடுவான்னு... ஒன்ட குலுக்கு மிலுக்கில மயங்கிட்டான். ரெண்டு மாசத் தில மீதிக் காசு தர்றேன்டான் உன் அப்பன்..போய் வாங்கிட்டு வாடி.... இல்லாம இங்க வந்தே வாசல்ல வைச்சு கொழுத்திடுவேன்... ஆமா.."

"அத்தே அப்பாவுக்கு லெட்டர் எழுதியிருக்கேன். வருவாரு தருவாரு... கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்க...." "தலைகுனிந்து பணிவுடன் பேசுவேன் அவள் முன்னால் நேர்நின்றுபேச அஞ்சினேன்... அஞ்சி அஞ்சி வாழ்ந்தேன்... நீ கவலைப் படவில்லை. இப்படி எத்தனை நாள்கள்.

அன்று காலை நான் வேலைக்குப் போகப் புறப்பட்ட நேரம் - "என்னடி

**வேரற்கேணியன்.**

நான் சொன்னேன்.. மறந்திட்டியா... சாயங்காலம் போய் வாங்கிட்டுவா... அவன் டூ வீலர் வாங்கணும்" என்றாள். பெருமூச்சுடன் கலந்துவந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு பதில் சொல்லாமலே வெளியேறினேன். நான் பஸ்ல நெரிபடுவதையும் இடி படுவதையும் பல முறையும் உனக்குச் சொல்லியிருக் கிறேன். நீ கவலைப்படவில்லை. "எத்தனை பெண்கள் பஸ்ல போறாங்க வர்றாங்க... உனக்கு மட்டுமா..? சரி உன் அப்பாட்டபோய் பணம் வாங்கிட்டுவா. ஒரு டூ வீலர் வாங்கித்தர்ரேன்" என்றாய். உன் தாயின் கெடுபிடிகளை சொன்னால். "அதையெல்லாம் பெரிசா எடுக்காத.. அம்மா அப்படித்தான் பயப்படாதே" என்பாய். என் இதய வேதனையை நீ உணர்ந்துகொள்ளவில்லை. இரவில் மட்டும் இனிக்கப் பேசினாய். பகலில் உன் அன்னையின் சினமும் சுடுசொல்லும் என்னை வதைத்தன. அவள் என்னைச்சித்திரவதை செய்வதை நீ பார்த்தும் ஊமையாய் நடந்தாய். ஆண்மகனா நீ! சீதனம் என்ற சில ஆயிரங்கள்தான் வாழ்க்கை என்று கண்டாய். சொந்தக் காலில் நிற்கத்தெரியாத. சுதந்திர சிந்தனை இல்லாத மனிதன் நீ. என்னை ஒழித்துவிட மறைமுக ஒத்துழைப்புக்கொடுத்தாய். இறுதிவரை உன்னோடு வாழ வந்தவள் அல்லவா? என்று சிந்திக்கத்தவறிய மனிதன் நீ. ஒருத்திபோனால் இன்னொருத்தியை மணந்துகொள்ளலாம். அது சுலபம். இந்தச்சமுதாயத்தில் இந்த மண்ணின் பண்பாடு அப்படி. சட்டம் அதைக் கண்டுகொள்ளாது.

அன்று காலை நீ அலுவலக அலுவலாக வெளியூர் பயணம் போகப்புறப்பட்டபோது. கலங்கிய கண்களுடன் உன் அருகே நின்றேன். சிறிதுநேரம். அது அவளுக்குப்பிடிக்க வில்லை. போடி போ உன் வேலையைப்பார்..." என்றாள். அவள் கண்கள் என்னை எரித்துவிடுவது போல்பார்த்தன. அசரீரி போல் என்னுள் ஓர் குரல் - ஒரு உணர்வு. நீயும் இல்லாதபோது அந்த வீட்டில் எனக்கு எதுவும் நடக்கலாம். அவள் சொன்னதைச்செய்துவிடுவாள் என்றெண்ணி அஞ்சினேன். அடக்கம். அச்சம். நாணம வேணும் பெண்களுக்கு என்ற பழைய பல்லவியை நம்பினால் நாங்கள் வாழமுடியாது அறிவு. துணிவு. ஆற்றல் இருந்தும் அநீதியை எதிர்க்கும் எழுச்சி இல்லை பெண்களிடம். என்பாதை அவர்களுக்கு வழிகாட்டும். தருணத்தைப் பயன்படுத்தி அந்த அடிமை வாழ்விலிருந்து தப்பிவிடத்துணிந்தேன். என் கையிலிருந்து பணம் ரூபா இருநூறுமட்டுமே. அதை யும் என் நகைகளையும் எடுத்துக் கைப் பையில் வைத்துக்கொண்டேன். வழமைபோல் பஸ் ஏறினேன்.

நான் விரும்பியவரைக் கைப் பிடிக்கவிடாமல் "அவன் எந்த ஊரவனோ? என்ன சாதியோ? விலாசமில்லாதவன். கூலிவேலை செய்கிறான்.. சொந்த பந்தம் இல்லை. அவன் உன்னை நாளைக்கு நடுத்தெருவில் விட்டிட்டுப் போயிட்டால் என்ன செய் வாய்? இது நல்ல இடம். பெரிய தொழிலகத்தில் வேலை பார்க்கிறான்.. குடும்பமும் சிறிது.தாய் மட்டுமே. தங்கை எங்கோ மணம் முடித்துப்போயிட்டாள்... என்றும் இன்னும் எத்தனையோ சொல்லி என் மனம் விரும்பியவரை மறக்கச்செய்து. உன் கையில் என்னைக் கொடுத்து. நிரந்தரக் கடனாளியாய்விட்ட என் பெற்றாரை நினைத்துக்கொண்டேன். அவர்கள் கண்ணில் படாமல் போகிறேனே என்றெண்ணி வருந்தினேன்.

திருச்சியிலிருந்து காலை ரயில் வண்டி இராமேஸ்வரம் நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. நெஞ்சம் கனத்தது. இனம்புரியாத நெருடல்கள். தூரத்துப் பறவைகள். ஓடும் முகில்கள். மணல்மேடுகள். நிழல் மரங்கள். கருங்குன்றுகள். கோயில். கோபுரங்கள். பரந்த பசும்புல் வெளிகள். நெல்வயல். கரும்பு. வாழை.சிற்றூர். பேரூர். நகரம்... எல்லாம் இந்நாட்டு வளங்கள்... அவை எனக்குப் புதியன. ஆயிலும் அவற்றில் மனம் பதித்து மகிழவில்லை. அவையோ கணத்தில் மறைந்துகொண்டிருந்தன.

இன்னும் சில மணித்தியாலங்களில் ரயில் இராமேஸ்வரத்தை அடைந்துவிடும். அங்கே இறங்கி எங்கே போவது? தன்னந்தனியாக. இலக்கின்றி ஒரு பெண். ஒரு அனாதை இல்லத்திலோ ஒரு குழந்தைகள் காப்பகத்திலோ என்னால் பணியாற்ற இயலும். பின்னால் என்படிப்புக்கு ஏற்ற வேலையைத் தேடிக்கொள்ள முடியும். ஆண்துணை அவசியமின்றி என்னால் வாழமுடியும். அதற்கு யார் உதவப்போகிறார்கள்? நான் விரும்பிய அந்த இளைஞன் இலங்கையிலிருந்து அகதியாய் வந்தவர் என்பதை என் பெற்றோரிடம் நான் சொல்லவில்லை. அவருடன் எனக்கிருந்த தொடர்பை எப்படியோ நீ தெரிந்துகொண்டாய். அதைப்பற்றி அதிகமாக நீ அலட்டிக்கொள்ளவில்லை. உன் மானப்பிரச்சினை என நினைத்தாய் போலும். அவரைப்பற்றி இன்னும் சொல்கிறேன். கேள். நான் அலுவலகம் போகும் வழியில் பஸ் தரிப்பு அருகில் அந்த இளைஞனை ஒரு டெய்லர் கடையில் காண்பேன். நாளடைவில் நான் போகும் நேரம் அவர்வெளியில் வந்து நிற்பார். சில வேளை என் பின்னால் பஸ் தரிப்புவரை வந்துவிட்டுப்போவார். ஒருவேளை என்னோடு பேச முற்படுவார்.

"ஆபீசுக்கா போறீங்க?"

"ஆமா..."

"தாங்ஸ்.."

அவர் நாவசைத்தவிதம் கண்டு வியந்தேன். பஸ் வந்தது. ஏறிக்கொண்டேன்.

இன்னொரு நாள்.

பஸ் தரிப்பில் என் அருகில் அவர்: கையில் ஒரு புத்தகம். "குட்மோர்ணிங்..." என்றார். தொடர்ந்து. "இந்த பஸ் உறையுர் போகுமா.:" என்று கேட்டார்.

"ஆமா"

"உங்கள் பெயர்..?"

"ஏன் கேட்கிறீங்கள்?..."

"கேட்டேன்... சொல்ல விருப்பமில்லையென்றால்... மன்னிச்சுடுங்க... என் பெயர் வசந்தன்..."

"நீங்க சிலோனா...?"

"ஏன் கேட்கிறீங்க...?"

"அழகு தமிழில் பேசுறீங்களே..எதுவரை படிச்சிருக்கீங்க...?"

"நீங்களும்தான்..." என்றார்.

"என்னா..?"

அழகாக இருக்கிறீர்கள். அழகாகப் பேசுகிறீர்கள் என்றால் தவறாக எடுத்துக்கொள்ளமாட்டீர்களே...?"

எனக்குச் சிரிப்பு வந்தது. கூடவே வியப்பு. அவர் ஆளுமையை எண்ணி வியந்தேன். பஸ் வந்தது. ஏறிக்கொண்டேன். அவரும் ஏறினார். இரண்டு தசிப்புக்கள் கடந்து. திரும்பி ஒரு புன்னகை காட்டி விட்டு இறங்கினார். நாள்கள் நகர்ந்தன. எங்கள் தொடர்பும். வளர்ந்தது.

இந்தச் சமுதாயம் வகுத்திருக்கும் எந்தப் பாகுபாட்டையும் கட்டுப்பாட்டையும் கருத்தில் கொள்ளாமல் இரு தமிழ் உள்ளங்கள் இணையமுயன்றன. திருமணம் செய்துகொள்வதென்று தீர்மானித்தோம்.

என் போதாத காலம். நாம் நினைத்ததை எதிர்த்து விதி சதி செய்தது. இந்தச் சமுதாயம் விதித்துள்ள அர்த்தமற்ற சம்பிரதாயங்களைத் தான் சொல்கின்றேன்.

நீ என்னைப் பெண் பார்க்க வந்தாய். அவருடன் எனக்கிருந்த தொடர்பை மறைத்து. நிலத்தை விற்றுச் சீதனம் கொடுத்து. மீதிக்குக் கடன் சொல்லி என்னை உன்னிடம் ஒப்படைத்தனர். அதன்பின்பு அலுவலகம்போக அதே பஸ் தரிப்பில்தான் நான் பஸ் ஏறுவேன். ஆனால் அவரை நான் பார்த்ததில்லை.

ஒரு நாள். நான் என் பிறந்தகம் போயிருந்தபோது.

"கேட்டியா...அந்த விலாசமில்லாதவனை நீ விரும்பினாய்..... இப்ப அவனைக் காணேல்லை... எங்கே போனானோ...? என்று பேசிக்கிறாங்க... அப்புறம்... அந்த டெய்லர் கடைல கேட்டா... இராமேஸ்வரத்திலோ எங்கயோ கடை வைச்சிருக்கானாம். என்ன செய்ய நினைச்சே நீ? கடவுள் ➥

வாழ், வாழவிடு,ஏனெனில், வாழ்க்கையின் நியதி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் பண்பும், சகிப்புத் தன்மையுமே. - மகாத்மா காந்தி

➡ காப்பாத்தினார்." என்று முடித்தான். அம்மா. அட. அந்தக் கடவுள் இப்போ என்னைக் கை விட்டிட்டாரே! என்றெண்ணினாலும். இல்லையில்லை. ஏதோ ஒரு சக்திதான் என்னை இப்படி ஓடவைத்திருக்கிறது என வலிந்து தேறுதல் பெற முயன்றேன். அவரை நான் சந்திக்க வாய்த்தாலும் வாழ்விழந்த என்னை அவர் ஏற்றுக்கொள்வாரா? கவலையை விடு. இனி உனக்கு வசந்த காலம்! என்று என் மனதில் ஒரு ஒளிக்கதிர் கோடிட்டது.

அதே சிந்தனை

அவர் உருவம் மட்டுமே என் மனக்கண்முன்னால்.

காரைக்குடி சந்திப்பில் ரயில் நின்றது.

ஒரு பத்திரிகையை வாங்கி. என் அலையும் மனதை அதில் செலுத்த முயன்றேன்:

முகப்புச் செய்தியே மெய்சிலிர்க்க வைத்தது. "கோயம் புத்தூரில் மீண்டும் குண்டுவெடிப்பு. பத்துப்பேர் மரணம் பதினான்கு பேர்காயம்" காந்திஜீயின் சிலைக்கு ரோசா மாலை சூட்டும் அரசியல் தலைவர்களின் படங்கள்... அரிவாளால் கணவனையும் மற்றும் மூவரையும் வெட்டிய பெண்..." அவள் புரட்சிப் பெண் என்பது என்கருத்து. "காதலை ஏற்க மறுத்த கன்னியை வெட்டிக் கொன்ற வாலிபன் தற்கொலைசெய்து கொண்டான். "ஒரு பவுண் சங்கிலிக்காக குழந்தையை ஆற்றில் வீசினான்..." அடப் பாவி... என்ன மனிதர்.... என்ன கொடுமை... அமைதி நாடி பத்திரிகை யைப் புரட்டினால் பயங்கரக் காட்சிகள் தோன்றுகின்றன. கடைசிப் பக்கம்... வண்ணப்படங்கள். சினிமாச் செய்திகள். "சின்னமணியின் தயாரிப்பில் புதியபடம் 'புரட்சி?" வம்பாவும் சம்யுத்தாவும் கதாநாயகிகள். இருவரும் கதாநாய கனின் தோள்களில் தொங்கும் படம். அதன்கீழ் மற்றொரு "புதிய படம் "மன்மதன்" "இருபது இலட்சம் சம்பளம் வாங்கும் புதிய கதாநாயகி" யின் படம். அவள் உடையை விமர் சிக்க எனக்கு என்ன தகுதியிருக் கிறது...? ரசிகர் என்ற பெயரில் இலட்சக்கணக்கான மனிதர் அதனை அங்கீகரிக்கிறார்களே! இல்லையென்றால் படவுலகம் பிழைக்குமா?

பத்திரிகையை மடித்து கைப்பையில் வைக்கிறேன். "பேப் பரைக் கொஞ்சம் தர்றீங்களா?" எதிர் இருக்கையிலிருந்து ஒரு கை நீண் டது. கொடுத்துவிட்டுச் சாளரத்தின் சட்டத்தைமேலே உயர்த்தி விட்டேன். மாடிகள். மனைகள். கடைகள் தெரிந்தன. மக்கள் கூட்டம் நெருக்க மாக. நேரம்12.30. "அடுத்தது இராம நாதபுரம்" என்று சொல்லிக்கொண்டு சிலர் இறங்குவதற்குத் தயாராகத் தங்கள் உடைமைகளைக் கையில் எடுத்துக்கொண்டனர்.

வண்டி நின்றது. இளனீர்...காப்பி...கடலை...வடை. ஆப்பிள்...சுண்டல்...விற்றோரின் அவசரக்குரல்கள்.

ஒரு காப்பி குடிக்க நினைத்து பையிலிருந்து சில்லறை யைக் கையில் எடுத்துக்கொண்டு சாளரத்தினூடே தலையை நீட்டிய நேரம் என்னை மின்னல் தாக்கியது போன்ற அதிர்ச்சி.

வாழ்க்கையில் எதிர்பாராத சம்பவங்கள் திருப்புமுனைகளாக மனி தனை எப்படியெல்லாமோ மாற்றி விடுகின்றன. அவன் நினைப்பதெல்லாம் நடந்துவிடுவதில்லை. நேற்று கல் சுமந்து நாள் கூலி வாங்கிய கட்டடத் தொழிலாளி இன்று இலட்சாதிபதியாகி விடுகிறான். ஒரு பரிசுச் சீட்டுமூலம். காலையில் ஏசிகாரில் அலுவலகம்போன அதிகாரி மாலையில் விபத்தில் சிக்கிமாண்டு போகிறான். கோடிரூபா செலவிட்டு தேர்தலில் போட்டியிட்டவன் ஒரு நடிகையிடம் தோற்றுப் போகிறான். மனைவி பிள்ளைகளோடு அம்பாசிடரில் திருப்பதி போய். பத்தாயிரம் ரூபா உண்டியலில் போட்டுவிட்டுத் திரும்பியவன். வழியில் லாறியுடன்மோதுண்டு ஒட்டுமொத்த மாக இவ்வுலகை விட்டுப்போகிறான்.... இரவுமட்டுமா. வாழ்வில் பகலும் வரும் அவர்.... அவரேதான்.அழகிய தள்ளு வண்டியில் அன்னாசி. ஆப்பிள். பிஸ்கட். டொபி. முதலியன வைத்து விற்றுக் கொண்டிருந்தார். என்னையறியாமலே "வசந்த்" என்று சத்தமிட்டேன். அவர் அழைக்காமலே ரயில் வண்டியை விட்டு இறங்கினேன். அவரை நோக்கி நடந்தேன்.

"தாமரையா...நீங்கள்....?" என்றவர் கண் இமைக்காமல் என்னைப் பார்த்து நின்றார். என் கண்களில் நீர் திரையிட்டது. தைரியத்தை வரவழைத்துக்கொண்டு பேசினேன்.

"வசந்த்.... இங்கேயா இருக்கி றீங்க...? என்னை மன்னிச்சிடுங்க. உங் களை ஏமாற்றிட்டேன்... அதற்கான தண்டனையை அனுபவிச்சிட்டேன்..."

"என்ன நடந்தது? உங்கள் அவ்ளங்கே? ஏன் தனியாக? இங்கே யாரிடம்...?" அவர் கேள்விகளை அடுக்கினார்.

"வாங்க இப்படி. சொல்றேன் என ஒரு பக்கம் அகன்றேன். அவர் வண்டியைத் தள்ளிக்கொண்டு ஓரமாக வந்தார். என் நிலையை விபரித்தேன். அமைதியாகச் செவி மடுத்தார். சில நிமிடம் சிந்தித்தார்.

நான் குறுக்கிட்டேன்.

"என்னை ஒரு அனாதை விடுதியிலோ சிறுவர் காப்பகத்திலோ சேர்த்துவிடக்கூடிய செல்வாக்கு உங் களுக்கு இருக்கிறதா? இந்தஉதவியை மட்டும் செய்யுங்க தயவுபண்ணி... இங்க எனக்கு வேறயாரையும் தெரியாது."

"தெரியாமலா தனியே வந்தீங்க...?"

"ஏதோ வைராக்கியம்... அசட்டுத்துணிவு.. எப்படியும் சொல்ல லாம். ஆயிரத்தில் ஒருவரிடமாவது மனிதம் இருக்கும் என்று வாசித்திருக் கிறேன். எனக்கு உதவ ஒரு மனிதன் முன்வரமாட்டாரா...என்ற எதிர்பார்ப்புடன் வந்தேன்"

அவர் சிரித்தார்.

"வாருங்கள் முதலில் சாப்பிடுவோம்" என்றார்.

ரயில் போய்க்கொண்டிருந்தது.

வண்டியைத் தள்ளிக் கொண்டே அவர் கேட்டார்.

"தாமரை நீங்கள் இங்கே வந்தது உங்கள் பெற்றோருக்குத் தெரியுமா?

"தெரியாது... இனிமேல்தான் எழுதனும்... எங்காவது வேலை கிடைச்சபிறகு எழுதலாம்..."

"எழுதிவிட்டு...? ஓ... உங் களுக்கு ஒரு வேலை தேவை..சரி பார்க்கலாம்... அப்புறம் நீங்கள் எங்கே தங்குவீர்களாம்...?

"........."

"வந்து... நீங்கள் இந்த அறையில் இன்றிரவு தங்குவீர்களாம்... அப்புறம் ஒரு அறை பார்க்கலாம்..." என்றவர் ஒரு மாடி வீட்டின் கீழ் உள்ள அனெக்ஸ் அறையைத் திறந்து வண்டியை உள்ளே தள்ளிவிட்டு கதவைப் பூட்டினார். வாருங்கள் சாப்பிடலாம் என்று அருகிலிருந்த 'வைகை' உணவகத்துக்குள் அழைத்துப்போனார்.

எதிரெதிரே அமர்ந்தோம்.

"இரண்டு சாப்பாடு" ஆடர் கொடுத்துவிட்டு. என்முகத்தைப் பார்த்தார். பார்த்துக்கொண்டேயிருந்தார்.

நான் தலைகுனிந்தேன்.

"தாமரை.." என்றார் மென்மையாக.

முகம் நிமிர்ந்தேன்.

"என்னை நம்பி இப்படி என்னோடு வந்திருக்கிறீர்களே!?"

"ஆமா..இப்போ எனக்கு உங்களைவிட யாரும் இரட்சகராக இல்லையே...நான் அப்போதே உங்களு டன் ஓடிவந்திருக்கனும்."

"ஓடிவாருங்கள் என்று நான் கேட்கவில்லையே. உங்கள் பெற்றார் விரும்பினால் திருமணம் செய்து கொள்ளலாம் என்றுதானே சொன்னேன். ஊர் பெயர் தெரியாதவன் என்றார்கள். இல்லையா? அவர்களிலும் தவறில்லை... சமூக விதிகளுக்கு அவர்களும் பயந்த வர்கள்... ஊரில் பிறந்தவனுக்கு உங் களைக் கட்டிக்கொடுத்தார்கள். நான் முதலில் உங்கள் அழகால் கவரப்பட் டேன். உங்களுடன் முதலில் பேசிய நேரம் நீங்கள் எனக்களித்த பதிலில் ஒரு பண்பு இருந்தது. யார்நீ? என்று கேட்டு என்னை நீங்கள் அவமானப்படுத்த வில்லை. உங்களுடன் பழகிய பின் உங்கள் எளிமை. சாந்தம். சொல்லழகு என்னைக் கவர்ந்தது. நீங்கள் ஒரு வணிகவியல் பட்டதாரி என்று சொன்ன போது எனக்கு அப்படியொரு தகுதி இல்லையே. என் எண்ணத்தை எப்படிச் சொல்வது என்று அஞ்சினேன். எங்கள் நாட்டில் உயர்கல்வி படிப்பதற்கு எத்தனையோ தடைகள். எப்படியோ. நான் கல்லூரிப் படிப்பை முடித்ததும் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. முதலாம் ஆண்டை முடித்து இரண் டாம் ஆண்டில் இருக்கும்போது. அங்கே சண்டை மும்முரம் அடைந் தது. அரச படைகள் எங்கள் ஊர் நோக்கி முன்னேறின. வீட்டையும் சொத் துக்களையும் விட்டு வெளியேறினோம். கால்நடையாக. விவசாயநிலங்களும் காடு களும் செறிந்த வன்னிப் பிரதேசத்தை அடைந்தோம். அங்கே குடிசைகள் கட்டித் தங்கினோம். இடம்பெயர்ந்து சொந்த இடங்களைவிட்டு வெளிமாவட்டங்களுக்குப் போனவர் களுக்கு. உணவுப்பொருள் வழங்கலை. அரசாங்கம் தடைசெய்தது. எங்கள் சொந்த ஊருக்குத் திரும்பினால் மட் டும் உணவு விநியோகம் வழமைபோல் தொடரும் என்றனர். நாங்கள் ஏமாந்து போகவில்லை. இங்கே வந்தவர்கள். அகதிமுகாம்களில் பாதுகாப்பாக இருக் கிறார்கள். என அறிந்தோம். நாங்களும் வந்தோம். இங்குள்ள தமிழ்மக்களுக்கு எங்கள் அவல வாழ்க்கைபற்றித் தெரிய வாய்ப்பில்லை. அரச படைகள் தமிழ் பயங்கரவாதிகளை எதிர்த்துச் சண்டை யிடுகின்றன என்று நம்பிக்கொண்டிருக் கிறார்கள். அது தவறு. அரச செய்தித் துறை தரும் செய்திகளை மட்டும் இங்கே பத்திரிகைகள் பிரசுரிக்கின்றன. அது உண்மையல்ல. சிறுபான்மையின ரான தமிழர்மீது பெரும்பான்மையின சிங்கள அரசுகள் நடத்தும் அடக்கு முறையை எதிர்த்து. போராளிகள் போராடுகிறார்கள். இடையில் அகப்பட் டுச் செத்துப்போகாமல் பலரும் இங்கே வந்து அகதி முகாம்களில் இருக் கிறார்கள். கல்வியைத் தொடரமுடியாமல் காட்டுப் பகுதிகளுக்கு ஓடினோம். என்று சொன்னேன். அங்கே ஒரே சன நெருக்கடி. தெருவோரம் குடிசைகள். தொழில் இல்லை. வீண்பொழுது போக்காமல் ஒரு தொழில் கற்றுக் கொள்ளநினைத்து தையல்வேலை பழகினேன். அதற்கும் அங்கே போதிய ஊதியம் இல்லை. வருவாய்போதாது. உணவுக்கும். நோய் வந்தால் மருந் துக்கும் பஞ்சம். இருந்தாற்போல் வரும் போர் விமானங்கள் மக்கள். மனைகள் மேல் குண்டுகளைப் போட்டு. "பயங்கரவாதிகளை அழித்தோம்" என்று தகவல் அனுப்பும்...."

சாப்பாடு வந்தது

"சாப்பிடுங்க.. பின்னால் பேசலாம்" என்றார்.

சோற்றை எடுத்து வாயில் வைத்துக்கொண்டு. "உங்க அம்மா அப்பா எங்கே?" என்றேன்.

"விடமாட்டீங்க போல் இருக்கே" என்று சிரித்தவர். இங்கே தான் அகதிமுகாமில். நான் திருச்சிக்கு வந்தேன் தொழில் தேடி ஒரு நண்பரின் அறிமுகத்துடன் அந்தத் தையல்கடை யில் சேர்ந்தேன். சில நாள் செல்ல. அங்கே ஒரு தாமரையைக் கண்டேன் அதன் அழகிலும் அறிவிலும் மயங்கினேன்..." என்றார்.

"அதுதான் இப்போ கசங்கிய மலராயிற்றே..." என் கண்கள் கலங்கின.

"இல்லை... உங்கள் உள்ளத்தாமரை கசங்கவில்லை. உங் களை தியாகராசன் என்ற பெரிய இடத் துப் பிள்ளைக்கு மணம் முடித்துக் கொடுத்துவிட்டனர் என்று அறிந்தேன். அங்கே இருக்காமல் எங்காவது போய்விட்டால். சற்று ஆறுதலடைய லாம் என்றெண்ணிப் புறப்பட்டேன். சேமித்த பணம் கொஞ்சம் இருந்தது. சுயமாக ஒரு தொழில் செய்ய எண்ணி. ஒரு தள்ளுவண்டியை வாங்கினேன். பழவியாபாரம் செய்கிறேன். இப்போ நல்ல வருமானம். அந்த அறைக்கு வாடகை கொடுத்துக்கொண்டு இருக்கிறேன்... என்ன யோசனை பலமாயிருக்கே. சாப்பிடுங்க...."

"போதுமே..."

"சாப்பிடுங்க.... இனிக் கவலைவேண்டாம். இந்த மண்ணின் மைந்தர்கள் போல் அல்ல நான். வித்தியாசமான மண்ணிலிருந்துவந்த வன். நீதி. அன்பு.கடமை. தியாகம் எதுவென்று தெரிந்தவன். உங்கள் உள்ளத்தை நன்றாய்ப் புரிந்துகொண்டு அன்பு வைத்தவன். ஏமாற்றத்தால் சில நாள் வருந்தியது உண்மை. மீண்டும் சந்திப்போம் என்று எள்ளளவும் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் விரும் பினால் உங்களை என் துணைவியாக ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன்...."


"வசந்த்...நீங்கள் என்ன சொல் றீங்க...? இனி எனக்கு வசந்த காலமா...? இப்படியொரு திருப்பத்தை நான் அணு வளவும் எதிர்பார்க்கவில்லை..." "ஏன் கலங்குகிறீங்க....வாங்க போகலாம்..." அவர் என் கையைப் பற்றினார்.

"இன்னும் என்னை நீங்க... என்று ஏன் சொல்லுறீங்க? நீ என்று சொல்லுங்க வசந்த்..."

"காட்சிகள் மாறும் நாடகம் போலே காலமும்மாறாதோ?" என்றான் ஒரு கவிஞன். வாழ்க்கை ஒரு நாடகம். காட்சிகள் மாறும். காலமும் மாறும். என் காலம் இப்படி மாறும் என எதிர்பார்த்தா வந்தேன்? என் வாழ்வில் இனி வசந்த காலம். அன்று நீ வெளியூர் போனது எனக்கு வாய்ப்பாக அமைந்தது. அந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தந்ததற்காக உனக்கு நன்றி சொல்கிறேன் தியாகராசன்.

- தாமரை.

## அந்த நாளை ஓயாமல்



அனல் வேடையடிக்கும்
கோடையின் மதியப் பொழுது
முகங்களை அவித்துப் போகிறது

இன்னமும் கறுப்பாக்கப்படாத வீதியில்
ஊர்திகள் விரைய
கிரவல் கெம்பி
பயணிப்பவர் மேனிகளில்
மோதிப் படிகிறது.

தெருப்புழுதி
மூக்குத் துவாரத்துள் நுழையா வண்ணம்
மூக்கைப் பொத்தியபடி பலரும்
தகிக்கும் வெக்கையைத் தணிக்க
குடையைப்பிடித்தபடி சிலரும்
பயணித்துக்கொண்டிருக்கிறார்கள்


மணிக்கட்டுடன் வலது
கையிழந்த நான்
முன்னே நடக்க,
கந்தகச் சிதறல்கள் பட்டதால்
இடது கையும்
இருவிழிப் பார்வையும்
குந்தகமாகிய என் தோழி
என் இடது கரம் பற்றிவர
புழுதியில் முக்குளித்தும்
வெய்யிலில் காய்ந்தும்
வேகமாய் நடக்கிறோம்.

எப்போதும் நாங்கள்
எம் தேசத்திற்காகவே
இயங்கிக் கொண்டிருப்போம்
தயங்காமல்.

விடுதலையடையும் நாளன்றுதான்
ஓயும்
எங்களின் செயல் மூர்க்கமும்
கால்களும்!

ஆவரங்கால் சுதன்

## மௌனத்தின் ஒலிக்குறிப்புகள்



என் விரல்களின் இயக்கத்திலேயே
பேனா
எழுதிச் செல்கிறது இக் கவிதையை.
விலை கொடுத்து
என்னாலேயே வாங்கப்பட்டது
இந்தப் பேனா.
ஆயினும்
என்னால் எழுதப்பட்டதல்ல
இந்தக் கவிதை.
ஒழுங்கமைக்கப்பட்ட எழுத்துக்கள்
உற்பத்தியான
எந்தத் தடமுமில்லை என் மனதில்.
கவிதை தேடி என்னுள்
நுழையுமெவரும்
அவள் நினைவுகளின் சுவடு மட்டுமே
கண்டுவர முடியும்.
அவள் அன்பளித்த வார்த்தைகள் தான்
இருந்தும்
விரல்களாலும் பேனாவாலும் முடிவதேயில்லை
எந்தக் கவிதை வரிகளினுள்ளும்
அவளைச்சிறைப்பிடிக்க
தானே எழுதிச் செல்லும்
இந்தக்கவிதை வரிகளின்
முற்றுப்புள்ளிக்கு முதல்கணத்தில்
சொற்கள் எழுத்துக்களின்
இடைவெளியினூடே
தப்பித்துப் போக
எப்படியோ முடிகிறது அவளால்.
இடைவெளிகளும் உருவங்களுமற்ற
மௌனங்களடர்ந்த
குறுகிய பாசைகள் கொண்டு
எழுதப்பட்ட வரிகளிலிருந்து
தப்பித்துப் போகும் காதலிகளைப்பாட
எத்தனை பேரால் முடிந்திருக்கிறது?

யோ.கர்ணன்

# குழந்தைநாதம்

## விட்டுக் கொடுப்போம்...

அஜந்தாவும் றொசானியும் ஒரே இடத்தைச் சேர்ந்தவர்கள். இது மட்டுமல்ல இவர்கள் பாடசாலை நண்பர்கள். ஒரே வகுப்பு மாணவர்கள். இவர்கள் இருவரும் படிப்பில் ஓரளவு கெட்டிக்காரர். ஆனால் அஜந்தா விளையாட்டிலும் திறமைசாலி. எந்த விளையாட்டுப் போட்டியாக இருந்தாலும் அஜந்தாவுக்கு என வெற்றிக் கேடயம் காத்திருக்கும். இதனால் றொசானிக்கும் சீ...நானும் விளையாட்டிலையும் கெட்டிக்காரியா இருந்தால் எப்படி இருக்கும். என்று எண்ணிக் கொள்வாள். இப்படியே இவர்கள் சிறு வகுப்பு முதல் ஒன்றாகப் படித்து வரும் போதே நண்பர்கள் ஆகிவிட்டனர்.

ஒரு நாள் அஜந்தாவினுடைய புத்தகத்தினுள் ஓர் அழகான படம் ஒன்றை வைத்திருந்தாள். வகுப்பறைக்கு ஆசிரியர் வர தாமதமாகியது.அப்போது அஜந்தா அருகே இருந்த றொசானியிடம் இங்க றொசானி இதைப் பாருங்கோ.... என்று அந்தப் படத்தை மெதுவாக புத்தகத்தைத் திறந்து காட்டினாள். அந்தப் படத்தைக் கண்ட றொசானியும் அதை எடுத்து ஆ... என்ன வடிவாயிருக்கு அஜந்தா ப்ளீஸ் எனக்குத் தாங்கோவன் என்று பல தடவை கெஞ்சினாள். றொசானி படத்தைப் பார்ப்பதும் அஜந்தாவைப் பார்ப்பதுமாக றொசானி மௌனமாக இருந்தாள். றொசானிக்கு மனதுக்குள் ஏதோ மாதிரியாய் இருந்தது. இந்தாங்கோ அஜந்தா நீங்கள் ஆசைப்படுவதை நான் தெரியாமல் கேட்டுப் போட்டன் என்று படத்தை நீட்டினாள். இல்லை றொசானி நீங்கள் இதைக் கவனமாக வைத்திருங்கோ என்று வாங்க மறுத்தாள். றொசானி இது மட்டும் தான் என்னிடம் இருக்கு இதைக் கேட்காதையுங்கோ என்று கொடுக்க மறுத்தாள். இல்லை அஜந்தா எனக்கு இது நல்லாய் பிடிச்சிருக்கு என்று படத்தை திருப்பிக் கொடுக்க மறுத்தவளாய் அடம் பிடித்தாள். அஜந்தாவும் பல தடவை கேட்கவும் திகைத்துப் போனாள். இல்லை அஜந்தா..... என்ற றொசானியை வேண்டாம் என மறுத்தே விட்டாள். றொசானியோ சந்தோஷத்துடன் படத்தை எடுத்துக் கொண்டாள்.

பார்த்தீர்களா? நண்பர்களாக இருந்தாலும் சரி சாதாரணமானவர்களாக இருந்தாலும் சரி கட்டாயம் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருக்க வேண்டும்.



இல்லையேல் தேவையில்லாத முரண்பாடுகளும் பிரச்சினையும் தான் ஏற்படும். அஜந்தா தான் ஆசைப்பட்டதை அவள் மீது வைத்த நட்பை பாதுகாக்கவும், தேவையற்ற முரண்பாட்டைத் தவிர்க்கவும் விட்டுக் கொடுக்கிறாள். நட்பின் பலம் விட்டுக் கொடுப்பிலும் உள்ளதல்லவா.?

**ஈழவிழி.**

## வாரம் ஒரு குறள்



*"கற்கையிலே கல்வி கசப்பு கற்றபின் அதுவே சிறப்பு" என்று கூறப்படுவது நாமறிந்ததே.*

*இதனால்தான் கல்விதான் அழியாத செல்வம் என்றும் எல்லாவகைச் செல்வங்களிலும் மிகச் சிறந்த செல்வமாகவும் போற்றப்படுகின்றது.*

*விளைய்க் கூடிய நிலத்தில் எந்தவிதை போட்டாலும் பயன்தரும் ஆயிரம் ஆயிரம் மக்கள் பசியாறக் கூட முடியும். இப்படிப்பட்டவர்கள் கல்வியறிவுடையவர்கள்.*

*மறுபுறம் விளையாத களர் நிலத்தில் விதை போட்டால் பயன் பெறுவது இயலாத காரியம். துன்பம்தான் மிஞ்சும். இத்தகைய இயல்புடையோர் கல்வியறிவு இல்லாதவர்கள் என்று கூறப்படுகின்றது. அது மட்டுமன்றி கல்வியறிவில்லாதவர்கள் உயிருடன் இருக்கும் வெறும் சடப்பொருள் என்றும் கூறப்படுகிறது. இதனைத்தான்.*

*"உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்*
*களரனையர் கல்லா தவர்."*

*என்று வள்ளுவப்பெருந்தகை மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.*

## சொற்சிலம்பம் - 32

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| லோ | ஞ | ழ் | ல் | ற | ன | ரீ |
| செ | கை | ல | ப | சீ | லி | ர் |
| ன் | தா | யா | து | ம | ச | ந் |
| க | ன் | மா | ர | தீ | ளை | னி |
| கெ | தீ | கு | த | டி | பி | த் |
| ரீ | மு | தே | ரை | யா | தி | ள |
| தௌ | சொ | ளை | லை | ங் | ல் | று |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 30 இன் விடைகள்

01. சூரியன்.
02. சந்திரன்.
03. நட்சத்திரம்.

01. கிணறு.
02. குளம்.

### சொற்சிலம்பம் - 30 இன் பரிசுக்குரியவர்

சு.பிரணவன்,
வேலணை மேற்கு,
நடராஜா வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் - 30 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. பே.மிதுசாலினி,தரம்-01, மு/விக்னேஸ்வரா வித்தியாலயம்.
02. கி. ஜானுகா, தரம்-08, இல.472,இராமநாதபுரம், வட்டக்கச்சி.
03. வி.பிரவீன், ஜெயந்தி நகர், கிளிநொச்சி.
04. கி.கலைச் செல்வி, வசந்த நகர், திருமுறிகண்டி.
05. தி.சுகிர்தா, புலோப்பளை-மேற்கு, பளை.
06. S.நிறோஷன், பரமாந்தர் வளவு, கரவெட்டி.


01. காட்டு மிருகங்கள் மூன்று?
01) ..................................
02) ..................................
03) ..................................

*சொற்சிலம்பம்-32*
*ஈழநாதம்,*
*யாழ் சாலை,*
*கிளிநொச்சி.*

02. மாலையில் மலரும் பூக்கள் எவை?
01) ..................................
02) ..................................

பெயர் :- ..................................
முகவரி :-..................................
..................................

## பூனை எலியை அடைய வழி சொல்லுங்கள்!



## நான் சாக வேண்டும்

ஓர் ஊரிலே ஒரு ஆச்சிரமம் இருந்தது. அந்த ஆச்சிரமத்தில் அனேக மாணவர்கள் கல்வி கற்று வந்தார்கள். அவர்களுக்கு ஒரு குருவானவர் கல்வி கற்பித்து வந்தார். அவர் அனேகமாக சொல்வது நான் என்ற அகந்தை இருக்கக்கூடாது என்று. ஓர் நாள் ஒரு மாணவன் விடுமுறைக்காக அனுமதி பெறுவதற்காக குருவிடம் வந்தான் அவரும் அனுமதியைக்கொடுத்தார்.

இம் மாணவன் விடுமுறையைக் கழித்து விட்டு மீண்டும் ஆச்சிரமம் வந்தான். வந்து குருவே நான் வந்து இருக்கிறேன் உள்ளே வரலாமா என்று கேட்டான். குருவும் நான் செத்தபின் வா என்றார். மாணவனும் குளம்பிக் கொண்டே போய் சில நாட்களுக்குப் பின் வந்தான். மீண்டும் அந்த மாணவன் என் அன்பான குருவே நான் வந்திருக்கிறேன் உள்ளே வரலாமா என்றான். குரு மீண்டும் அதே வார்த்தையைச் சொல்லி அவனை அனுப்பினார். அந்த மாணவன் நன்றாக யோசித்துவிட்டு மீண்டும் வந்து என் குருவே உங்கள் சீடன் வந்திருக்கிறேன் உள்ளே வரலாமா என்றுகேட்டான். உடனே குரு என் அருமைச் சீடனே உள்ளே வா என்றார். அந்தக்குரு சொன்னது நான் என்ற அகந்தையை நாமும் நம்மைப் பெருமையாக நினைக்கக் கூடாது.

**இ.றமேஸ்**

## சிந்திக்கச் சில

01. அறிந்தவற்றைப் பகிர்ந்து கொள்ளுங்கள் அறியாதவற்றைத் தெரிந்து கொள்ளுங்கள் தேவையானதை மட்டும்.
02. உங்களுக்கு என்று ஒரு பாதை தெரிந்தால் நடக்க முன்பே சிந்தியுங்கள்.
03. அன்பை அன்பால் வெல்லுங்கள். தோல்வியை மனதால் வெல்லுங்கள்.
04. நம்பிக்கை என்ற தும்பிக்கையை ஒரு போதும் இழக்காதீர்கள்.
05. தோல்வியை சமாளிப்பது சளைக்காத மனம் அதை வெற்றி கொள்வது விடாமுயற்சி.

**ஈழவிழி**

## கவிதைத் துளிகள்

**பொறுமை**

எந்த வயதிலும்
கடைப்பிடிக்கவேண்டிய
உணர்வு வலை.

**கல்வி**

வாழ வழிகாட்டும்
திசைகாட்டி

**நண்பி**

ஆபத்து வரும்
போதெல்லாம் ஆறுதல்
சொல்லும் உறவு

**பொய்**

ஒரே செய்தியை
நேரத்திற்கு நேரம்
மாற்றிச் சொல்கின்ற
உதடுகளின் கவர்ச்சியாற்றல்.

தா.ஜெனோதினி,
கிளி.இந்துக்கல்லூரி

## கைவண்ணம்



ச.ஜீபத்.
மல்லாவி

## தாய்

*இரத்தத்தைப் பாலாக்கி*
*ஊட்டி வளர்த்தவள்*
*துன்பத்தை துவளாமல்*
*தாங்கி நிற்பவள்*
*கஷ்டங்களை கண்ணீரால்*
*துடைத்துக் காப்பவள்.*

## நகைச்சுவை



"வயிறு குலுங்க வைக்கும் ஜோக் ஒன்று சொல்லுங்கள்."

"எதுக்கு?"

"மருந்தைக் குலுக்காமல் குடித்து விட்டேன்!"

# புரிதலும் தெளிதலும்

வன்னியில் வீதிபு னரமைப்பு, குள அபிவிருத்தி, என்று பல்வேறு அபிவிருத் திகளும், புனரமைப்புகளும் சமாதானத் திருவிழாக் களைக் காட்டியபோது கண்களுக்கு கவர்ச்சியாய் காட்சியளித்தன.

இவற்றுள் இந்த அபிவிருத்திப்பணி களிலும், புனரமைப்பு வேலைகளிலும் ஈடுபட்ட, ஈடுபடும் ஒப்பந்த வேலை நிறுவனங்கள் சர்வதேச அங்கிகாரம் பெற்ற நிறுவனங்களும் உண்டு.

இந்த நிறுவனங்கள் தமது ஒப்பந்த வேலைகளின்போது மனிதவலுவுக்கு அளிக் கப்பட்ட முக்கியத்துவம் என்பதைவிட, இயந்திர வலுவுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் அதிகம்.

அதிலும் இந்த நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்ட இயந்திரவலுவும் தொழில் நுட்ப ஆலோசனைகளும் சேர்ந்து நவீன தொழில்நுட்ப அறிவுசார் வேலைத் திட்டங்க ளாகவே அமைவதாக பொதுவாகக் கூறப்பட்டது.

மேலும் குறிப்பிட்ட சில வேலைத் திட்டங்களில் ஈடுபடுவதற்கு தெரிவு செய்யப்பட்ட இந்த ஒப்பந்த வேலை நிறுவனங்கள் அனுபவ முதிர்ச்சி மற்றும், இந்த நிறுவனங்களுக்கு அல்லது ஒப்பந்தகாரர்களுக்கு மட்டுமே என்ற சில தகுதிநிலைகள் கூட பட்டியலிடப்பட்டன.



## யார் பொறுப்பு? யார் பதில் உரைப்பார்?

ஆனால் தற்போது இந்த நிறுவனங் களின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு உரு வாக்கத்தின்பயன் வன்னிமக்கள் இன்று பல இன்னல்களை அனுபவிக்கவேண்டியதாகவுள்ளது.

இதில் குறிப்பாக ஏ-ஒன்பது வீதி யான யாழ் கண்டிவீதி பெருமளவு புனரமைக்கப் பட்டுள்ளது. இந்த புனரமைப்பு வேலைகளின் முடிவில் இந்த வீதியில் பயணம் செய்வோர் இந்த வீதியின் வினைத்திறனை அவதானித்தால் இந்த வீதியில் ஏற்படக்கூடிய மிகப்பெரும் ஆபத்தை அவதானிக்கமுடியும்.

குறிப்பாக பரந்தனுக்கும் கிளிநொச்சி கரடிப்போக்கு சந்திக்குமிடையில் வீதிபெரும் கும்பல் கும்பலாக கற்திட்டிகளாக திரண்டு போய் காட்சியளிக்கின்றது.

இரவில் பயணம் செய்வோரும் இந்த வீதியால் பரிச்சயம் இல்லாதவர்களும் வேகமாக வாகனங்களை செலுத்தும் போது குறைபாடு கொண்ட வீதி புனரமைப்பினால் விபத்தை சந்திக்க வேண்டி ஏற்படும்.

இந்த கற்திட்டிகள் எவ்வளவு திறமை வாய்ந்த சாரதியைக்கூட நிலைதடுமாற வைத்து பாரிய விபத்தை ஏற்படுத்திவிடும்.

இந்த ஒழுங்கற்ற வீதி புனரமைப்பு பெரும் ஆபத்தை ஏற்படுத்துவதற்கென்றே காத்திருக்கிறது.

ஆனால் முன்பு ஒருமுறை முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அமைச்சராக இருந்த அமைச்சர் பீரிஸ் ஏ - ஒன்பது வீதி புனரமைப்பு வேலையை நோர்வே சமாதான முயற்சியாளர்களுக்கு தமிழர்பிரதேசத்தில் வேலை நடப்பது போல காட்டியிருந்தார்.

ஆனால் ஏ- ஒன்பது வீதியோ விபத்துக் களுக்கு காரணமான வீதியாக காட்சிதருகிறது.

இதற்கு யார் பொறுப்பு? யார் பதில் உரைப் பார்? நாம் பொறுத்திருக்கத்தான் வேண்டுமா?

—வேழினி

## தொடர் - 15

பாதைவிளிம்பிற்கு அப்பால் இருபது அடிஅகலத்திற்குப் பலகைமேடை போடப் பட்டிருந்தது. கைபிடித் தடுப்பைப்பிடித்துக்கொண்டு குனிந்து பார்த்தாலும் கூட தலைசுற்றும் போலிருந்தது இந்தப் பலகைகளை எவ்வளவு நம்பலாம்? 'இப்படியே கீழே போனால் அந்திரட்டிக்குக் கூட எலும்பு கிடையாது" 'பயப்படாதீர்கள்...' என்றார். பக்கத்தில் வந்த அயூப்.அவருக்கு எங்கள் பாஷை புரிந்திரா விட்டாலும் பயம் புரிந்திருக்கவேண்டும். "...இது நல்ல பலமான கட்டுமானம், எத்தனை பேரையும் தாங்கும் ஓடினாலும், துள்ளினாலும் கூட ஒன்றும் ஆகாது." அதைப்பரீட்சித்துப்பார்க்கிற துணிவுகள் எங்களுக்கு இருக்கவில்லை.

பள்ளத்தாக்குத், தொடுவானில் சங்கமிக்கிற விளிம்புவரை கண்களால் துலாவிய போது, அந்தப்பிரமாண்டமும் அந்த அமைதியும் ஆளையே கரைத்துவிட வல்லவையாகத் தெரிந்தன.'அழாதே குழந்தாய்' நாவலின் அட்டைப்படம் நினைவு வந்தது;இதே போன்றதொரு சித்தரிப்பு பார்வைமேடை, முப்பது நாற்பது அடிஅகலம் வரும். இரண்டுபக் கங்களிலும்- இங்கும் இரண்டு தகரம் வேய்ந்த கடைகள். கடைநிறையக் கைவினைப் பொருட்கள், 'ஃப்ரண்ட், ஃப்ரண்ட்' என்றழைக்கின்ற கடைக்கார இளைஞர்கள்!

'வந்துபார்த்துவிட்டுப் போங்கள்...'

'எல்லாம் வாங்கியாயிற்று...'

'பரவாயில்லை பார்த்துவிட்டுப் போங்கள்ஃப்ரண்ட்'

இங்கே கவனிக்க நேர்ந்த இன்னொரு விசயம் இது. இந்தக்கடைக்கார இளைஞர்கள் முன்பின் தெரியாத எல்லோரையும் கூட அந்நியோந்நியமாக "நண்பரே" என்றழைக்கிறார்கள். "நீங்கள் வாங்க வேண்டாம், பார்த்துவிட்டுப்போங்கள்" என்கிறார்கள். பார்த்தால், ஏதோ ஒரு விலையைச் சொல்லிவிட்டு, "நீங்கள் என்னவிலை வேண்டுமானாலும் கேட்கலாம், கேளுங்கள்" என்கிறார்கள். அப்படிக்குறைவாகக் கேட்டாலோ, ஒன்றும் வாங்காமல் வெளியே வந்தாலோ கூட



(கென்யப் பயணக்கட்டுரை)

# காட்டு வெளியிடை

சாந்தன்

அன்பாகவே வழியனுப்பிவைக்கிறார்கள். வியாபாரத் தந்திரமோ பண்பாடோ- எது வென்றாலும் அது நன்றாகவே இருந்தது. கென்ய வியாபாரிகள்- அங்காடிக்காரர்கள் பற்றி ஏற்கெனவே சிலநண்பர்கள் சொன் னதை பின்பற்றி விற்கிறவன் சொன்ன விலையில் எட்டில் ஒரு பங்கு, பத்தில்ஒரு பங்கு கூட கேட்டிருக்கிறேன். ஓரிரண்டு தரம் அதில் சரியும் வந்திருக்கிறது. ஆனால் அவர்களிடம் ஒருபோதும் கோபம் மட்டும் வரவில்லை.

இதே போலக் கவனிக்க நேர்ந்த இன்னொரு விசயம், நாங்கள் 'இலங்கையிலிருந்து வந்தவர்கள்' என்பது தெரிந்த போது பலர் முகத்தில்தோன்றிய ஒரு அந்நியோந்நியமும், பாராட்டுகிற பாங்கும்! அந்தப் புண்ணியம் கிரிக்கெட்டுக்குத் தான் சேரவேண்டுமென்றும் புரிந்தது. ஆனால் அந்த விளையாட்டின்பரம வைரியாக என்னைக் கருதிக்கொள்கிற நான் அதன் காரணமாய் வந்த அந்த அனுகூலங்களை ஏற்றுக்கொள்ளவும் சங்கடமாயிருந்தது! ஆனாலும் மிகப் பல இடங்களில் நாம் எங்கிருந்து வருகிறோம் என்ற கேள்விக்கே கூட இடமில்லாமல், இந்தியர்களாகவே கருதப்பட்டு -அதிலும் கென்ய இந்தியர்களாகவே நோக்கப் பட்டோம்.அடுத்தடுத்த நாட்களில் 'மஸாய் மாறாவில்' நின்ற போது, "அயூப் தனது உறவினர்களைத்தான் அழைத்து வருகிறார்" என்றுசக வழிகாட்டி- சாரதிகள் தம்மைக் கிண்டல் பண்ணியதாக மகிழ்வும் ஒரு விதபெருமையுமாய் அயூப் எம்மிடம் சொன்னார்! சுற்றுலா வாகனமான எனது வானைக் கவனித்தவர்கள் மட்டுமே 'எந்த நாடு?' என்பதைக் கேட்டார்கள்.

நக்குறு வாவியோரமாக- காட்டின் நடுவில் இருந்த விடுதிக்குப்போக முதல் நக்குறு நகரின் கடைத் தெருவில் வானை நிறுத் தினார் அயூப்.வழமை போலவே கமெரா சம்பந்த மான அலுவலொன்றிருந்தது. விமுக்திக்கு நாங்கள் நிறுத்திய இடத்திற்கு அருகிலிருந்த கடையின் பெயர்ப்பலகை 'ஆஹா' என வைத்தது. புத்தகக் கடை! செல்வாவை வானில் இருக்கச்சொல்லி விட்டு இறங்கி அவசர அவசரமாக உள்ளே போனால், அருமையான புத்தகங்கள்! இதுவரை பெயரே கேள் விப்பட்டிராத பல புதிய கென்ய எழுத்தாளர்களின் ஆங்கில ஆக்கங்கள் அங்கிருந்தன. மதிய உணவுக்குப் போய்ச் சேரவேண்டிய நேரத்திலும் பார்க்க இப்போதே ஒரு மணிநேரம் பிந்தி விட்டுப் பறக்கிற அயூப் திரும்புவதற்குள் இவ்வளவு புத்தகங்களையும் தட்டிப் பார்த்து விடவேண்டுமேயென்றும், இனிப் போகிற இடமெல்லாம் இந்தப் புத்தக மூட்டையையும் காவித்திரிய வேண்டு மேயென்றும் எழுந்த இரட்டைக் கவலைகளை இருந்த இடமே தெரியாமல் போக்கடித்தார்.

விற்பனையாளர். அவர் சொன்ன விலை சற்றுமுன் சுபுக்கியாவில் பள்ளத்தாக்கைக் குனிந்து பார்த்த போது ஏற்பட்டதை விடப் பெரிய தலைச் சுற்றைத் தரலாம் போலிருந்தது. உள்ளே போன வேகத்திலும் விரைவாய் வெளியே வந்தேன்! அந்த நேரத்தில் கூட இந்தப் புத்தக விஷயத்தில் வெறுங் கையோடு இலங்கை புக நேரிடுமென்று நான் எண்ணியிருக்கவில்லை; நைசோபிக் கடைகளை நம்பியிருந்தேன்.

வானுக்குப் போன போது அயூப் விமுக்தியும் அப்போதுமில்லை சரி அடுத்த கடையைத்தான் பார்ப்போமே என்றால் அது ஒரு பல்பொருள் அங்காடி இந்தியர்களுடையது. அழகழகான படங்கள் போட்ட அஞ்சலட்டைகள் சிலவற்றை வாங்கிக் கொண்டு திரும்பிய போது புகைப்படச் சுருள்கள் கண்ணிற் பட்டன. என்னிடம் 100 இலும் 200 இலுமாக மும்மூன்று சுருள்கள் கைவச மிருந்தன. அது போதும் இங்கிருந்தவை வேறு 400 ம் 600 மாகவே இருந்தன. இது எதற்கு ?

ஆனால் என் புகைப்படப் பிடிப்பு பற்றிய அறிவு எவ்வளவு போதாது என்ற கவலையும், அதன் விளைவாய் என்னென்ன அருமையான படங்களையெல்லாம் பாழாக்கி விட்டேன் என்ற கவலையும் ஊருக்கு வந்த பின் தான் ஏற்பட்டது..! ஏனென்றால் வந்த அன்று மாலையே - மழை தூறி மைம்மலும் கவிந்து கொண்டிருந்த வேளையில்- நக்குறு வனவிலங்கு சரணாலயத்தில், எட்டித் தடவுந் தூரத்தில் எங்களைக் கடந்து




போன காண்டா மிருக மந்தையெல்லாம் சுற்றிச் சுற்றி படம் பிடித்து, அந்த திருப்தியுடன் ஊருக்கு வந்ததும் படச் சுருள்களைக் கழுவக் கொடுத்துவிட்டு வாங்கிப் பார்த்தால் சிகரட் குடிக்கிறவனின் புகைவளை யங்களாய் அங்குமிங்கும் ஏதோ தெரிந்தன!

நல்லகாலம் ஒரு படம் மட்டும் நிழலுருவாய்க் காட்டியது காண்டா மிருகங்களை. அதை 'ஸ்கான்' பண்ணி போட்டோ ஷொப் மூலம் பண்ணாத வைத்தியமெல்லாம் பண்ணிப் பிறகு புதுப்பித்து பார்த்த போது, எனது காண் டாமிருக மந்தை அங்கே இருளிலிருந்து வெளிவந்திருந்தது! வெற்றிக்களிப்புடன், பத்துப் பன்னிரண்டு வயதான சொந்தக் காரப்பையனொருவனிடம், "பார்த்தியா காண்டாமிருகம்!" என்று காட்டிய போது அவன் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தான் " இதோ?" தன்னோடு பகிடிவிட நான் முயன்றிருக்கிறேன் என்ற கோபம் அவன் கண்களிற் தெரிந்தது. ".... இது மாடுகள் மேயுது" என்ன தான் சத்தியம் பண்ணி னாலும் அவற்றைக் காண்டா மிருகங்களாக ஏற்க அவன் தயாராயில்லை. ஆனால் இதிலும் பெரிய வயிற்றெரிச்சல் இனித்தானிருந்தது. படச்சுருளைக் கழுவிப் பதித்துத் தந்த நண்பருடன் பேசிக்கொண்டிருந்தபோது "நீங்கள் இந்தப் படங்களை 200ல் எடுத்திருக்கிறீங்கள். 400ல் அல்லது 600ல் எடுத்திருந்தால் சும்மா அந்த மாதிரி வந்திருக்கும்" என்றார்!

மூடத்தொடங்கிய கடைகளைப் பார்த்த போது தான் அன்று சனிக்கிழமை என்பது நினைவு வந்தது. நகரிலிருந்து புறப்பட்டு ''லேக் நக்குறு லொட்ஜ்'க்குப் போய்ச் சேர்ந்த போது மணி நாலு இன்றைக்கும் மதிய உணவிற்கு ஒதுக்கப்பட்டிருந்த நேரம் முடிந்து ஒருமணித்தியாலமாகிவிட்டிருந்தது! அது கூடப் பரவாயில்லை, அன்று மாலை எங்கள் 'கேம் ட்றைவ்' சரணாலயத்தில் சுதந்திரமாய் சஞ்சரிக்கும் விலங்கு களைப்பார்க்க வாகனத்தில் தேடித் திரி வதற்கான நேரம் வேறு சுருங்கிக் கொண்டிருந்தது! என்ன தான் அவசர அவசரமாக அறைக்குப் போய் தோய்ந்து, உடைமாற்றி, சாப்பிட்டுக் கூடத்தில் அப்போது கிடைத்த சிற்றுண்டியைத் தின்றது பாதி தின்னாதது பாதியாக ஓடினாலும் ஐந்தே காலாகியிருந்தது. மழை மந்தாரம் வேறு. (தொடரும்)

தரப்பட்டதல்ல வாழ்க்கை. செயல்களே, செயல்கள் மட்டுமே, வாழ்வின் தகுதியை நிர்ணயிக்கின்றன. - இம்மேன்யல்ஃபிக்ட்டே

## மனிநிலைகள்



அவசரமாக கவிதை எழுதிக் கொண்டிருக்க
"ஏன் குழப்புகிறாய் என்னை?"
என்றபடி ஓங்கி அடித்தேன்
உடனே இறந்த சேதி தெரியாமல்.
"விரத வேளை கொலை ஆகா" தென
பாட்டி பரபரத்தாள்.
"கையைப் போய் கழுவு முதல்
குருதி" என்றார் தந்தை.
"நுளம்புச் சுருள் ஒன்றை
கொழுத்தி வை" என்கிறாள் அன்னை.
எழுந்து சென்றே கையைக்கழுவி
சுருளை எடுத்துக் கொழுத்தினேன்
நுளம்புத்தொல்லை இல்லை -ஆனால்
எழுதுகின்ற 'மூட்' எங்கோ
போய்விட்டது - இப்போ.

ஜெகசுபதா

## குப்பி விளக்கு

இருளதனை விரட்டி
இதயங்களைத் துறந்து
வெறுமையான
வறுமையிலும்
பல இரவுகளில்
நிசப்தமில்லா பொழுதுகளில்
நின்மதியிழந்து
மரத்தடியில்
தலை சாய்க்கையில்
ஏழை மாணவனின்
எழுத்தாணியை
எடுக்க வைத்த
ஏழைக் குடிசையின்
எழில் மிகு அரசி.

க.மகேந்திரகுமார்

## கவிதை

அன்னம் ஊட்டினாய்
அன்பு மழை பொழிந்தாய்
அரவணைத்து மகிழ்ந்தாய்
அருகிலின்று நானில்லை
அனற் புழுவாய்த் துடியாதே
அழகிய ஈழமதை -நாம்
ஆளுகின்ற காலம் வரும்
அன்னையே கலங்காதே.

கி.உதயா




## சொந்தம்

கண்ணீருக்குச் சொந்தம் கண்கள்.
உள்ளத்துக்குச் சொந்தம் உணர்வுகள்
உருவத்துக்குச் சொந்தம் அங்கங்கள்
அறிவுக்குச் சொந்தம் தேடல்கள்
வீட்டாருக்குச் சொந்தம் அயலவர்கள்
வீரனுக்குச் சொந்தம் துணிவு
தமிழருக்குச் சொந்தம்
தமிழ் ஈழ தாயக நிலங்கள்.

இரா.மாலா

## நீண்ட வானில்



நீண்ட வானில் நிலவுக்குப் பின்னால்
நின்மதி இருக்கும் என எண்ணி
நானும் பறந்தேன் கனவில்
நம்ப முடியவில்லை என்னால்
நடந்த சம்பவம் ஆட்சி அமைக்க
அங்கேயும் பெருங் கூட்டம்.

வி.விஜிதா

## இனிய வாழ்வு

அண்ணன் சேனையிலே
அணிதிரண்டு நிற்போம்
அழிக்க நினைப்பவனை
அடியோடு அழிப்போம்.
இனிய வாழ்வுதனை
இணைந்தே நாம் பெறுவோம்.

### காதல்

சில இதயங்களை
சிதறடிக்கின்ற
வெடிகுண்டு.

### பிச்சை

பணமில்லாதவன்
வயிற்றில்
பசிக்குழந்தை
பிறப்பெடுக்கின்றபோது
உணவிற்காகக் கைகள்
உயர்கையிலே
உள்ளங்கையைத்
தொடும்
வெள்ளி வட்டம்.

### இரவு

கண்களுக்கு
உறக்கம் தரும்
தூக்க மாத்திரை.

### மரணம்

ஆடுகின்ற உயிர்களை
அடக்குகின்ற இசை.

### தோல்வி

சின்னப் பெயரைக் கொண்ட
பெரிய கொடியவன்


க.முருகானந்தன்

## ஊக்கமாத்திரை

# தலைவிதி என்று ஏதும் இல்லை

எல்லாம் விதிப்படி தான் நடக்கும் என்று பலர் சொல்லக் கேட்டிருக்கின்றோம்.விதி சதி செய்துவிட்டது என்று விதியை முற்றாக நம்புகிறவர்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள். விதி என்னை வஞ்சித்து விட்டதுஎன்று பலர் அழுது புலம்புவதையும் கேட்டிருக்கிறோம்.

விதி என்பது உண்மையா?நமக்கு மேலான ஒரு சக்திதான் இந்த விதியை நிர்ணயிக்கின்றதா?எல்லாம் விதிப்படி நடக்கும் என்றால் நாம்கைகளைக் கட்டிக் கொண்டு பேசாமல் இருந்து. விடலாமே!



எவ்வளவுதான் ஆராய்ந்து பார்த்தாலும் இயற்கையின் போக்கைத் தவிர விதி என்ற ஒன்று தனியே இருப்பதாகத் தெரியவில்லை வேண்டுமானால் நடந்து முடிந்தவற்றை விதி என்று சொல்லி விட்டும் போகலாம். விதிப்படி நடக்கும் என்ற வாதம் ஏற்புடையதல்ல !இயற்கையின் நகர்வில் நம்மையும் மீறிச் சில சம்பவங் கள் நடக்கலாம் இதற்கு விதி காரணம் என்று நம்புவது அபத்தமானது.

எனவே நம்முடைய வாழ்க்கைப் போக்கு எதுவாக இருந்தாலும் அதற்கான பொறுப்பை நாம்தான் ஏற்றுக் கொள்ளவேண்டும் .எல்லாம் விதிப்படி தான் நடக்கும் என்ற நம்பிக்கை மனிதனின் முயற்சியை பலவீனமாக்கி விடு கின்றது.இதையே நம்பியிருந்தால் வாழ்வில் நாம் என்றும் சரிவுகளையே சந்திக்க நேரும் உயர்வுக்கான திறவுகோல் தொலைந்து போகும்.


விதி என்றென்றும் இல்லை என்பதை விதியை நம்புகின்ற சமுதாயம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே சான்றோர் விதியை மதியால் வெல்லலாம் என்று உரைத்தனர்.

விதி என்ற மூட நம்பிக்கை எமது முயற்சியை தடுக்கிறது உயர்ச்சியை விரட்டுகிறது உறுதியை கலைக்கிறது தன்னம்பிக்கையை தகர்த்து எறிகிறது.

எனவே நாம் இனி ஒரு புது விதி சமைப்போம் விதி என்றதெல்லாம் எம்மால் உருவாக்கப்படுகின்றவையே என உறுதியாய் நம்பிடுவோம்.

ச.முருகானந்தன்

## குறுக்கெழுத்துப்போட்டி - 67



பெயர்:-..............................

முகவரி:-..............................

### இடமிருந்து வலம்

01. கூடிச்செல்லும் சுரவரிசை.
08. சந்திரன்.
13. காற்று.
16. கல்வி கற்கும் இடம்.
25. உடல்.
33. கல்லில் வடிப்பது.
40. நெல்லில் இருந்து பெறப்படுவது.
47. ஆபரணம்.

### மேலிருந்து கீழ்

01. தொடக்கம்.
03. ஓலையால் செய்யப்பட்டபொருள் (குழம்பியுள்ளது)
07. பேசும்பறவை.
16. மூவேந்தரில் ஒருவர்.
22. ஆடவன்.
25. வம்சம்.
38. தெரு.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.65 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. இந்தியா.
06. காடு.
09. காமதேனு.
19. சீமான்.
24. சர்ப்பம்.
36. பூமி.
44. ஊமை.

**மேலிருந்து கீழ்**

01. இறைவன்.
09. காப்பு.
10. மஞ்சள்.
14. ஆசீர்வாதம்.
26. அச்சம்.
27. பரிசு.
32. ஆதி.
36. பூனை.

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.67
வெள்ளிநாதம்
ஈழநாதம்,
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.65 இன் பரிசுக்குரியவர்

செ.கேசலா,
இல.27, புத்துவெட்டுவான்,
கிளிநொச்சி.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.65 இன், பாராட்டுக்குரியவர்கள்.

01. பே.பிரியங்கா, மு/விக்னேஸ்வரா வித்தியாலயம் புதுக்குடியிருப்பு.
02. கலைமதி. த.போ.க. விசுவமடு.
03. ஆ.பிரசன்னா, மருதம் வாணிபம், கந்தபுரம்.
04. செ. கயானி, உருத்திரபுரம், கிளிநொச்சி.
05. கவிதா, மன்னார்.
06. தி. அனுசியா, தம்பிராய், பூநகரி.



தமிழீழ போக்குவரத்து பொதுமுகாமையாளரும், முல்லைமாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினரும் முள்ளியவளை கோட்ட தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர்.

# எனது அன்புக்குரிய வன்னி வாழ் மக்களே!
# முல்லை மாவட்ட உடன்பிறப்புக்களே!

2004 பாராளுமன்றம் பொதுத்தேர்தலிலேயே இலங்கை தமிழரசுக்கட்சியின் வீட்டுச்சின்னத்திலே வன்னி மாவட்ட வேட்பாளராக போட்டியிட்ட எனக்கு 30309 வாக்குகளை நீங்கள் எனக்கு அளித்ததன் மூலம் வன்னித்தொகுதியில் முல்லை மாவட்ட பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளேன். நான் பெற்ற இந்த வெற்றியிலே உங்கள் அனைவரது ஆதரவும் பங்களிப்பும் முக்கியமானதாகும்.

குறிப்பாக முல்லை மாவட்ட அரச அதிபரும் அவரின் பணிமனை உத்தியோகத்தர்களும் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான்,துணுக்காய், பாண்டியன்குளம் ஆகியவற்றின் உதவி அரச அதிபர்களும் அவர்களின் பணிமனை உத்தியோகத்தர்களும் ஒவ்வொரு உதவி அரச அதிபர்கள் பிரிவுக்குட்பட்ட சகல கிராம அலுவலர்களும் அவ்வாறே உள்ளூராட்சி ஆணையாளர் பிரிவுக்குட்பட்ட சகல உத்தியோகத்தர்களும் இலங்கை போக்குவரத்துச்சபையின் வவுனியா, மன்னார் காணிகளின் அத்தியட்சர்கள், பணியாளர்கள் அனைவரும் வன்னிமாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்களும் பணியாளர்களும் தமிழீழ போக்குவரவுக்கழகத்தின் சகல நிலைப்பணியாளர்கள் முல்லை மாவட்ட சகல தமிழீழ விற்பனை வாணிபங்களும் முல்லை மாவட்ட வர்த்தக சங்கங்களும் சகல தொழில் சார் நிறுவனங்கள் அரச சார்பற்ற நிறுவனங்களும் மாதர்கிராம அபிவிருத்திச்சங்கங்களும் சிக்கனக்கூட்டுறவுச்சங்கங்களும் சமாசமும் கமக்கார அமைப்புக்களும் முல்லை அழககங்களின் சமாசம் அதன் பிரதேச அழககங்களின் தொழிலாளர்களும் சகல வெண்மை வாணிபத்தினரும் முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசமும் சங்கங்களின் தொழில்களும் முல்லை மாவட்ட பலநோக்குச்கூட்டுறவுச்சங்கங்களும் பணியாளர்களும் சகல பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்கள் அரசியல்துறை, நிர்வாக சேவை கடற்புலிகளின் அரசியல்துறை பொருண்மியம், தமிழர் புனர்வாழ்வுக்கழகம், நீதிநிர்வாகம், வருவாய்த்துறை ஆகியவற்றின் சகல பொறுப்பாளர்கள், பணியாளர்கள் அனைவரும் அன்றையதினம் வாக்களிப்பதற்காக மக்களை ஏற்றியிறக்கிய உழவுயந்திரங்கள், உந்துருளிகள், கையேஸ் வாகனங்கள், கார்கள், பாரஊர்திகள், ட்ரக் வண்டிகள் ஆகியவற்றின் உரிமையாளர்களும் கிராம வலய மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவைகளின் உறுப்பினர்களும் வன்னியின் ஆசிரிய சமூகங்களும் இந்து கிறிஸ்தவ ஆலயங்களின் பரிபாலன சபையினரும் வற்றாப்பளை கண்ணகை அம்மன் பரிபாலன சபையினரும் ஊற்றங்கரை சித்திவிநாயகர் ஆலய பிரதம குரு அவர்களும் கலியாண வேலவர் ஆலய பிரதமகுரு அவர்களும் வன்னிமாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஒழுங்கமைப்பு குழுவினரான சபா.ஞானம், வசந்தன் ஆகியோர்களும் முல்லை மாவட்ட விளையாட்டுக்கழகங்களும் வன்னியின் வாக்காளப்பெருமக்கள் அனைவரும் அகத்தியர் வைத்தியநிலையம் கற்சிலைமடு சகல துறைசார்ந்த பொறுப்பாளர்கள், போராளிகள், பணியாளர்கள், லவன் பப்படத்தொழிலாளர்களும், ஊழியர்களும் எனது வெற்றிக்காக அரும்பாடுபட்டு உழைத்தவர்கள் ஆவீர்கள். அத்துடன் காவல்துறையினரின் அர்ப்பணிப்பு மிகுந்த சேவை மிகவும் பாராட்டத்தக்கதாகும் ஆகவே என்னால் மேலே குறிப்பிடப்பட்ட சகலருக்கும் பெயர் குறிப்பிடத் தவறியவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை ஏற்றுக்கொள்வீர்களாக.

கொட்டும் பனியையும் பொருட்படுத்தாது நித்திரையின்றி முதல் நாளே பல கிலோமீற்றர் கடந்து சென்று தங்கி மறுநாள் சுட்டெரிக்கும் வெயிலில் எமது தேச விடுதலை ஒன்றையே உளத்தில் நினைத்து நீண்ட தூரம் சென்று ஆர்வத்துடன் வாக்களித்த எனதருமை மக்களே!

நான் பெற்ற வெற்றி உங்கள் வெற்றி உரிமையின் வெற்றி தமிழீழ உணர்வின் வெற்றி தமிழீழ ஒருமைப்பாட்டின் உறுதியின் வெற்றி!

"தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அதற்கோர் குணமுண்டு"

என்ற உண்மையை சகல உலகத்தினருக்கும் உணர்த்த உணர்வோடு ஓடோடி வந்து வாக்களித்த எனதருமை மக்களே தமிழ்த் தேசிய ஒற்றுமை, சுயநிர்ணய உரிமை, தன்னாட்சி ஒருமைப்பாடு ஆகியவற்றுக்காக எனது குரல் எப்போதும் ஓங்கி ஒலிக்கும் என்று உறுதி கூறி இந்த உன்னத இலட்சியத்திற்காக என்னை முன் நிறுத்திய எமது பெருமிதத்திற்குரிய தேசியத் தலைவர் அவர்கட்கும் எனது பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்வதில் பெருமை அடைகிறேன்.

நன்றி வணக்கம்.

**ச.கனகரத்தினம்,**
**பாராளுமன்ற உறுப்பினர்,**
**வன்னி.**

(சி-9444)



# குறிதவறா தாக்குதலிலிருந்து ஹமாஸ் தன்னைப் பாதுகாக்குமா?

கார்த்திகேசு

கினறமதெனபதும் தற்போது வெளிப் பட்டு வருகின்றது.

இஸ்ரேல் இந்த உயர்தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி கடந்த 2004.03.23 அன்று அதிகாலை தொழுகைக்குச்சென்று திரும்பிக் கொண்டிருந்த ஹமாஸ் இயக்கத்தின் ஆன்மீகத்தலைவர் ஷேக் அகமட் யாசீனை கொன்றொழித்தது. இதே போன்று இதற்கு முன்னரும் ஹமாஸ் இயக்கத்தின் முன்னணித் தலைவர் களில் ஒருவரை படுகொலை செய்தி ருந்தது. மீண்டும் யாசீனுக்கு அடுத்த படியாக புதிய தலைவராக நியமித்தி ருந்த அப்துல் அஸீஸ் அல்-ரந்திஸி யை கொன்றொழித்திருக்கின்றது.

பலஸ்தீனத்தலைமையை இது அமெரிக்கா பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவது போன்ற ஒரு நிலைப்பாட்டை மத்திய கிழக்குத் தொடர்பாக வகுத்திருப் பதையே காட்டுகிறது.

தக்கதொரு தருணத்தை எதிர்பார்த் திருந்த இஸ்ரேல் ஹமாஸ் அமைப் புத்தலைவர் யாசீன் இறந்த பின்னர் அடுத்த தலைவராக நியமிக்கப்பட்ட அப்துல் அஸீஸ் அல்-ரந்திஸி வரை இதேபாணியில் கொன்றொழித்த தென்பது ஹமாஸ் இயக்கத்தின் உள்ளகப்பாதுகாப்புத் தொடர்பான எச்சரிக்கையை பலமாகவே சிந்திக்க வைக்கிறது.

அடுத்தடுத்து இரு தாக்குதல்கள்; இரு இழப்புக்கள்; இதில் ஹமாஸ்

இத்தாக்குதலின் பின்னணியில் இஸ்ரேலுக்கு பெருமளவு உதவுவது ஹமாஸ் இயக்கத்திற்குள் ஆழமாகப் புரையோடியிருக்கும் துரோகத்தனம் தான். இல்லாவிடில் இப்படியான தொரு தாக்குதலை நடத்தியிருக்க முடியாது.

அமெரிக்கா இப்போது ஹமாஸ் இயக்கத்தையும் பயங்கரவாதப் பட்டியலுக்குள் அடக்கி இஸ்லாமிய தீவிரவாதிகள் சிலர் போடும் திட்டங் களை அதாவது "செப்ரெம்பர்11 " போன்ற ஒரு தாக்குதலை அமெரிக் காவுக்குள் ஏற்படுத்திவிடக்கூடிய ஏதுநிலைகளையே அதிகளவில் தோற்றுவிக்கிறது.

அத்தோடு அமெரிக்க சனாதி பதி தேர்தலில் புஷ்க்கு எதிராகப் போட்டியிடும் ஜோன் ஹெரி இந்தத் தாக் குதலை ஆதரித்தி ருக்கிறார். ஹமாஸ் சமாதான நடவடிக்கைகள் பிற்போடப் பட்டு பாரிய அளவில் வன்முறைகள் வெடிக்கக்கூடிய அபாயத்தையே தோற்றுவித்துள்ளது.

இதேவேளை, ஹமாஸ் அமைப் புக்கு புதிய தலைவர் ஒருவரை தேர்ந்தெடுத்துள்ளது. இவரின் பாது காப்பினைக் காரணம் காட்டி அவரது பெயரை இந்த அமைப்பு வெளியி டப்படவில்லை. ஆனால் இதன் மூலம் இஸ்ரேலிய வான் தாக்குதல்களில் இருந்து ஹமாஸ் இயக்கம் தன்னுடைய தலைமையைப் பாது காத்துக் கொள்ளமுடியுமா என்பது சந்தேகமே. இந்த நிலையில் ஹமாஸ் இயக்கம் தன்னுடைய அமைப்புக் குள் இருக்கும் துரோகிகளை வெளி யேற்றி இஸ்ரேலின் இலக்குத்தவறாத் தாக்குதலுக்குப் பிரதான காரணமாக இருக்கும் தகவல் வழங்கலை முறிய டித்தேயாக வேண்டும்.

தற்பொழுது உலகில் அதிர்ச்சிக் கும் வியப்புக்கும் உள்ளாக்கியிருக் கும் நடவடிக்கைகளில் இஸ்ரேல் ஈடுபடுகின்றதென்பது மிகவும் கவனத் திற்குரியது. ஒரு ஹெலி கொப்ரரில் இருந்து துல்லியமான முறையில் இலக்கைத் தாக்கும் திறனை வெற்றி கரமாகக் கையாண்டு வருவது இஸ் ரேல்தான். இதற்குப்பெருமளவில் இப்போது பலியாகிவருவது ஹமாஸ் அமைப்புத்தான்.

இஸ்ரேல் இஸ்லாமிய தீவிரவாதி களைத் தேடி மட்டுமன்றி பலஸ்தீன மக்களின் தலைமையை அழிக்கப் போவதாக பகிரங்க அச்சுறுத்தலை விட்டிருக்கிறது. இதனை ஆதரிக்க வும் இதற்குப் பின்னணியில் தொழி நுட்ப மற்றும் புலனாய்வு தகவல்க ளையும் வழங்குவதில் பாரிய வலுக் கொண்ட சக்தி பின்னணியில் இருக் அழிக்கும் இந்தப்படுகொலை முயற்சி மூலம் இஸ்லாமியத் தீவிரவாதிகள் சமாதானமுயற்சிகளின் நம்பிக்கை களுக்குப் பதிலாக தீவிரவாதத்தை தூண்டி விட காரணமாக அமையப் போகிறதே தவிர வேறெந்தச் செயற் பாடுகளையும் ஏற்படுத்தப்போவ தில்லை.

இந்த பலஸ்தீனப் தலைமைகளை படுகொலை செய்யும் , முயற்சிக்கு அமெரிக்க நிர்வாகத்தின் ஆதரவும் மறைமுகமாக இருக்கிறதோ என்ற சந்தேகத்தைத் தற்போதைய நடவடிக் கைகள் எடுத்துக்காட்டுகிறது.

இது இவ்வாறிருக்க அமெரிக்கா தன்னுடைய உயர் தொழில்நுட்பம் ஒன்றைத்தானே பரீட்சிக்காமல் இஸ்ரேலின் ஊடாக பரீட்சிப்பதன் மூலம் தன்னுடைய இஸ்லாமிய எதிர்ப்புணர்வை தனக்கச்சிதமாக நிறைவேற்றி வருகிறது.

இயக்கத்தலைவர் அப்துல் அஸீஸ் அல்-ரந்திஸி காஸா பிரதேசத்தில் செக்ரட்வன் எனப்படும் குடியிருப்புப் பிரதேசத்தின் ஊடாக பயணத்தை மேற்கொண்ட போதே இஸ்ரேலிய உலங்குவானூர்தியில் இருந்து இரண்டு ஏவுகணை அப்துல் அஸீசின் காரை நோக்கி ஏவிய போதே இந்த சோகநிகழ்வு நிகழ்ந்தது. சம்பவம் நடந்த அந்தக்காரைச்சுற்றி செய்தி அறிந்த மக்கள் கதறி அழுதார்கள் என்பதும் இதற்குப்பதிலடி கொடுக்க வுள்ளதாகவும் கூறியிருப்பதையும் இங்கு கவனத்தில் எடுக்கவேண்டும்.

அதேவேளை இஸ்ரேலியப்படை யினரின் வானொலிச்சேவையில் இந்தத் தாக்குதல் நடத்திய படையி னரை இஸ்ரேலியப்பிரதமர் ஏரியல் ஷெரோன் பாராட்டியிருப்பதாகவும் அறியமுடிகிறது.

பயங்கரவாத அமைப்பு சமாதான முயற்சிகளுக்கு முன்வரவில்லை என்று கூறி இஸ்ரேலுக்கு பயங்க ரவாதத்தைத் தடுக்க உரிமை உண்டு என ஜோன் ஹெரி சுட்டிக் காட்டி இதற்கு தான் பூரண ஆதரவு தருவதாகவும் கூறியுள்ளார் என்பது மத்தியகிழக்கு தொடர்பாக அமெரிக் காவின் தலைமைகளை அலங்கரிக் கப்போகும் தலைவர்கள் கொண்டி ருக்கும் நிலைப்பாட்டையே தெளிவு படுத்துகிறது.

இந்த நிலையில் குறுகிய கால இடைவெளியில் ஹமாஸ் இயக்கத் தலைவர்கள் அடுத்தடுத்து படுகொலை செய்யப்பட்ட நிலையில்





# அறிதலும் நம்புதலும் நம்வாழ்க்கையில் அகம் புறம் சார்பான வெளிப்பாடுகளா?

அறிவும், நம்பிக்கையும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்ட எண்ணக் கருக்களாகக் கருதப் படுகின்றன. அறிவு அறிதல் என்ற



நடத்தையோடும், நம்பிக்கை நம்புதல் என்ற நடத்தையோடும் தொடர்பு கொண்டதாகக் காணப்படுகின்றன.

அறிவானது அறிதல் நடத் தையூடாக உலகு பற்றிய, வாழ்க்கை பற்றிய பல தகவல்களை அறிந்திரு த்தல் என்பதோடு, அதனைக் காரண காரிய ரீதியாகவும், தர்க்க ரீதியாகவும் இனங்கண்டு வைத்திருப்பதாகும்.

அறிவு வெறும் தக வல்களாக அமைந்திருப்பதில்லை. அறிவு என நாம் ஏற்றுக் கொள்ளும் விடயங்களில் ஒரு தகுதி இருப் பதைக் காணமுடிகிறது. இதனால் ஆரம்ப காலங்களில் ஆதாரங்களோடு கூடிய நம்பிக்கை அறிவெனக் கருதப்பட்டது.

நம்பிக்கை என்பது நம்பு தல் என்ற நடத்தையினூடாக ஆதா ரங்கள் அற்ற அறிவு நம்பிக்கை என வரைவிலக்கணப் படுத்தப் படுகிறது. இவ்வாறு அறிவு நம்பிக்கை என்பன வற்றினை வேறுபடுத்திக் கொள்வது எந்தளவிற்கு ஏற்புடையது என்பது ஆராட்சியாளர்களின் முடிவிலேயே தங்கியுள்ளது எனலாம்.

நம்பிக்கை ஆதாரங்கள் அற்ற அறிவு என்று கூறுதல் எல்லா நிலைகளிலும் பொருத்தப்பாடாக அமைவதில்லை எனலாம். குறிப்பாக நான் இதை நம்புகிறேன் என்று கூறுகையில், குறிப்பிட்ட ஆதாரங் களை அறிந்திருப்பதால் நம்புகிறேன் எனக் குறிப்பிடலாம்.

ஆனால் இத்தகைய நம்பிக்கை எல்லாச் சந்தர்ப்பங்க ளிலும் பொருந்துவதாகக் கூற முடியாது. ஏனெனில் இவை அறி விலும் பார்க்க முக்கியத்துவம் பெறலாம்.

உதாரணத்திற்கு கடவுள் பற்றிய நம்பிக்கையினை எடுத்துக் கொண்டால், எதுவித ஆதாரமும் இல்லாததால் கடவுள் பற்றிய அறிவு நம்பிக்கை என்ற தரத்தோடு காணப் படுகின்றதா அல்லது,

ஆதாரங்கள் ஏலவே உண ரப்பட்டிருந்ததால் நம்புகிறேன் எனக் கொள்வதா என்ற தர்க்க நிலைப் பாட்டினைத் தோற்றுவித்து விடலாம்.

மேலத்தேய மெய்யி யலாளரான "சென்தோமஸ் அக்கு வானஸ்" தனது இறையிருப்பு கொள் கையை முன் வைத்ததனூடாக அறிவிலும் பார்க்க நம்பிக்கை மேலானது என்பதை வலியுறுத் துகின்றார். இந்நிலையானது ஆதா ரங்கள் எதுவுமற்றதால் நம்பப்படு கிறது என்ற நிலையினைத் தவிர்த்து,

அறிவிலும் மேலானது ஒன்று, நம்பிக்கை என்ற நிலையில் கருதப்படுகின்றது. இதே போன்றே கீழைத்தேய மெய்யியலாளரான சங் கரும் இந்திய தத்துவத்தில் இனங் காணப்படுகின்றார்.

அறிவு ஒருவருடைய விவேகத்தோடு சம்பந்தப்படுகின்றது. விவேகிகள் அனைவரும் அறிஞர் களாக விளங்குவதில்லை. அதே போல அறிஞர்கள் அனைவரும் விவேகிகளாக அமைவதும் இல்லை. ஆனால் விவேகம் உடைய ஒருவ ரால் அறிஞர் போன்று நடந்து கொள் வதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றது.

நல்ல விவேகிகளிடம் எதனையும் வகுத்தும், நுணுகியும் ஆராயக்கூடிய திறப்பாடு இருப்ப தனால் பல தகவல்களை ஆதாரங் களோடு அறிந்து கொள்வதால் நல்ல அறிஞராக காட்சியளிக்கின்றனர்.

அறிவை மேம்படுத்த விவே கம் உதவுகின்றது. ஆனால் நம்பிக் கையோடு விவேகத்தின் தொடர் பாடல் முறையானது குறைவாகவே அவதானிக்கப் படுகின்றது.

பாமர மக்களை எடுத்துக் கொண்டால் அவர்களது நம்பிக்கை கள், நம்பிக்கையீனங்கள் என்பன விவேகக் குறைவால் தோன்றிய

(19ம்பக்கம் பார்க்க....)




# எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

அபிவிருத்தி என்பதன் மறு அர்த்தம் இயற்கையை அழிப்பது என்பதாக அர்த்தப்படுவதாக அமையாது காரணம் அபிவிருத்தி என்னும் செயற்பாட்டின். ஒரு அம்சமான நகரமயமாதல் என்பதன் அர்த்தம் தான் என்ன?

புதிய கட்டடங்கள், புதிய வீதிகள், புதிய தொழிற்சாலைகள், மின்சாரவசதிகள், என்று வரும் போது முதன்முதலில் அழிக்கப்படுவது எது என்று கருதுகிறீர்கள்.



இயற்கைதான் முதன் முதலில் அழிக்கப்படுகிறது. அதிலும் முக்கியமாக இயற்கைச் சமநிலையை பேணிவரும் பெரும் மரங்களே அழிக்கப்படுகின்றன.

பல வருடங்களாக வளர்ந்து கிளைபரப்பித் தான் சார்ந்த பகுதியை பாதுகாக்கும் பாரிய மரங்கள் வெட்டிச் சரிக்கப்படும் காட்சி மனதை நெருடச் செய்யும் காட்சிகளாகும்.

சில தேவைகளுக்கு, அத்தியாவசிய, பாதுகாப்புக் காரணிகளுக்காக சில மரங்கள் தறிக்கப்படுவது தவிர்க்க முடியாதது தான். என்றாலும் பாரிய பிரதேசம் மரங்களின் அழிப்பில் வெறுமையாவது தேவைதானா?

மரங்கள் இல்லா இடங்களில் வெய்யிலின் கொடுமையை அனுபவிப்பவர்களே உணர்ந்து கொள்வார்கள் எமது நாடுகளைப் போன்ற வெப்பம் அதிகமான நாடுகள் மரங்கள். இல்லாக் கொடுமையை அனுபவித்து வந்துள்ளன. வரப்போகின்றன.

மரங்களை அழிக்கும் தேவைகளுக்கான மாற்று ஏற்பாடுகள் தொடர்பான அறிதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலை நாடுகள் பல இவற்றிற்கு தீர்வு கண்டுள்ளன. சாலைகளில் உள்ள மரங்களை அழிக்காமலே மின்சாரம், ஏனைய வசதிகள் அந்த நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. என்பதை நாம் கவனத்தில் கொள்வோம்.

# நெற்பயிருக்கு பசளையாக வைக்கோல்

***ஏன் வைக்கோலை பசளை யாகப் பயன்படுத்த வேண்டும்?***

01. மண்ணிலிருந்து பயிராக எடுக்கப்படுகின்ற போசனைப் பதார்த் தங்களை மீண்டும் மண்ணில் நிலைப் படுத்துவதற்காக.

02. மண்ணிலிருந்து எடுக்கப்படுகின்ற போசனைப் பதார்த்தங்கள் பயிரின் பல்வேறு பகுதிகளில் சேமிக்கப்படு கின்றன.

03. பயிரின் வளர்ச்சிக்கு பயன் படுத்தப்படும் போசனைகளில் 50% மானவை வைக்கோலில் சேமித்து வைக்கப்படுகின்றன.

04. நெல் செய்கையில் கழிவுப் பொரு ளாகக் கிடைக்கும் வைக்கோலை மீண்டும் வயலுக்கு இடுவதால் மண் வளம் அதிகரிக்கின்றது.

05. இரசாயனப் பசளைகளின் பாவனை அளவை குறிப்பிட்டளவு குறைக்கலாம்.

***எப்படிப் பயன்படுத்துவது?***

01. 1ஏக்கரில் 1 போகத்தில் அறு வடை செய்த வைக்கோலை அதே பரப்பளவிற்கு பாவிக்க வேண்டும். இது 3 தொன்களுக்குக் குறையாமல் இருக்கவேண்டும்.

02. அறுவடை செய்ததும் வைக் கோலை பாத்திகளில் சிறுசிறு கும்பிகளாகக் குவிக்கவேண்டும்.

03. இக்கும்பிகளுக்கு ஒரு கைபிடி யளவு யூரியாவை விசிறி விடுவதால் விரைவாக உக்கலடையச் செய்யலாம்.

04. 1 வது உழவின் போது இக்கும் பிகளை தவிர்த்து உழ வேண்டும்.

05. 2 வது உழவின் போது இவற்றை பரவி மண்ணுடன் கலந்து விடுதல் வேண்டும்.

(சி.937A)

***இதனால் ஏற்படக்கூடிய நன்மைகள.***

01. 3 தொன் வைக்கோலை இடு வதால் சிபார்சு செய்யப்பட்ட நைதர சன் பசளையில் 10% குறைத்து இடலாம். இது ஏக்கர் ஒன்றிற்கு 10 Kg யூரியா ஆகும்.

02. அடிக்கப்பட்டுப் பசளையாக மியூறேட் ஒவ் பொட்டாசை வயலுக்கு இடத்தேவையில்லை.

***வைக்கோலில் இருந்து கிடைக்கும் போசனைகளாவன.***

| | | | |
|---|---|---|---|
| நைதரசன் | 0.6% | 18kg | N |
| பொசுபரசு | .08% | 2kg | P |
| பொட்டாசு | 1.8% | 54kg | K |

01. ஏனைய நுண்மூலகங்களைப் பயிருக்கு வழங்குகின்றது.

02. மண்ணின் வளத்தைப் பேணு கின்றது.

03. அசேதனப் பசளைகளை வடிந்து செல்லவிடாது பிடித்து வைத்திருக்க உதவுகிறது.

04. மண்ணின் ஈரலிப்பைப் பிடித்து வைக்கின்றது.

05. உற்பத்திச் செலவைக் குறை வடையச் செய்கிறது.

06. ஏக்கரொன்றிற்கான விளைச்சல் 10-12% வரை அதிகரிக்க உதவு கிறது.

# கோழி எருவைச் சேகரியுங்கள்

கோழிப்பண்ணையாளர்கள் கோழி எருவைச் சேர்த்துப் பாதுகாத்துவைத்துக் கொள்ளுங்கள், உங்கள் வீட்டுத்தோட்டங்களிற்கு பயன்படுத்தலாம், பயிருக்கு உடனடியாகக் கிடைக்கக் கூடிய பல சத்துக்களை உள்ளடக்கிய இயற்கை உரம் கோழி எரு ஆகும்.

கோழி எருவில் பயிரின் வளர்ச்சிக்குத்தேவையான நுண் போசனை மூலகங்களான இரும்பு, கல்சியம், மக்னீசியம், செப்பு, மகனிசு, சோடியம், நாகம், கந்தகம் போன்றவையும் அடங்கியுள்ளன.

கோழி எருவை குவியலாகப் போட்டு வைக்கும் போது அதிகளவு சூடு ஏற்பட்டு நைதரசன் வீணாகிப்போய்விடும் இவ் வீண் விரயத்தைத் தடுக்க கோழி எருவில் சுண்ணாம்புப் பற்று அதிகமாக இருப்பதால் 'அமிலத்தன்மை வாய்ந்த மணல் பிரதேச மண்ணிற்கு பயன் படுத்துதல் நல்லது.

தோட்டங்களுக்குக் கோழி எருவை இடும் போது மண்ணின் பௌதீக கட்டமைப்பு விருத்தி அடைவதுடன் வளமடைகிறது.

தக்காளி. உருளைக் கிழங்கு போன்றவற்றில் ஏற்படும் நெமற்றோட்டுக்களைக் கட்டுப்படுத்துவதற்கும் கோழி எரு பயன் படுவதாக அறியப்பட்டுள்ளது. கட்டுப்படுத்தும் அளவு இடப்படும் கோழி எருவின் அளவில் தங்கியுள்ளது. அதிகஅளவு கோழி எருவை இடுவுதால் நீண்ட காலத்திற்கு நெமற்றோக்களைக் கட்டுப்படுத்தலாம். எனவே தொடர்ச்சியாக கோழிஎருவை இடுவதால் பயிர்களைத் தாக்கும் நெமற் றோக்களைக் கட்டுப்படுத்துவதோடு விளைச்சலும் அதிகரிக்கும் ஆகவே வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடுபவர்கள இன்றிலிருந்தே கோழி எருவை சேகரித்துக்கொள்ளுங்கள். தோட்டச் செய்கைக்கு கோழி எரு முக்கிய பசளையாகக் கருதப்படுகிறது!

# நன்மை பயக்கும் உரையாடல்



இறைக்க இறைக்க ஊறும் நீர்போல உரையாட உரையாடசிறப்புப் பெறும் சிந்தனைகள் உரையாடலின் மூலம் மனச்சுரங்கத்திலிருந்து புதுக் கருத்துக்கள் தானாகவே ஊற்றெடுக்கும் சிறந்த நண்பனை உருவாக்குவதும், புதிய உறவுகளை உருவாக்குவதும் இவ்வுரையாடலே.

பொதுவாக மனிதர்களின் உரையாடல் என்னும் போது தமது கருத்துக்களை வெளிப்படுத்தினால் மட்டும் சரியென்று கருதுகின்றனர். உண்மையில் உரையாடலின் உன்னதம் என்னவெனில் எமது கருத்துக்களை எப்படி உன்னிப்பாக முன்வைக் கின்றோமோ, அதுபோலவே மற்றவர் கருத்துக்களுக்கும் முன்னுரிமை வழங்கி மதிப்பளிக்க வேண்டும்.

நாகரீகமுள்ள மனிதர்களின் பேச்சானது இனிமையாக இருக்குமே யொழிய கோமாளித்தனமாக இருக்காது. நிதானம், அவதானம், பொறுமை, புத்திகூர்மை, அனுபவமொழி, நல்லொழுக்கம் ஆகிய வற்றோடு தொடர்புபட்டிருக்கும்.

உரையாடும் போது மற்றவர் பங்கெடுத்துக் கொள்ளும் செய்திகளைப் பற்றியே பேசவேண்டும். அல்லாமல் தமது கருத்துக்களை வெளியிட்டால் போதும் என்றால் பேச்சு சலிப்புத்தட்டி விடுகிறது.

சலிப்புத்தட்டும் உரையாடலை எமது அரசியல்வாதிகளிடம் அதிகம் காணக்கூடியதாகவுள்ளது. முரண்பாடான, முரட்டுத்தனமான அரசியல் வாதிகளின் ஒழுங்கீனமான உரையாடலைத் தவிர்த்து எமது கருத்துக்களை வெளிப்படுத்தி அரசின் கருத்துக்களை பரிமாற்றிக் கொள்வதற்காகவே தமிழர்கள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை நாடியது என்பது உரையாடலின் மேன்மையை மேலும் வெளிப்படுத்து கின்றது. ஈழப் போராட்டத்தின் வெற்றிக்குக் கூட உரை யாடல் பெரும் பங்காற்றியதை யாரும் மறுப்பதற்கில்லை.

உரையாடலினால் ஆக்க பூர்வமான ஒரு செய்தியைப் பற்றிப் பேசுவோமாயின் இரு மூலப் பொருட்கள் ஒன்று சேரும் போது ஒரு புதிய பொருள் உருவாவது போல இருவரு டைய கருத்துக்களும் ஒன்று சேரும் போது ஒரு புதிய கருத்து உருவாக வாய்ப்புண்டு. உள வியலாளர் ரூசோ "அறிவுத் தெளிவு பெறுவதற்காக அவர்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் ஆராய்கின்றார்கள்." என்றார். அறிவு தெளிவு பெறுவதற்கு பேசும் போது பேசுவோரின் மணி மொழிகளை நம்முடைய இதயத்தில் நிலைத்திருக்கும் படி செய்ய வேண்டும்.

பெரும்பாலும் உரையாடலின் சிறப்பை வியாபார நிலையங்களில் காணக்கூடியதாக உள்ளது. நுகர்வோனால் அடுக்கப்படும் வினாக்களுக்கு பொருள் பற்றிய தெளிவை வியாபாரி இதமாகக் கூறி வியாபாரத்தை மேம்படுத்துகின்றான்.

இன்றைய யுகத்தில் எண்ணற்ற விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் இது போன்ற பல துறைவிற்பன்னர்களை உரு வாக்குவதற்கு உதவியது உரையாடலே.

சிறு பராயத்தி லிருந்தே உரையாடலை நாம் மேம்படுத்திக் கொண்டு வரவேண்டும். முக்கியமாக பள்ளிப்பருவத்திலே வளர்த்துக் கொள்வது அவசியம். ஒரு வகுப்பறையில் ஆசிரியருக்கும் மாணவருக்கும், மாணவருக்கும் மாணவருக்கும் இடையிலான உரையாடல் பலம் பெற்றதாக இருக்க வேண்டுமாயின் வன்முறை உளத்தாக் கத்திலிருந்து வரும் மாணவரை புது அறிவு தேட வழிகாட்டுவதும், அவற்றை மற்றைய மாணவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கும் சந்தர்ப்பம் வழங்குவதும் ஆசிரியர் கடமையேயாகும். தத்தம் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளும் போது ஆக்கத்திறன், ஆய்வு வேலை, ஞாபகம், சிந்தனை, புதிய கண்டுபிடிப்புக்கள் போன்ற அனுபவத்தைப் பெற்றுக் கொள்வார்கள்.


நன்மை பயக்கும் உரையாடலை சிறு பாராயத்திலிருந்தே வளர்த்து வருவோமானால் சமூகத்தின் நற்குடி மக்களாக, சமூகப் பண்புகளைப் பெற்றவர்களாக செயற்பட முடியும். இல்லையேல் சமூக சீர்கேடுகளை வளர்க்கும் அத்திவாரமாக அமையும்.

**பா.றுஜினா.**

தரணியில் தாரத்தைவிட மேலானது ஒன்றுண்டு, அதுதான், தாய். - லியப்போல்ட்ஷெஃப்பர்

# இலக்கியப் பகிர்வு

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக இயங்கி வரும் ஒரு இலக்கிய அமைப்பு நான்கு வருட செயற்பாட்டின் பின்னர் அந்த




வட்டமானது "மாருதம்" என்னும் கலை இலக்கிய சஞ்சிகையினை 2002ல் சித்திரையில் முதன் முதலாக வெளியிட்டது. கடந்த ஐப்பசி 2003ல் அதன் நான்காவது இதழ் வெளியானது. ஐந்தாவது இதழ் இன்னும் சில வாரங்களில் (?) வெளியாகலாம். என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"தமிழகத்திலும், ஈழத்திலும் தரமான இலக்கிய சிறு சஞ்சிகைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. சில காலத்தால் எதிர்கொள்ள முடியாமல் தூங்கிவிடுகின்றன. மாருதம் மெல்லெனப்பாயும் தண்ணிபோல கல்லையும் அரித்துச் செல்லும்,"


"வவுனியாவில் வாழும் கலை இலக்கிய நெஞ்சங்களின் படைப்புகளுக்கு களம்கொடுப்பது இதன் முதற் பணி. எனவே இளைய தலைமுறையினருக்கு பிரத்தியேகமாக விடுக்கப்படும் வேண்டுகோள் இது. வாருங்கள், வந்து இணையுங்கள் இலக்கிய வாசிப்பின் ஊடாக சமூகப் பிரக்ஞைபெற்று செயல் தளத்துக்கு நடை பயிலுங்கள், வாழ்வு ஒரு இனிமையான அனுபவம் ஆக இருக்கும்."

என்ற கருத்தாக்கத்துடன் மாருதத்தின் முதலாவது இதழ் வெளியானது. நான்கு இதழ்கள் வெளியாகிய நிலையில் வவுனியாவில் வாழும் கலை இலக்கிய அன்பர்கள் இளம்படைப்பாளிகள் எவ்வளவு தூரம் இந்தக் களத்தினைப் பயன்படுத்தியுள்ளார்கள் என்பது ஆய்வுக்குரிய விடயம்.

இதற்கு யார் பொறுப்பு என்பதும் அடுத்தகேள்வியே. இளைய தலைமுறையினரும் இலக்கியப் படைப்பாளிகளும் தங்கள் வீட்டுக்கதவுகளைத் தட்டும் இது போன்ற இலக்கிய முயற்சிகளில் அக்கறை அற்று இருப்பது கவலைக்குரிய விடயம். படைப்பாளிகள் பலர் பங்காளிகளாக மாறாத போது இது போன்ற வெளியீட்டு முயற்சிகள் அர்த்தம் இழந்து போகின்றன.

இதன் காரணமாக ஆக்க இலக்கியங்களுக்கு புறம்பான பல விடயங்கள் இதுபோன்ற சஞ்சிகைகளில் சேர்க்கப்படும் ஆபத்தும் உண்டு.

இத்தகைய பின்தளத்திலேயே மாருதம் சஞ்சிகையினைப் பார்க்க வேண்டியுள்ளது. இதன்காரணமாக




சஞ்சிகைகளில் தோன்றும் ஏற்றத் தாழ்வுகளுக்கு வெளியீட்டாளர்களையோ ஆசிரியர்களையோ பலிக்கடாக்களாக ஆக்கமுடியாதுள்ளது.

நான்காவது இதழில் வவுனியா தேசிய கல்வியற்கல்லூரி மாணவர்களின் ஆக்கங்கள் பல சேர்க்கப்பட்டுள்ள காரணத்தால் கல்லூரி மலர் போன்ற ஒரு தோற்றத்தினையும் இது வெளிப்படுத்துகின்றது.

எனினும் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அவர்கள் தொடர்பான ஒரு கட்டுரையும், டென்மார்க்கில் வெளியான கே.எஸ்.துரை அவர்களின் சுயம்வரம், ஒரு பூ என்பன தொடர்பான முல்லைமணி அவர்களின் மதிப்பீடும் இருக்கின்ற அளவுக்கு க.ஜெயச்சந்திரன் அவர்களின் கட்டுரை அமையவில்லை.

இருபதாம் நூற்றாண்டு ஈழத் துத் தமிழ் கவிதையும் அது தமிழில் ஏற்படுத்திய தாக்கமும் என்ற தலைப்பிலான கட்டுரை ஒரு முக்கியமான பரப்பினைக் கொண்டது. விரிவான பார்வையும் பூரண தகவல்களையும் கொண்டதாக அமைய வேண்டும்.

என்ன காரணமோ தெரியவில்லை அதற்குரிய சகல ஏற்பாடுகளையும் செய்த கட்டுரையாளர் விரிவாக தன் பணியைச் செய்யவில்லை. ஒரு தனி நூலாக வரவேண்டிய இந்த விடயம் விரிவாக வெளிவந்திருந் தால் பெரிதும் உபயோகமாக இருக்கும். திரு.க.ஜெயச்சந்திரன் அவர்கள் இது தொடர் பாகக் கவனிக்க வேண்டும்.

சங்கரசெல்லி அவர்கள் தொகுத்த இலக்கியக் குறிப்புகள் உபயோகமானவை.

"கூத்துக்களின் செறிவான அம்சங்களைப் பயன்படுத்தி ஈழத் தமிழரின் கலை அடையாளத்தை வெளிப்படுத்த ஒரு தேசிய அரங்கை நிர்மானிப்பது அவசிய மாகும். அதுவே எமது அரசியல் உரிமையின் பாலமாகவும் இருக்கும் என கூறப்படும் கருத்து கவனத்திற்குரியது.

இந்த இதழில் உள்ள கவிதைகளும், சிறுகதைகளும் கல்வியற்கல்லூரி மாணவர்களுக்கு உரியது. ஓரளவு அனுபவம் உள்ள படைப்பாளிகளின் படைப்புக்களே சமகால இலக்கியச் சூழ்நிலையில் இவர்களின் ஆரம்ப முயற்சிகள் பாராட்டுக்குரியன. இவர்கள் இன்னும் பல தடை தாண்ட வேண்டும்.

தொடர் வாசிப்புக்கள் ஊடாக இவர்கள் புதிய எல்லைகளைத் தொடவேண்டும். அதற்கு இந்த ஆரம்ப முயற்சிகள் ஆதரவாக அமைகின்றன.

**இணுவையூர்**
**சிதம்பரதிருச்செந்திநாதன்**

## லெப்.கேணல் நீலனுக்கு அஞ்சலியாய்...

### அமெரிக்க உள்நாட்டுப் போர்க்கால கவிதை ஒன்று...



எதிரியை எதிர்கொள்வது
என் கடமை
நான் பயிற்சி பெற்றதும்
அதற்கே.
எங்கள் உறுதியில் வீரத்தில்
போர் முனைப்பில்
தாழ்ந்து கொள்கிறது
எதிரி தலை.
நீண்ட நகர்வின் களைப்பும்
கார சாரமற்ற உணவும்
சீர்ற்ற இடைவெளியில்
வருகிற சீருடையுமென
கடினமாய் பகுதிகள்
போராட்ட வாழ்வதிலே
நிறையவே உண்டெனினும்
அதைவிடக் கடினமாய்
ஒரு பகுதியும் உண்டு.

இனியவளிடமிருந்து
பிரிதல் -
அது
முதல்தரமாயிருக்கலாம்
ஐம்பதாவதைத் தாண்டலாம்
அதுவே
கடைசி முறையாகி விடுமோ
என்பது
நெஞ்சைப் பிழியும்.
வலிந்து எழும் புன்னகைகள்
அதனோடிணைந்த அரவணைப்புகள்
மத்தியிலும்
பெண்களின் மனதை
நிதர்சனம் வாட்டும்.
என் பணியின் இடறும்
எதிரி காத்திருப்பதுவும்
எப்பவும்
மனதை உறுத்தும்.

அனைத்தையும் மீறி
எங்களை மீறிய துணிவுடன்
கடமைக்கு விரைகிறோம்
எனினும்
மீண்டும் வருவேன்
என்கிற வாக்குறுதியோ
நிறைவேற்ற முடியா
ஒன்றாய்
ஆகியும் விடலாம்.

தமிழில்:- **வின்சென்ற் புளோறன்ஸ்.**




## தேயிலைத் தோட்டத்திலே

புழுதிப் படுக்கையில்
புதைந்த என்மக்களை
போற்றும் இரங்கற்
புகழ் மொழி இல்லை
பழுதிலா அவர்க்கோர்
கல்லறை இல்லை
பிரிந்தவர் நினைவு நாள்
பகருவாரில்லை.........

சி.வி.வேலுப்பிள்ளை

## ஒரு இனத்தின் வரலாறு

மலையப்பன் மலையகத்தின்
இருள்மண்டிய காடுகளை அழித்தான்
அவன் மைந்தன் இருளாண்டி
தேயிலைச் செடிகளை நட்டான்
அவன் தங்கை வேலாயி
அதில் கொழுந்துகளைப் பறித்தாள்
அனைவருமே
தேயிலைச் செடிக்கு உரமாக....
அவள் பேரன் செங்கோடன்
நாடற்றவர் வரிசையில்
நாடு கடத்தப்பட்டான்

மௌரியன்.

## ஒரு மகாகவியின் வாழ்வில்

ஹோட்டல் சாப்பாடு சாப்பிட மாட்டார். கையில் நாலுகாசு இருந்தால் வாழைப்பழம் வாங்கி எல்லோரும் பசியாறுவது வழக்கம். பால்காரன் கடனாகப் பால்விடுவான். அந்தப்பாலை மட்டும் குடித்துவிட்டு சும்மா இருப்போம். இப்படியும் சில நாட்கள் கழியும். அரிசி இல்லையென்று சொன்னால் - அகரம் சிகரம் என்று சொல் என்பார் இல்லை என்ற சொல்லை உலகில் இல்லை என்று வைப்பேன். என்ற வாக்கு அவரது புண்பட்ட மனதைக் காட்டுவதாக இருக்கும்.

இப்படி பாரதியைப் பற்றி கூறியவர் அவரது மனைவி செல்லம்மாள் பாரதியேதான்.........

## எண்ணாதிருப்பவர் எவரோ

சிறிய இருபதுபேர் செல்கின்ற வானொன்றில் அறுபது பேரைச் செருகி அடைத்து அவர் முதுகு முறியும்படியாய் 'வசதிகள' செய்யினும் மூச்சுவிடாப் பொறுமை மிகுந்த தமிழினம்போற் பிறிது எங்குண்டு?

இருக்குமிடத்தில் எதிர்வீட்டில் கடைகளில் வண்டில்களில் தெருவில் திரும்பும் இடங்களில் நாலா திசையிருந்தும் பெரிதாய் எழுந்தெம் காதைக் குடைகின்ற பாட்டொலிக்கு ஒரு மறுப்பும் சொல்ல எண்ணாதிருப்பவர் வேறு எவர்?

சிறுவைச் சித்தர்.

## வைத்தியன்

நோய் அகோரமாக இருக்கும் போது...
அவர் தெய்வம்.
அதற்கு மருத்துவம் செய்யும் போது...
தேவதூதன்...
அதற்கான தொகையைக் கேட்கும் போது...
பேய்...

பொறுக்கி.

நல்லோராய் உண்மையாகவே இருப்போர் மட்டுமே, உண்மையில், உயர்ந்தோர் எனத் தக்கவர். - ஜார்ஜ் சேப்மேன்

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடிவுகளாகவே அமைகின்றன. அவர்கள் அறிவுக்கு அப்பாற்பட்ட அதாவது பகுத்தறிவிற்குப் பொருத்தப் பாடில்லாதவற்றை நம்பிக் கொள்வதற்கு விவேகக் குறைவே காரணமாகக் கொள்ளப்படுகின்றது.

இந்த இடத்தில் "கம்லின்" என்பவரது கருத்தினை நோக்குவதும் முக்கியமானதாகும். இவர் அறிவிக்கு மிடத்தில் நம்பிக்கையும் இருப்பதோடு ஒன்றை நாம் நம்பும் போது அந்த நம்பிக்கையில் அறிவும் இடம் பெற்று விடுகின்றது என்கின்றார்.

ஒரு அறிவு பொய்யானது அல்லது பிழையானது என நிரூபிக் கப்படாத வரை அது அறிவாகிறது. இதே போல் நம்பிக்கையும் நிரூபிக் கப்படாத வரை நம்பிக்கை ஆகின் றது. சில நம்பிக்கைகள் எமக்கு முன்னரே வலிதானவை அல்ல என்பது தெரிந்து கொள்ளமுடிகின்றது.

உதாரணத்திற்கு மூடநம் பிக்கைகளை எடுத்துக் கொண்டால் இவை அனுபவத்திற்கு பொருந்தா தவை எனத் தெரிந்து கொண்டும் பிரயோகத்தில் காணப்படுகின்றன. ஆனால் சில அறிவுக்குச் சமமாக ஏற்றுக் கொள்ளப்படும் நம்பிக்கை களும் காணப்படுகின்றன. (உ-ம் ஒழுக்கவியல்).

இத்தகைய நம்பிக்கைகள் காணப்படுகின்ற சில சந்தர்ப்பங்களில் இவை அறிவிலும் மேலானதாகவும், இதனூடாக அறிதலும் நம்புதல் மேலானதாகவும் அமையக் காரண மாக அமைகின்றன. இதற்கு சிறந்த எடுத்துக் காட்டாக கடவுள் பற்றிய நம்பிக்கையினைக் கூறமுடியும்.

நம்பிக்கை அறிவு ஆகிய இவை இரண்டையும் தற்கால அறிவாராட்சியாளர்கள் வேறுபடுத்தி ஒப்பீட்டு ரீதியாக தர்க்கிக்க விரும்பவில்லை என்பதே உண்மை யாகும். ஏன் எனில் அறிவு எவ்வாறு புறவயமான ஆதாரங்களோடு, நிறுவுதல்களோடு சம்பந்தப்பட்டுள் ளதோ அவ்வாறே நம்பிக்கையும் அகவயப்பட்ட சம்பவங்களோடு சம்பந் தப்பட்டிருப்பதை உணர்ந்துள்ளனர்.

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

எந்தவொரு சலுகைகளுக் கும் மயங்கிவிடாது தம் அடிப்படை வாழ்வை இழந்த தன்மானமுள்ள வர்கள் இவர்கள். எதிரியின் சூழ்ச்சி கரமான வலைக்குள் வீழ்ந்துவிடாது கொடூரமான சித்திரவதைகளுக் குள்ளாகிய மனப்பலமுள்ளவர்கள் எனத் தமிழர்களின் வரலாறு நீண்டது.

இத்தகைய தனித்துவமான தமிழர்களிடத்திலும் எட்டப்பர்களின் ஆளுமை இருப்பதே சாபக்கேடாகும்.

அதுவும் எதிரி தமிழரின் மனித வளத்தையே பயன்படுத்தி தமி ழரின் தேசியப் பலத்தைப் பலவீனப் படுத்த முயல்வதே இன்னும்சோகமானது.

இதுவரை காலமும் சிங்கள இன வாதம் பலியெடுத்த தமிழர் களது, மனித இழப்பு, விடுதலைப் போரில் களமாடிய இளம் வீரர்களது மனிதவள இழப்பு என தமிழ் இனத் தின் இழப்பு ஓர் இலட்சத்தைத் தாண்டியுள்ளது.

இப்பெருந்தொகையான மனிதவள இழப்பீட்டை நிவர்த்தி செய்வதாயின் இன்னும் 25 ஆண்டு கள் தேவைப்படும் என்பது மனிதவள ஆய்வாளர்களது கணிப்பீடு.

இச் சோகமான நிலையில் இனிமேலும் எதிரியின் சூழ்ச்சி வலைக்குள் வீழ்ந்து உரிமைப்போரை காட்டிக் கொடுக்க முனையும்போது தாமதங்கள் ஏற்படவே செய்யும். அது நெருக்கடிக்குள்ளாகவும் நேரிடும். அதனால் தமிழர்களின் மனிதவளம் இன்னும் பாதிப்பிற்குள்ளாகவே செய் யும். தேசத்துரோகம் இழைத்த தமிழ் ஒற்றர்களைத் தமிழீழதேசம் ஒரு போதும் மன்னித்ததும் இல்லை. மன் னிக்கப்போவதும் இல்லை. அத்துரோ கிகளும் தம்முயிரை இழக்கவே நேரி டுகிறது. ஒட்டுமொத்தமாக தமிழரின் மனிதவளம் அழிவின் விளிம்பிற்கு இட்டுச் செல்வதே சிங்களப்புலனாய் வாளர்களின் நோக்கம்.

இத் தளத்தில் நின்று கொண்டே சிறிலங்காப் புலனாய்வு, பிராந்தியப் புலனாய்வு, சர்வதேசப் புலனாய்வு நிறுவனங்கள் செய லாற்றி வருகின்றன. இவைகள் தமி ழ்ச் சமுதாயத்தின் சகலதுறை களிற் குள்ளும் தகவல் வழங்குனர்களின் வலையமைப்புப் பணிகளை விரிவாக் கஞ் செய்து கொள்கின்றன.

இவ்வலையமைப்பில் தமி ழரின் அறிவுப்பலமுள்ள தகவல் வழங்குனர்களை இணைத்துக் கொள் கின்றனர்.

தமிழரின் அறிவுப்பலம் மிக வும் சக்தி வாய்ந்தது. அச்சக்தியை, அப் பலத்தை தமிழ் அன்னையை கேவ லப்படுத்தவும், அடிமையாக்கவும் கொன்றொழிக்கவும் முனையும் எதிரிப் புலனாய்வு சக்திகளுக்கு விலை போக இடங்கொடுக்கலாகாது.

தமிழரின் மனிதவளத்தை யும் புலமைத் தளத்தையும் தமிழரின் அழிவுக்குப் பயன்படுத்தும் சோகமான வரலாற்றை மாற்றியமைக்க வேண்டும்.

எத்தகையவளம், பலமிக்க புலனாய்வு நிறுவனங்களது சவால் களை எதிர்கொள்ளத்தக்க பேரெழுச் சிமிக்க தமிழ்தேசியப்பலம் தாயகத்தி டம் உள்ளது.

புத்திஜீவிகள் தொடக்கம் சாதாரண பாமரமக்கள் வரை அனை வரும் தமிழரின் புலனாய்வுப்போரில் பங்கெடுக்கவேண்டும்.

எதிரியின் வஞ்சகக் குரல் களுக்கு வசப்பட்டுப்போகாமலும் எதிரியின் நயவஞ்சக விஷம் பொருந் திய கரங்கள் தாயகத்தின் மீது படாத வாறும் பார்த்துக்கொள்ளவேண்டும். தமிழீழ பாதுகாப்பிற்கு நாம் என்ன மாதிரி தொண்டாற்றலாம் என்பதை தமிழர்களாகிய நாம் ஒவ்வொருவரும் மனத்திலே எண்ணுதல் வேண்டும். சுயநலத்தை முதன்மையாக்கி வாழும் சிந்தனைத் தளத்திலிருந்து சற்று விலகி நின்று தமிழரின் விடு தலைப்போருக்கு வலுச்சேர்க்கத் தக்க வகையில்பாடுபடவேண்டும். அத்துடன் நாம் புலனாய்வு விழிப்பு ணர்வு பெற்ற சமூகமாகமாறி தாய கத்தின் பாதுகாப்பிற்கான சக்தியாக இயங்குதல் வேண்டும்.


## முல்லை மாவட்ட நுண்கலைக் கல்லூரிகளின் சித்திரை மாத அறிவோர் கூடல்கள்

*24-04-2004- சனி-மாலை- 4.30 முள்ளியவளை நுண்கலைக் கல்லூரி.*
*தலைப்பு:-"சிறுவர் கல்வியில் கலைத்துவ வெளிப்பாடுகளின் பங்கு"*
*நிகழ்த்துபவர்-திரு.அருணாசலம் அவர்கள் (ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் முல்லை வலயம்)*
*26.04.2004. திங்கள்-மாலை 4.30 புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி.*
*தலைப்பு:-"யோகாசனமும், உடல் மன ஆரோக்கியத்திற்கு அதன் அவசியமும்"*

*நிகழ்த்துபவர் :- பேராசான் - திரு.இரத்தினசோதி அவர்கள் (தலைவர் -தற்காப்புக்கலைப்பரிவு நுண்கலைக்கல்லூரிகள்)*
*ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து பயன்பெற அழைக் கிறோம்.*

*தமிழீழ நுண்கலைக் கல்லூரியினர்.*
(4453)



## காணி விற்பனைக்குண்டு

சங்கரத்தை துனைவிச்சந்தியில் 4கடை அத்திவாரம், கிணற்றுடன் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு

T.P. 077-6108762

(4446)


(9ஆம் பக்கத் தொடர்ச்சி)


வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி ஏமாற்றும் முகவர் களை நம்பி நடுத்தெருவில் நிற்கும் பெண்களின் கதைகள் வெளிவரு கின்றன. காதலித்து ஏமாற்றப்படும் பெண்கள் இருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க் கும் பொழுது பெண்களின் உலகம் இன்னமும் முற்றாக அறியா மையிலிருந்து இன்னமும் முற்றாக விடுபட வில்லை என்றே கூறமுடி கிறது. குடும்பம் பல பெண்களுக்கு சுமையாக அழுத்துகிறது. 'யாராவது என் பாரத்திற் பாதியைச் சுமக்க முன் வரமாட்டார்களா?' என்று ஏங்கும் பெண்கள் பலர் இருக்கிறார்கள். பொருளாதார ரீதியாக சுரண்டப்படும் பெண்கள் இருக்கின்றார்கள்.

பெண்கள் தம்மனவுலக இருளில் இருந்து வெளிவரவேண்டும். ஒளிமயமான எதிர்காலத்தை சிந்திக்க வேண்டும். 'நன்மையும் தீமையும் பிறர்தர வாரா' என்று முன்னோர்கள் கூறியுள் ளார்கள். எமது வாழ்வும் வலுவும் எமது கரங்களிலேயே தங்கியிருக்கின்றது. ஆரோக்கியமான சமூகத்தை - தேசத்தைக் கட்டி எழுப்பவேண்டுமென்றால் பெண்கள் அகவிடுதலை அடையவேண்டும். பெண்கள் பற்றி சமூகத்தில் நிலவு கின்ற பிற்போக்குத்தனமான கருத் துக்கள் களைந்தெறியப் பட வேண் டும். பெண்களின் ஆற்றல்களும், ஆளுமைகளும் வெளிக் கொண்டு வரப்படவேண்டும் தம்மீது ஆழப்புரை யோடி நிற்கும் சமூக கொடுமையும் அநீதியுமான ஒடுக்குமுறையைப் பெண்கள் உடைத்தெறியவேண்டும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -65

நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.



## படத்திற்கு மெருகூட்டுங்கள் -65

..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -64



க.அகிலேஸ்வரன்,
மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

### பரிசுக்குரிய வரிகள்

*செம்மணியில் தந்தையை இழந்தாய்- சிங்க*
*அம்மணியின் விமானப்படையால் தாய்*
*சகோதர அன்பு ஆதரவிழந்தாய்- எனினும்*
*தளராது உன் மனம் நீ வீரத்தலைவன் காலத்து வேங்கையாச்சே.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*தாய்கையால் தண்ணீர் ஊற்றவேண்டிய வயதில்*
*தன் கையால் தண்ணீர் ஊற்றுகின்றான், இப் பிஞ்சு*
*என்ன பிழை செய்தது பேரின வாதமே*
*ஏன் இவன் உறவை அழித்தாய்?*

க.கலைமாறன்,
கிளிநொச்சி.

*பிஞ்சு வயதிலே உன் உறவுகளை*
*இழந்து ஏன் சோகத்தில் வாடுகிறாய்*
*கவலைப்படாதே உறவே உன்*
*சோகத்தை தீர்க்க எம் தானைத் தலைவர் இருக்கிறார்*

து.சோபா,
இல.28,கணேசபுரம்-கிளி.

*மாறிமாறி ஆட்சி ஏறுபவர்களின் யுத்தவினையால்*
*உறவை இழந்த உன்னைப்போல் எத்தனையோ*
*உறவுகள். கலங்காதே எம் தலைவன்*
*காலத்தில் உன்வாழ்வு சிறக்க தமிழீழம் மலரும்.*

க.கலைமாறன்,
தமிழீழம்.

*குந்தியிருந்து குவளையில் நீர் மொண்டு*
*உச்சி குளிரப் பாசமுடன் நீராட்டும்*
*ஆச்சி கூட இல்லாத கவலையுடன்*
*தன்கையே தனக்குத்துணையாகுமெனத் துணிந்தனையோ.*

மாலியவான்,
05.ஜெயந்திநகர்-கிளி.

*பையனே! பாசத்தில் மலர்ந்த உன்னை*
*பரிதவிக்கவைத்த -அந்த*
*பகைவனை அழிக்க*
*பாவம் உன் பிஞ்சு வயதிலே முடிவெடுத்தாயோ?*

ஒளிநிலா,
புதுக்குடியிருப்பு.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகயம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.



மீண்டும் வன்னியில் புதுப்பொலிவுடன்

# குமரகுரு



உங்கள்
இன்றைய
தெரிவுக்கு



புடைவை அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

**குமரகுரு** புடைவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி

**KUMARAKURU**

*Textile & Fancy House*

Yarl Road, Kilinochchi.

(சி-9531)

SM Graphics

---

வன்னி மண்ணில்...

# அழகன் பதிப்பகம்

யாழ்சாலை, கிளிநொச்சி.

உங்கள்
அச்சு வேலைகள்
எதுவாகினும் நிறைவேற்ற
அழைக்கின்றது.

---



கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர்
இல190A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில்
இயங்கி வந்த
மைதிலி நகைமாடம்
தற்போது புதுப்பொலிவுடன்
இல89, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில்
இயங்குகின்றது என்பதை எமது
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் அன்புடன்
அறியத்தருகின்றோம்.



- அசல் 22கரட் தங்க நகைகள்
- மங்கையர் மனம் கவரும் புதிய வடிவங்கள்
- சிறியோர் முதல் பெரியோர் வரை யாவரும் விரும்பி அணியும்
தங்க ஆபரணங்களை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# மைதிலி நகைமாடம்

இல-89, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

☎ 021-222 7772

☎ 021-222 5511

**மைதிலி நகைமாடத்தினரின் பணிசிறக்க வாழ்த்துகின்றோம்.**

**நியூ நகுலா ஜுவல்லர்ஸ்**
இல:74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222 5511

(சி-9535)

**சிறி மதனா நகைமாளிகை**
இல:155/M, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222 7772
0777-300185

---




# EXPOAIR

*your friend in the skies*

எக்ஸ்போ எயார்





யாழ்-கொழும்பு பயணத்தின் போது
ரோல்ஸ் ரோய்ஸ் இயந்திரத்தின்
சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்.

ஒதுக்கீடுகளுக்கு
அழையுங்கள்

021-2223891/6297, 0772348888/2349999,
0114512666, 0112360290/291.

e-mail- jaffna@expoavi.com
e-mail- reservations@expoavi.com

இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை



...கை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 23 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.